
වාර්ෂික වාර්තාව

வருடாந்திர அறிக்கை

ANNUAL REPORT

2020







ශ්‍රී ලංකා පරමාණුක බලශක්ති මණ්ඩලය

ஶ்ரீலங்கா ஆட்டோமிக் எனர்ஜி போர்டு

SRI LANKA ATOMIC ENERGY BOARD

உள்ளடக்க

பக்க இல.

1. தலைவரின் ஆய்வுரை **5-11**

2. பணிப்பாளர் நாயகத்தின் செய்தி **12**

3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வுகள் 2020 **13-29**

4. அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்

4.1 இலங்கை கமா நிலையம் – கமா கதிர்வீச்சு சேவைகள் **30**

4.2 வாழ்க்கை விஞ்ஞான பிரிவு – அணுப் பகுப்பாய்வு பரிசோதனை சேவைகள் **31-37**

4.3 அழிவு எதிர்ப்பு சோதனைக்கான தேசிய நிலையம் - என்டிரீ சேவைகள் **38-43**

4.4 பொது விஞ்ஞானவியல் பிரிவு **44-48**

4.5 கைத்தொழில் துறை பயன்பாடுகள் பிரிவு - சு ரூ னு செயற்பாடுகள் **49-54**

5. சர்வதேச ஒத்துழைப்பு பிரிவு **55-62**

5.1 ஐஏஈஏ மற்றும் ஏனைய தொடர்புபட்ட சர்வதேச அமைப்புக்கள் ஊடான ரீசி

5.3 அறிவை பரவச்செய்தல்

5.3 அணு மின்வலு திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டம்

6. நிர்வாக செயற்பாடுகள் **63-73**

6.1 பதவியணி நிர்வாகம், மனித வளம் ரூ பெறுகை பிரிவு

6.2 எஸ்எல்ஏஈபீ இன் மொத்த பதவியணி தகவல்கள் 2020

6.3 பதவியணி ஆட்சேர்ப்பு பட்டியல் - 2020

6.4 பதவியணி ஓய்வுபெறல் பட்டியல் - 2020

7. *நிதிநிலை அறிக்கை* – 2020 **74-115**

8. *ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை* – 2020 **116-129**

9. 2020 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை அணு சக்தி சபையின் நிதி கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 இன் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பித்த அறிக்கைக்கு சபையின் முகாமைத்துவம் வழங்கும் பதில்களும் மற்றும் **130-137**

எங்களை பற்றி

இலங்கை அணுசக்தி சபை (எஸ்எல்ஏஈபீ) இலங்கையிலுள்ள அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் அமைதியான பிரயோகங்களை மேம்படுத்துகின்ற அரசாங்க நிறுவனமொன்றாகும். இது தேவையான உட்கட்டமைப்புக்களை ஸ்தாபிக்கின்றதுடன் நாட்டில் தற்போதுள்ள வசதிகளை பேணுகின்றது. அத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எஸ்எல்ஏஈபீ நாட்டிற்கு பல்வேறு வகையான சேவைகளை வழங்குகின்றது. மேலும் அயனாக்கல் கதிர்வீச்சிற்கான தேவையற்ற வெளிப்பாடுகளிற்கு எதிராக பொதுமக்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாத்தல் எஸ்எல்ஏஈபீ ஆல் மேற்கொள்ளப்படுகின்றது.

தூரநோக்கு

அணு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் ஊடாக தேசத்தின் நிலைபேறான வளர்ச்சி.

செயற்பணி

அணு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் அமைதியான பிரயோகங்களை மேம்படுத்தி ஊக்குவித்தல் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு அதன் நன்மைகளை பயன்படுத்துதல், அதேநேரம் ஆபத்தின்மை, பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் தேவையற்ற அயனாக்கல் கதிர்வீச்சின் வெளிப்பாட்டிலிருந்து பணியாளர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க வசதியளிப்பதற்காக கதிர்வீச்சு பாதுகாப்பு சேவைகளை வழங்குதல்.

எங்களது கொள்கைகளும் முக்கிய மதிப்புக்களும்

எஸ்எல்ஏஈபீ இன் பதவியணியினர் நாட்டின் நலனிற்காக அணுசக்தி தொழில்நுட்பங்களின் அமைதியான பிரயோகங்களின் போது தொழில்சார் மனப்பாண்மை, ஆபத்தின்மை/ பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம்சார் நடத்தை ஆகியவற்றின் உயர் தரங்களிற்கு உறுதியளித்துள்ளனர். இம்முக்கிய மதிப்புக்கள் அனைத்து நடவடிக்கைகளிலும் அடிப்படையாக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டங்களின் தந்திரோபாய பணிப்புரைகள் வழங்கப்படும் வழியை உறுதிப்படுத்துகின்றன.

- ✓ **ஆபத்தின்மை, பாதுகாப்பு மற்றும் நிலைபேறான தன்மை:** *அணு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரயோகங்களின் போது ஆபத்தின்மை, பாதுகாப்பு மற்றும் சுற்றாடலை உறுதிப்படுத்துதல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்;*

- ✓ **நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு:** *ஆக்கபூர்வமான தொடர்பாடல் ஊடாக ஏனைய அனைத்து அக்கறையுடையோருடனும் நிறுவனத்தினுள் நம்பிக்கையையும் மரியாதையையும் கட்டியெழுப்புதல்;*

- ✓ **ஒத்துழைப்பு மற்றும் பொறுப்புணர்வு:** *அக்கறையுடையோரின் தேவைகளை புரிந்துகொள்ளுதல், ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டுவேலையை துரிதப்படுத்துதல், புதிய யோசனைகளை அமுல்ப்படுத்துதல் மற்றும் புதிய போக்குகளை இனங்காணுதல்;*

- ✓ **திறமை மற்றும் நிபுணத்துவம்:** *எமது அக்கறையுடையோரிற்கான நிபுணத்துவ தரங்களை மேம்படுத்தி வழங்குவதற்கு முயற்சித்தல்.*

எஸ்எல்ஏஈபீயின் சபை

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட சபையால் எஸ்எல்ஏஈபீ முகாமை செய்யப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டிற்கான சபை உறுப்பினர்கள் பின்வருமாறு:

பெயர்	பதவி	தொழில்/ பதவிநிலை
பேராசிரியர் எஸ்.ஆர்.டி ரோசா	தலைவர்	கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் துறை பேராசிரியர்.
டாக்டர் டபிள்யூ. மீகொட	சபை உறுப்பினர்	அணு மருத்துவம் மற்றும் கதிரியக்கத்தில் ஆலோசனை கதிரியக்க நிபுணர், சுகாதார அமைச்சு.
டாக்டர் ஜெயசிங்கம் ஜெயசுஜித்தன்	சபை உறுப்பினர்	கொழும்பு பல்கலைக்கழகத்தின் அணு விஞ்ஞானத் துறையின் மருத்துவ பௌதீகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்.
டாக்டர் சுனில் கமகே	சபை உறுப்பினர்	• ஜப்பானில் உள்ள முன்னாள் கௌரவ. இலங்கைக்கான தலைமை துணைத்தூதுவர். • 2014 முதல் சர்வதேச உறவுகள் தொடர்பாக ஜப்பானில் உள்ள ஹொக்கைடோ பங்கியோ பல்கலைக்கழகத்தில் வருகை தரும் பேராசிரியர் (கௌரவ கலாநிதி) • 2013 முதல் ஜப்பான் இலங்கை வர்த்தக மற்றும் பொருளாதார நிலையத்தின் தலைவர் • 2015 இல் ஜப்பானிய கலாச்சாரம் மற்றும் சமூக சேவைகள் சங்கத்தின் பணிப்பாளர் • 2008 முதல் ஜப்பான் இலங்கை ஒன்றியத்தின் தலைவர் • 2007 இல் ஜப்பான் இலங்கை நட்புறவுச் சங்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் • சர்வதேச ஷோடோகன் கராத்தேக்கான (Shotokan Karate) ஆசியாவின் பணிப்பாளர் • நிப்போன் தொழில்நுட்ப ஊக்குவிப்பு கூட்டுறவு பணிப்பாளர் - தொழில்நுட்ப உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
திரு. எச்.ரீ. கமல் பத்மசிறி	சபை உறுப்பினர்	• மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் செயலாளர். • கொழும்பு மற்றும் களுத்துறையின் முன்னாள் அரசாங்க அதிபர்.. மாவட்ட செயலாளர். • இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம். • இலங்கை உள்ளூராட்சி நிறுவனம் மற்றும் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் இலங்கை கிரிக்கெட்டின் தகுதிவாய்ந்த அதிகாரி. • நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய கல்வி ஆணைக்குழு, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA) என்பவற்றின் முன்னாள் சபை உறுப்பினர் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சபை உறுப்பினர்.
திரு. அரோஷா ரொட்ரிகோ	சபை உறுப்பினர்	○ பட்டய கணக்காளர் ○ பிறைஸ்வோட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ், U.K., பட்டய கணக்காளர், கணக்காய்வு பிரிவு ○ சிட்டி பாங்க், இலங்கை, கோடைகால பயிற்சி, கூட்டுத்தாபன வங்கி பிரிவு ○ LB பினான்ஸ் லிமிட்டட், இலங்கை, கோடைகால பயிற்சி, குத்தகை பிரிவு ○ இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனம், பணிப்பாளர் ○ இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (உறுப்பினர்) ○ தேசிய உணவு ஊக்குவிப்பு சபை, பணிப்பாளர்
திரு. கே.டி. சுனந்தலால்	சபை உறுப்பினர்	ஆலோசனையாளர், மூலோபாய நிறுவன முகாமைத்துவ முகவராண்மை
திரு. கே.எல்.ஆர்.சீ. விஜேசிங்க	அவதானிப்பாளர்	பணிப்பாளர் - திட்டமிடல், மின்சக்தி அமைச்சு

சிரேஷ்ட முகாமைத்துவம்

பெயர்	தொழில்நிலை	தகைமை
திரு. ரீ.எம்.ஆர். தென்னக்கோன்	பணிப்பாளர் நாயகம்	பீ.எஸ்சீ. (பௌதீக. சிறப்பு). கௌரவ (கொழும்பு) எம்.எஸ்சீ. (அணு விஞ். - கொழும்பு) முதுதத்துவமானி (Material Eng.- Mor.)
திருமதி. அனோமா ரத்னாயக்க	பணிப்பாளர் - இலங்கை கமா நிலையம்	பீ.எஸ்சீ. (இலங்.திறந்த.பல்க.) எம்.எஸ்சீ. (கொழும்பு)
திருமதி. சாம்பா திஸ்ஸநாயக்க	பணிப்பாளர் - வாழ்க்கை விஞ்ஞான பிரிவு	பீ.எஸ்சீ. (விவசா.)(றுகுணு) முதுதத்துவமானி (அணு விஞ்.) (கொழும்பு)
டாக்டர். விராஜ் எதிரிசிங்க	பணிப்பாளர் - கைத்தொழில் பயன்பாடுகள் பிரிவு	பீ.எஸ்சீ. (பேராதனை) எம்.எஸ்சீ. (அணு விஞ்ஞானம்) கொழும்பு பிஎச்.டி. (ஐசோடோப் நீர்வளவியல்) (பேராதனை)
திரு. பிரசாத் மஹாகுமார	பணிப்பாளர் - பொது விஞ்ஞானவியல் பிரிவு	பீ.எஸ்சீ. கௌரவ (பேராதனை) எம்.எஸ்சீ. (அணு விஞ்ஞானம்) கொழும்பு
திரு. எச்.எம்.என்.ஆர். பண்டார	பணிப்பாளர் – சர்வதேச ரீதியான பயிர் பிரிவு	பீ.எஸ்சீ. (சிறப்பு) இலங்.பல்க. எம்.பி.எம்.(எஸ்எல்ஐடிஏ)
திருமதி. மானெல் சந்திரசேகர	பணிப்பாளர் – நிர்வாக பிரிவு	பீ.எஸ்சீ. (சிறப்பு) கொழும்பு எம்.பி.எம்.(எஸ்எல்ஐடிஏ) எம்பிஏ (பிஐஎம்) ஸ்ரீ ஜெயவ. பல்க.
திரு. டி. அசரப்பெரும	பணிப்பாளர் – நிதி பிரிவு	எம்பீஏ (அவுஸ்), ஏசீஎம்ஏ (ஐ.இ), சீஜீஎம்ஏ (ஐ.அ), டிபீஎவ்ஏ (ஐசீஏஎஸ்எல்)

1.0 தலைவரின் ஆய்வுரை



2020ஆம் ஆண்டிற்கான இலங்கை அணுசக்தி சபையின் (எஸ்எல்ஏஈபீ) முதலாவது நிதிக்கூற்றுக்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் முன்வைக்கின்றோம்.

2020 ஆம் ஆண்டின் போதான எஸ்எல்ஏஈபீ இன் பிரதேச நடவடிக்கைகள் மற்றும் நிதி சிறப்பம்சங்கள் பின்வருமாறு அறிக்கையிடப்பட்டுள்ளன.

1.1 பொது விஞ்ஞானவியல் சேவைகள் பிரிவு (ஜீஎஸ்டி)

பொதுமக்கள், சுற்றாடல் மற்றும் கதிர்வீச்சு பணியாளர்களை பாதுகாப்பதற்கான தரமான சேவையை வழங்குவது இப் பிரிவின் பிரதான நோக்கமாகும். நாட்டில் அணுசக்தி தொழில்நுட்பத்தின் ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப சேவைகளை பூர்த்தி செய்வதற்கு கதிர்வீச்சு பாதுகாப்பு சேவைகளை இப் பிரிவு வழங்குகின்றது.

கொவிட்-19 தொற்றுநோய்களின் போதும் எந்தவொரு தாமதமும் அல்லது இடையூறும் இல்லாமல் தேவையான சேவைகளை வழங்குவதற்கு இப் பிரிவு தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. இப்பிரிவு 08 பிரிவுகளில் செயற்படுகின்றதுடன் ஒவ்வொரு பிரிவும் தொழில்நுட்ப திறன், மனித வள அபிவிருத்தி மற்றும் உரிய காலத்தில் பதிலளிப்பதன் மூலம் நிறுவன ரீதியான மற்றும் தேசிய இலக்குகளுக்கு பங்களிக்கும் வகையில் முகாமை செய்யப்படுகின்றன.

ஜீஎஸ்டியின் அணுசக்தி கருவியாக்கல் பிரிவு (என்ஐஎஸ்) பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கல்வி நோக்கங்களுக்காக வணிக அளவில் குறைந்த கிரயத்திலான கதிர்வீச்சு அளவிடும் உபகரணங்களை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இப்பிரிவு அத்தகைய உபகரணங்களின் 21 கருவித்தொகுதிகளை வட மாகாண கல்வி அமைச்சுக்கு வழங்கியது. புதிய கருவி விற்பனைகள் மூலம், இப்பிரிவு 2020 இல் ரூபா 2.5 மில்லியன் தொகையை ஈட்டியிருந்தது.

அதுமட்டுமல்லாமல், மேற்குறிப்பிட்ட செயல்விளக்கக் கருவித்தொகுதியின் அபிவிருத்திக்காக இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட "சஹசக் நிமெவும் 2020" தேசிய புத்தாக்கப் போட்டியில் இப்பிரிவு பௌதீகவியலில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.

மேலும், இப்பிரிவு இலங்கை சமூகத்திற்கு அணுசக்தி தொழில்நுட்பத்தின் நன்மைகளை பெற்றுக்கொள்வதற்காக அணுசக்தி கருவிகளை திருத்தம் செய்து பராமரிப்பதற்குத் தேவையான உதவிச் சேவைகளை வழங்குகியது. 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 26 ஆகும்.

Dosimetry அளவுத்திருத்தம் மற்றும் தனிப்பட்ட கண்காணிப்பின் தீவு முழுவதுமான சேவைகள் ISO 17025 தராதர அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடங்களுடன் வழங்கப்பட்டன. 2020 ஆம் ஆண்டில், ஆய்வுகூடங்கள் ISO/IEC 17025:2017 இன் சமீபத்திய சர்வதேச நியமங்களுடன் இணக்கமாக இருப்பதற்கு அவற்றின் தராதர அங்கீகாரங்களை மேம்படுத்தியுள்ளன. 2020 ஆம் ஆண்டிள் போது 81 கதிர்வீச்சு கண்காணிப்புக் கருவிகளுக்கு அளவுத்திருத்த சேவைகள் வழங்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, 1,950 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களை இலவசமாக அல்லது குறைந்தபட்ச கட்டணத்துடன் பாதுகாப்பதற்கு தனிப்பட்ட கண்காணிப்பு சேவைகள் வழங்கப்பட்டன. கமா மற்றும் Radon இற்கான சுற்றாடல் கதிரியக்க கண்காணிப்பு சேவைகள்

மேற்கொள்ளப்படுகின்றதுடன் பணியிட கண்காணிப்பு சேவைகள் வெற்றிகரமாக தொடரப்பட்டு வருகின்றன.
விசேட ஆலோசனை சேவையாக, தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் (NCCP) மற்றும் உலக சுகாதார நிறுவனம் (WHO) ஆகியவற்றின் அழைப்பின் பேரில், "சுகாதாரத் துறைக்கான கதிர்வீச்சு பாதுகாப்புக்கான தேசிய வழிகாட்டல்" மற்றும் "கதிர்வீச்சு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான விரிவான குறிப்பு விதிமுறைகள் (ToR)" ஆகியவற்றையும் பிரிவு உருவாக்கியுள்ளது.

குடிமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நாட்டில் அணுசக்தி பாதுகாப்பு ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக நிபுணத்துவ சேவைகளையும் இப் பிரிவு வழங்குகின்றது. நாட்டின் ஒருங்கிணைந்த அணுசக்தி பாதுகாப்புத் திட்டத்தின் (ஐஎன்எஸ்எஸ்பி) கீழ் இனங்காணப்பட்ட அணுசக்தி பாதுகாப்பு கண்டறிதல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு வழங்கப்படுகின்றது. குறிப்பாக உள்நுழைவுத் துறைமுகங்கள் (கொழும்பு துறைமுகம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்) மற்றும் முக்கிய பொது நிகழ்வுகளில் அறிவை பரவச்செய்வதன் மூலமும் இலங்கை சுங்கம், எயார்போட் ஏவியேஷன் செக்கியூரிட்டி, பொலிஸ் மற்றும் முப்படைகளிற்கு பயிற்சி மற்றும் மதியுரை சேவைகளை வழங்குவதன் மூலமுமாகும்.

தேசிய அணுசக்தி அனர்த்த ஆரம்ப எச்சரிக்கை முறைமை மற்றும் மத்திய பயன்படுத்தப்படாத கதிர்வீச்சு வளமூல சேமிப்பு வசதி என்பவற்றையும் இப்பிரிவு பேணுகின்றது. தீவு முழுவதும் இலாப நோக்கற்ற, ஆராய்ச்சி சார்ந்த சேவைகளை இப் பிரிவு வழங்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள போதிலும் இப் பிரிவு 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 16 மில்லியன் வருமானத்தை ஈட்டியிருந்தது. மேலும், ஆண்டின் போது இப்பிரிவு சுமார் ரூபா 3.8 மில்லியன் கட்டணமில்லா சேவைகளை வழங்கியிருந்தது.

1.2 அழிவு எதிர்ப்பு சோதனைக்கான தேசிய நிலையம் (என்சீஎன்டிஈ)

உலோகம் மற்றும் உலோகமற்ற உற்பத்திப்பொருட்கள், நிர்மாணங்கள், சிவில் நிர்மாணங்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை நிரந்தரமாக குறைப்பதன் மூலம் என்டிஈ மற்றும் தொடர்புபட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நாட்டில் அத்தகைய உற்பத்திப்பொருட்களின் தரத்தை முன்னேற்றுவது என்சீஎன்டிஈ இன் நோக்கமாகும். என்சீஎன்டிஈ அதன் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு அதன் நடவடிக்கைகளை பிரதானமாக 04 திசைகளில் ஆரம்பித்திருந்தது.

அவையாவன;

i. பயிற்சி: பயிற்சி கற்கைநெறிகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள், விரிவுரைகள், கைத்தொழில் பயிற்சி, வேலைவாய்ப்பு பயிற்சி போன்றன., தகைமை மற்றும் பணியாளர் சான்றளிப்பு;

ii. பரீட்சிப்பு: பரிசோதனை மற்றும் பரீட்சிப்பு சேவைகள்,

iii. ஆராய்ச்சி: கல்விசார் மற்றும் கைத்தொழில் பிரச்சனைகள் தொடர்பான நீண்டகால மற்றும் குறுங்கால ஆராய்ச்சி நடவடிக்கைகள்,

iv. அபிவிருத்தி: உற்பத்திப்பொருள்/ நுட்ப அபிவிருத்தி மற்றும் கைத்தொழில்/ உட்கட்டமைப்பு அபிவிருத்தி.

என்சீஎன்டிஈ இன் பயிற்சி பிரிவு வருடாந்தம் IAEA TECDOC 628 இன் பிரகாரம் சான்றிதழ் பயிற்சி கற்கைநெறிகளை நடாத்துகின்றது. தகைமையளிப்பு மற்றும் சான்றளிப்பு நடவடிக்கைகள் இலங்கை தராதர அங்கீகார அமைப்பால் ISO 17024 இன் பிரகாரம் தராதர அங்கீகாரம் பெற்ற என்டிஈ இற்கான சான்றளிப்பு அமைப்பால் ISO 9712 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

செயலமர்வுகள், பயிற்சி கற்கைநெறிகள், பரீட்சைகளில் பங்குபற்றி 2020 ஆம் ஆண்டில் சான்றிதழ்களை பெற்ற என்டிஈ பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 97 ஆக காணப்பட்டது.

மேலும் கைத்தொழில் துறை பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் கைத்தொழில் துறை செயற்திறனை மேம்படுத்துவதற்கும் இயந்திரங்கள் மற்றும் உலோகக் கூறுகளிலுள்ள குறைபாடுகளை கண்டறியும் பொருட்டு கைத்தொழில் துறைக்கு என்டிஈ பரீட்சிப்பு சேவைகளை என்சீஎன்டிஈ வழங்கியிருந்தது. ஒட்டுமொத்தமாக, 2020 ஆம் ஆண்டில் அரசாங்க மற்றும் தனியார் துறை கைத்தொழில்களிற்கான 211 என்டிஈ பரீட்சிப்பு சேவைகளை என்சீஎன்டிஈ வழங்கியிருந்தது.

என்சீஎன்டிரீயிடமிருந்து 2020 ஆம் ஆண்டிற்காக இலக்கிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 15 மில்லியனாக காணப்பட்டதுடன் என்சீஎன்டிரீ மேற்படி அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் (வற் மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையிடமிருந்து பெற்ற வாடகை கட்டணம் என்பவற்றை தவிர்த்து) ரூபா 14,124 மில்லியனை உழைத்திருந்தது.

மேலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் கீழ் பல்கலைக்கழகங்களிலிருந்து ஒரு சில மாணவர்கள் அவர்களது கல்விசார் பணிகள் தொடர்பான குறுங்கால ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்கு சமூகமளித்திருந்தனர்.

என்சீஎன்டிரீயானது ஆண்டு முழுவதும் ISO 9712 மற்றும் ISO 17024 இன் தேவைப்பாடுகளிற்கிணங்க அழிவு எதிர்ப்பு சோதனை பணியாளர்களின் தகைமை மற்றும் சான்றளிப்பிற்கான தராதர அங்கீகாரம் பெற்ற சான்றளிப்பு அமைப்பை (சீபீஎன்டிரீ) வெற்றிகரமாக பேணுகின்றது.

ISO/IEC 17020:2012 இன் பிரகாரம் காந்த துகள் பரிசோதனை, திரவ ஊடுருவல் பரிசோதனை, மீயொலி பரிசோதனை மற்றும் கொங்கிறீட் பரிசோதனை தொடர்பாக நான்கு என்டிரீ முறைகள்/ ஆய்வுகூடங்கள் தராதர அங்கீகாரம் பெற்றிருந்ததுடன் இத் தராதர அங்கீகாரம் பெற்ற நிலை பேணப்படுகின்றது. என்சீஎன்டிரீயின் என்டிரீ இயலளவை வலுப்படுத்துவதற்கு 2016-2019 இற்கான IAEA TC செயற்திட்டம் SRL 1009 ஆண்டு முழுவதும் வெற்றிகரமாக தொடரப்பட்டிருந்தது.

1.3 இலங்கை கமா நிலையம் (எஸ்எல்ஜீசீ)

இலங்கையில் அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரே பலநோக்கு கமா கதிர்வீச்சு வசதி கொண்ட இலங்கை கமா நிலையம் (எஸ்எல்ஜீசீ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் பியகம ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தில் இயங்குகின்றது.

இந்த கமா வசதியானது தொடர்ச்சியானது, 250 kCi கோபால்ட்-60 வளமூலத்தின் ஆரம்ப செயற்பாட்டுடன் ஏற்றப்பட்ட carrier வகை ஒன்றாகும். 2020 சனவரி 01 இல் உள்ளவாறான கோபால்ட்-60 தொடக்க செயற்பாடு 193.6 kCi ஆகும். இவ் வசதியானது அனுபவம் வாய்ந்த மற்றும் அர்ப்பணிப்புள்ள செயற்பாட்டு பதவியணியினருடன் அதன் அதிகபட்ச நலன்களை பயன்படுத்துவதற்கு 24 மணித்தியாலங்கள் இயங்குகின்றது.

கமா கதிர்வீச்சு பிரயோகிக்கக்கூடிய அனைத்து அம்சங்களிலும் கைத்தொழில்கள், தொழில்முனைவோர், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றுக்கு கதிர்வீச்சு சேவைகளை வழங்குவதன் மூலம் நாட்டிற்கு ஆகக்கூடிய நன்மைகளை வழங்குவதில் எஸ்எல்ஜீசீ கவனம் செலுத்துகின்றது. பிரதானமாக கமா கதிர்வீச்சு சேவையானது மருத்துவ தயாரிப்புகளை தொற்றுநீக்கம் செய்தல், பொதியிடும் மூலப்பொருட்களை தொற்றுநீக்கம் செய்தல், உணவு மற்றும் மருத்துவ மூலிகைகளில் நுண்ணுயிர் கிருமி நீக்கம் மற்றும் பூச்சி கட்டுப்பாடு, பைட்டோ-சுகாதார சிகிச்சைகள் (phyto-sanitary treatments), பிறழ்வு இனப்பெருக்கம், மூலப்பொருள் மாற்றம் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான மலட்டு பூச்சி நுட்பம் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

கதிர்வீச்சு நோக்கத்திற்காக எஸ்எல்ஜீசீ இற்கு வணிக கென்வேயர் (conveyor) மற்றும் துணை கென்வேயர் (மாதிரி கென்வேயர்) உள்ளன, அவை ஒன்றுக்கொன்று சுயாதீனமாக செயற்பட முடியும். வணிக கென்வேயர் பிரதானமாக வாடிக்கையாளர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, அவை ஆரம்பத்தில் உற்பத்திப்பொருள் சரிபார்ப்பு ஆய்வுகளை மேற்கொண்டு தொடர்ச்சியாக விநியோகத்தில் ஈடுபடுத்தப்படுகின்றன.

கதிரியக்கத்தின் குறிப்பிடத்தக்க அம்சமான துணை கென்வேயர், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொடர்ச்சியற்ற அல்லது சிறிய தொகுதிகளைக் கொண்ட பல்வேறு கைத்தொழில்களின் தொழிலதிபர்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நோக்கத்திற்கான மாதிரிகளின் கதிர்வீச்சுக்கு உதவுகின்றது. மேலும் மாதிரி கென்வேயர் உள்-அளவுத்திருத்த நடவடிக்கைகள் மற்றும் இடை-ஒப்பீட்டு ஆய்வுகளுக்கு அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது. வணிக அளவிலான செயற்பாடுகள் மூலம் எஸ்எல்ஜீசீ ரூபா 44,431,450.64 தொகையை உழைக்க முடிந்திருந்தது. துணை கென்வேயர் (மாதிரி கென்வேயர்) கதிர்வீச்சு ரூபா 443,878.76 வருமான தொகையை ஈட்டியிருந்தது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் மொத்த வருமானம் ரூபா 44,875,329.40 ஆகும்.

இலங்கையில் உள்ள அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிற்கும் தேவையான அறுவை சிகிச்சை கையுறைகளை தொற்றுநீக்கம் செய்வதன் மூலம் எஸ்எல்ஜீசீ கதிர்வீச்சு சேவைகளை வழங்கி வருகின்றது. இது உள்ளூர் கைத்தொழில்களை தரமுயர்த்தும் போது, தொற்றுநீக்கப்பட்ட

கையுறைகளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான கணிசமானளவு அந்நிய செலாவணியை சேமிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் இலங்கை பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கதிர்வீச்சு சேவை உடனடியாகக் கிடைப்பதால், பல தொழில்முனைவோர் புதிதாக உற்பத்தி வசதிகளைத் தொடங்கியிருந்ததுடன் சிலர் எஸ்எல்ஜீசீயில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திப்பொருட்களை கதிர்வீச்சிடுகின்றனர், மேலும் நாட்டினுள் மனிதசக்தி பயன்பாடு மற்றும் இயலளவை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கி சிலர் சிரிஞ்ச்கள் (syringes), துணிகள் ஆகியவற்றிற்கான உற்பத்தி வசதிகளைத் தொடங்குவதற்கான செயன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

எஸ்எல்ஜீசீ மூன்று பிரதான ஆய்வுகூடங்களைக் கொண்டுள்ளது; டொசிமெட்ரி ஆய்வுகூடம், உணவு தொழில்நுட்ப ஆய்வுகூடம் மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடம். டொசிமெட்ரி ஆய்வுகூடம் தர உத்தரவாத ஆய்வுகூடமாக செயற்படுகிறது, இது வசதியில் கதிர்வீச்சு செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு வழங்கப்படும் அளவை உறுதி செய்கிறது.

நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் மற்றும் உணவு தொழில்நுட்ப ஆய்வுகூடம் என்பன ஆரம்ப சரிபார்ப்பு சேவைகள், நுண்ணுயிரியல் சோதனை சேவைகள் மற்றும் ஏனைய சோதனை சேவைகளை வழங்குகின்ற அதேநேரம் அனைத்து ஆய்வுகூடங்களும் ஆராய்ச்சி வசதிகளை வழங்குகின்றன.

ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதம் மற்றும் சர்வதேச வழிகாட்டல்களுடன் இணங்குதல் என்பன எஸ்எல்ஜீசீ இற்கு ஒரு வணிக கதிர்வீச்சாளராக, தொழிலாளர் படை, கமா வளமூலம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், வளமூலத்திற்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கும் முக்கியமானதாகும்.

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் (எஸ்எல்ஏஆர்சீ) ஒழுங்கான பரீட்சிப்புக்களானது காலரீதியான பாதுகாப்பு சோதனைகள், மருத்துவ கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், தனிப்பட்ட அளவு (dose) கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றில் வெற்றிகரமாக உட்பொதிக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயற்திறனை உறுதிப்படுத்துகின்றன. எஸ்எல்ஜீசீ அதன் ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு கலாச்சாரத்தை தரமுயர்த்துவதற்கு சர்வதேச ரீதியாக அல்லது உள்நாட்டில் நடாத்தப்படுகின்ற ஏனைய கதிர்வீச்சு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுகின்றது.

எஸ்எல்ஜீசீ, ஒரு சேவை வழங்குநராக சர்வதேச நியமங்களை கடைப்பிடிப்பதன் மூலமும், உரிய தர முகாமைத்துவ முறைமைகளை அமுல்ப்படுத்துவதன் மூலமும் அதன் சேவையின் தரத்தை வளப்படுத்துகின்றது. ஐஎஸ்ஓ 9001 மற்றும் ஐஎஸ்ஓ 13485 (*மருத்துவ சாதனங்கள் - தர முகாமைத்துவ முறைமைகள் - ஒழுங்குபடுத்தல் நோக்கங்களுக்கான தேவைப்பாடுகள்*).

கமா கதிர்வீச்சு தொழில்நுட்பம் மற்றும் பொருந்தக்கூடிய சேவைகள் தொடர்பான விழிப்புணர்வை எஸ்எல்ஜீசீ காலரீதியாக வாடிக்கையாளர் கலந்துரையாடல்கள், படசாலைகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களின் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றின் மூலம் வழங்குகின்றது. வெவ்வேறு கைத்தொழில்களில் கமா கதிர்வீச்சின் பொருந்தக்கூடிய தன்மை தொடர்பான அறிவை பரவச் செய்தலானது பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து நடாத்தும் ஆராய்ச்சிகள் மூலம் அடைந்துகொள்ளப்படுகின்றன.

1.4 வாழ்க்கை விஞ்ஞான பிரிவு (எல்எஸ்டி)

நுகர்வோர் பாதுகாப்பிற்காக கதிரியக்கத்தன்மை மாசுபடுதலிற்காக இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவை சோதனை செய்வதில் விசேட கவனம் செலுத்தி, ஒழுங்குமுறை தேவைப்பாடுகளுக்காக வினைத்திறனானதும் ஆக்கபூர்வமானதுமான அணு பகுப்பாய்வு சோதனை சேவைகளை வழங்குவதற்கு வாழ்க்கை விஞ்ஞானப் பிரிவு (எல்எஸ்டி) பொறுப்பாகும்.

மேலும், வாடிக்கையாளர் கோரிக்கைகள் மற்றும் கல்விசார் ஆராய்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேச நியமத்திற்கு இணங்க சேவைகள் வழங்கப்படும் அதேநேரம் இப் பிரிவு நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்தி இலக்குகளில் தீவிரமாக ஈடுபடுகின்றது.

2020 ஆம் ஆண்டின் போது, உணவு (பால் மா போன்றன), விவசாய பொருட்கள் (தேயிலை, தேங்காய், மசாலாப்பொருட்கள், மூலிகைகள் போன்றன), சுற்றாடல் மாதிரிகள் (மண், வண்டல், நீர் போன்றன) மற்றும் கட்டிட மூலப்பொருட்கள் (ஓடுகள், மணல்) அதேபோல் பல அடிப்படை அமைப்புகளுக்கான பல்வேறு மாதிரி மெட்ரிக்ஸ்கள் (matrixes) ஆகியவற்றிலுள்ள கதிரியக்க அளவீடுகள் எல்எஸ்டி ஆய்வுகூடங்களில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

4167 மொத்த எண்ணிக்கையான மாதிரிகளிற்காக பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்குவதன் மூலம் ஏறத்தாழ ரூபா 53.7 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டது.

ISO IEC 17025:2005 இன் பிரகாரம் கமா ஸ்பெக்ட்ரோமெட்ரி (Spectrometry) ஆய்வுகூடம் தர முகாமைத்துவ முறைமையை (கியூஎம்எஸ்) பேணியிருந்தது. 2006 ஆம் ஆண்டு தொடக்கம் ஆய்வுகூடத்தை பரிசோதிப்பதற்கான சர்வதேச தராதர அங்கீகாரம். ISO IEC 17025:2017 இன் புதிய பதிப்பின் பிரகாரம் அனைத்து ஆவணங்கள் மற்றும் செயன்முறைகள் உள்ளடங்கலாக கியூஎம்எஸ் 2020 பெப்ரவரியில் தரமுயர்த்தப்பட்டது.

2020 ஆம் ஆண்டின் போது இரண்டு புதிய பகுப்பாய்வு சேவைகள் அதாவது குடிநீர் மற்றும் கழிவு நீர் உள்ளடங்கிய பல்வேறு மாதிரி மெட்ரிக்ஸில் கதிர்வீச்சு மட்டங்களைக் கண்காணிப்பதற்கான மொத்த ஆல்பா பீட்டா அளவீடுகள் மற்றும் நுண்ணளவு தனிம பகுப்பாய்விற்காக (trace element) பகுப்பாய்வுக்கான Inductive Coupled Plasma Mass Spectrometry (ஐசீபிஎம்எஸ்) சேவை எனும் பெயர்களில் தொடங்கப்பட்டுள்ளன. மொத்த ஆல்பா பீட்டா சேவையின் கீழ், திறன் பரிசோதனை மாதிரிகளிற்கு மேலதிகமாக கழிவுநீரில் ஆல்பா மற்றும் பீட்டா உமிழும் ரேடியோநியூக்லைடுகளின் (radionuclide) கதிர்வீச்சு அளவைச் சரிபார்ப்பதற்கான ஒழுங்குமுறைத் தேவைப்பாடாக மூன்று சேவை மாதிரிகள் சோதிக்கப்பட்டன.
புதிதாக நிறுவப்பட்ட ஐசோரோப் ரேஷியோ மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (ஐஆர்எம்எஸ்) ஆய்வுகூடம் தப்போது சேவை மாதிரிகளை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக உள்ளது. கார்பன் மற்றும் நைட்ரஜனின் நிலையான ஐசோரோப்புகளுக்கான ஏறத்தாழ 400 செடி மாதிரிகள் முறைமை அபிவிருத்திக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரமான உறுதியளிக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கான அனைத்து புதிய பகுப்பாய்வு நுட்பங்களுக்கும் தேசிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கான செயன்முறைகள் நடைபெற்று வருகின்றன.

அணுசக்தி பகுப்பாய்வு சோதனை சேவையை வழங்குவதற்கு மேலதிகமாக, சர்வதேச அணுசக்தி முகவராண்மையின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் சுகாதாரம் மற்றும் சுற்றாடல், உணவு மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் பல்வேறு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த R & D நிகழ்ச்சித்திட்டங்களில் எல்எஸ்டி ஈடுபட்டுள்ளது.

1.5 கைத்தொழில் துறை பயன்பாடுகள் பிரிவு (ஐஏடி)

தொழில்துறை பயன்பாடுகள் பிரிவின் (ஐஏடி) கீழ், அணுசக்தி, ஐசோடோப் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பம் நாட்டில் சுற்றாடல், தொழில்துறை, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. பங்குதாரர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுக்கான தொடர்புடைய ஆலோசனைகள் மற்றும் பகுப்பாய்வு சேவைகளையும் ஐஏடி வழங்குகிறது. மேற்படி துறைகளில் தேசிய தேவைகளை நிவர்த்தி செய்வது ஐஏடியில் உள்ள முன்னுரிமை ஆராய்ச்சி பகுதிகளில் உள்ளது. ஐஏடியின் கீழ் ஐசோடோப் நீர்வளவியல் பிரிவு மற்றும் கதிர்வீச்சு செயன்முறைப்படுத்தல் பிரிவு என்பன செயற்படுகின்றன.

நாட்டில் நிலவும் கொவிட்-19 நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டில் பெரும்பாலான ஆராய்ச்சி செயற்திட்டங்கள் சீர்குலைந்த போதிலும், ஐசோடோப் நீர்வளவியல் பிரிவின் (ஐஎச்எஸ்) கீழ் சில கள நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட முடிந்திருந்தன.

கொழும்பில் இருந்து நீர்கொழும்பு வரையிலான கரையோரப் பகுதியில் உள்ள ஆழமற்ற நிலத்தடி நீர் மாசுபாட்டின் பாதிப்பை ஆராய்வதற்காக ஐஏஈஏ ஆர்சீஏ செயற்திட்டத்தின்; RAS7035 முக்கிய பங்குதாரர் நிறுவனமாக பணிபுரியும் நீர் வளங்கள் சபையுடன் இணைந்து மாதிரியிடல் அமர்வொன்று பூர்த்தி செய்யப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, ஐஏஈஏயின் தேசிய செயற்திட்டமான SRL7006 இன் கீழ் நிலத்தடி நீர் மீள்நிரப்புதல், தோற்றம், கலத்தல் மற்றும் இயற்கை மாசுபாடுகள் போன்றவற்றைக் கண்டறிவதற்காக நிலத்தடி நீர் மதிப்பீட்டில் மல்வத்துஓயா வடிநிலம் மற்றும் கீழ் மகாவலி வடிநிலம் ஆகிய இரண்டு கள அமர்வுகள் பூர்த்தி செய்யப்பட்டன. ஐசோடோப்களுக்கான நீர் மாதிரிகளின் பகுப்பாய்வு மற்றும் மேற்படி பணிகளுடன் தொடர்புடைய இரசாயனவியல் என்பனவும் 2020 இல் பூர்த்தி செய்யப்பட்டன. அதேநேரம் நீரின் தர மதிப்பீடுகள் தொடர்பான QA/QC விடயங்கள் தொடர்பான பெரும்பாலான ஆவணப் பணிகள் வீட்டிலிருந்தான பணிக் காலப்பகுதியின் போது பூர்த்தி செய்யப்பட்டன. மேலும், யாழ் குடாநாடு மற்றும் வளவே ஆற்று வடிநிலத்தில் நிலத்தடி நீர் மதிப்பீடுகள் தொடர்பான ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்கள் 2020 இல் ஐஎச்எஸ் ஆல் சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழ்களில் வெளியிடப்பட்டன.

கதிர்வீச்சு செயன்முறைப்படுத்தல் பிரிவின் (ஆர்பிஎஸ்) கீழ், நாட்டில் கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் சில ஆய்வுகூட பகுப்பாய்வுகள் செய்யப்பட்டன. கலாச்சார பாரம்பரிய கலைப்பொருட்களை பூச்சிடுவதற்கு பொருத்தமான இரசாயன கலவையை கண்டறிவதற்கான 72 மாதிரிகளின் பகுப்பாய்வு 2020 இல் பூர்த்தி செய்யப்பட்டது. இது தொடர்பான ஆய்வுகூட சோதனைகள் களனி பல்கலைக்கழகத்தின் உதவியுடன் கள சோதனைகளாக விரிவுபடுத்தப்பட்டன. மேலும், இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் 48 இரத்தினக்கல் மாதிரிகள் கதிர்வீச்சிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. மேலும், காகிதப் பாதுகாப்பிற்காக கமா கதிர்வீச்சு தூண்டப்பட்ட graft co-polymerization பயன்பாடு பற்றிய கண்டுபிடிப்புகள் ஆர்பிஎஸ் இன் கீழ் 2020 இல் வெளியிடப்பட்டது. மேலும், இலங்கையின் கனிம வளங்களுக்கு பெறுமதி சேர்த்தல் முறையாக மேம்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் கதிர்வீச்சு உதவி தொகுப்பு பற்றிய புதிய ஆராய்ச்சி முன்மொழிவு ஆர்பிஎஸ் ஆல் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, அடுத்த ஐஏஈஏ ரீசீ சுழற்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி இரண்டு துணைப் பிரிவுகளின் செயற்பாடுகளுக்கு அப்பால், விவசாயப் பயிர்களின் உகந்த நீர்த் தேவைப்பாட்டைக் கண்டறிவதற்கு இனங்காணப்பட்ட புதிய ஆராய்ச்சிப் பகுதியொன்று பிராந்திய செயற்திட்ட முன்மொழிவு வரை உருவாக்கப்பட்டு 2022-2024 ஆர்சீஏ செயற்திட்டச் சுழற்சியில் கருத்தில் கொள்வதற்காக ஐஏஈஏ இற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த முன்மொழிவு ஐஏஈஏ ஆல் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் 2020 இல் இது திருத்தப்பட்டு இறுதி செய்யப்பட்டது. மேலும், ஆலை நீர் பிரித்தெடுப்பதற்கான ஆய்வுகூட உட்கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. இப் பணிகள் அனைத்தும் ஐஏடியின் கீழ் முன்மொழியப்பட்ட ஐசோடோப் சூழலியல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலை கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஐஏடியின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டிருந்த போதிலும் பாடசாலை குழந்தைகளுக்காகத் திட்டமிடப்பட்ட செயலமர்வுகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள் போன்றவற்றை தொற்றுநோய் நிலைமையின் கீழ் 2020 இல் நடாத்த முடியவில்லை. "சிமார்ட் புத்தகம்" என்ற இணைய அடிப்படையிலான கல்வித் தொகுதி (educational module) 2020 இல் பெரும்பாலானவை பூர்த்தி செய்யப்பட்டு கல்வி அமைச்சின் ஆதரவுடன் 2021 இல் தொடங்கத் திட்டமிடப்பட்டது.

1.6 சர்வதேச ஒத்துழைப்பு பிரிவு (ஐசீடி)

இலங்கை அணுசக்தி சபையின் (எஸ்எல்ஏஈபீ) சர்வதேச ஒத்துழைப்பு பிரிவானது ஐக்கிய நாடுகளின் குடும்பத்திலுள்ள ஒரு அமைப்பான உலகின் "அமைதி மற்றும் அபிவிருத்திக்கான அணுக்கள்" என பரவலாக அறியப்படுகின்ற சர்வதேச அணுசக்தி முகவராண்மையின் (ஐஏஈஏ) தேசிய தொடர்பு அலுவலகமாக தொழிற்படுகின்றது, சர்வதேச ஒத்துழைப்பு பிரிவு அதன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு (ரீசீ) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக ஐஏஈஏ உடன் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றது. ஐஏஈஏ அதன் தொழில்நுட்ப உதவிகளை பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் தோழமை, விஞ்ஞானவியல் விஜயங்கள், நிபுணர் பணி, உபகரணங்கள், இரசாயனங்கள் போன்ற வடிவங்களில் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகின்றது.

கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காணப்பட்ட போதிலும் இலங்கை விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப ஆளணியினரின் திறன்களை மேம்படுத்துவதற்காக இலங்கையால் பல ஒன்லைன் (online) நிபுணர் உதவிகளைப் பெற முடிந்தது. வெளிநாட்டு பயிற்சி, செயலமர்வு, கூட்டங்கள், மாநாடுகள் போன்றவற்றில் பங்கேற்பதற்கான எட்டு (08) வாய்ப்புக்கள் தொடர்புடைய தேசிய நிறுவனங்களில் உள்ள விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் பெறப்பட்டன. ஐஏஈஏ இன் பிராந்திய ரீதியிலான மற்றும் பிராந்தியங்களுக்கு இடையேயான தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டங்களின் கீழ் ஒழுங்குசெய்யப்பட்ட அத்தகைய நிகழ்வுகளில் உண்மையாக பங்குபற்றுவதற்கு எமது விஞ்ஞானிகள், தொழில்நுட்ப ஆளணியினராலும் வாய்ப்புக்கள் பெறப்பட்டன.

நான்கு (04) தேசிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டங்கள், 2020-21 சுழற்சிக்கான தொழில்நுட்ப உதவி தொடர்பாக 963,809 யூரோ பெறுமதியான தொழில்நுட்ப உதவி (ஏறத்தாழ 193 மில்லியன்) பெற்றுக்கொள்ளப்படுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

அணுசக்தி தொழில்நுட்பத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட நாட்டின் முன்னுரிமைப் பகுதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட எட்டு (08) செயற்திட்ட முன்மொழிவுகள் அடுத்த தொழில்நுட்ப ஒத்துழைப்பு சுழற்சி 2022/23 இற்கான அதன் கருத்தில்கொள்ளலிற்காக ஐஏஈஏ இற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் எட்டு (08) செயற்திட்ட முன்மொழிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் கீழ் தொழில்நுட்ப உதவிகள் பெறப்பட உள்ளன. 2022 இல் இச் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படும்.

மூன்று (03) RT-PCR இயந்திரங்களை அவற்றுடன் தொடர்புடைய ஏனைய பொருட்களுடன் பெற்றுக்கொள்வதற்கு ஐஏஈஏ உடன் இப்பிரிவு ஒருங்கிணைந்ததுடன் இவ் இயந்திரங்கள் கண்டி கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் கண்டி பொது வைத்தியசாலை ஆகியவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

நாட்டில் தொழில்துறை பல்வகைப்படுத்தல் காரணமாக நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நாட்டின் எதிர்கால மின் தேவையை பூர்த்தி செய்வதற்கு அணு மின்சக்தியை ஒரு விருப்பமாக பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக அணு மின்சக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. சுத்தமான மற்றும் பசுமையான எரிசக்தி வளமூலமாக, கார்பன் நியூட்ரலைஸ் உமிழ்வு கருத்தின் பிரகாரம் அணு மின்சக்தி தேசிய நிகழ்ச்சி நிரலை எதிர்கொள்கின்றது.

நாட்டில் அணுசக்தி தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தென் கொரியாவில் உள்ள பிராந்திய கூட்டுறவு உடன்படிக்கை பிராந்திய அலுவலகம் (ஆர்சீஏஆர்ஓ), ஜப்பானில் கல்வி, கலாச்சாரம், விளையாட்டு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் (எம்ஈஎக்ஸ்ரீ) கீழ் செயற்படும் நிறுவனங்கள், கோட்பாட்டு பௌதீகவியலுக்கான சர்வதேச நிலையம் (ஐசீரீபி) போன்ற ஏனைய சர்வதேச நிறுவனங்களுடனும் இந்த பிரிவு செயற்பாடுகளை ஒருங்கிணைக்கிறது. இலங்கைக்கான தொழில்நுட்ப ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறியும் பொருட்டு ஐஏஈஏ உறுப்பு நாடுகளுடன் (எம்எஸ்) இருதரப்பு கலந்துரையாடல்களை ஒருங்கிணைத்தல், மற்றும் அணு அறிவு முகாமைத்துவ (என்கேஎம்) செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் என்பன இந்தப் பிரிவினால் வழங்கப்படும் ஏனைய முக்கிய தொழிற்பாடுகளாகும்.

1.7 நிதி சிறப்பம்சங்கள்

2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வெளிப்புற வாடிக்கையாளர் சேவைகளிலிருந்தான வருமானம்

(பெறுமதிகள் ரூபா. மில்லியனில்)

	வருமான மூலம்	இலக்கு	உள்ளபடியானது
1	அணு பகுப்பாய்வு சேவைகள்	52.00	53.73
2	இலங்கை கமா நிலையம்	49.00	47.20
3	அழிவு எதிர்ப்பு சோதனை ஆய்வுகள்	13.20	12.92
4	என்டிரீ பயிற்சி கற்கைநெறிகள்	1.80	1.74
5	என்சீஎன்டிரீ (எஸ்எல்ஏஈஆர்சீ) இலிருந்தான வாடகை வருமானம்	7.00	7.00
6	பொது விஞ்ஞானவியல் சேவைகள்	15.75	16.00
7	ஐசோடோப் நீர்வளவியல் பிரிவு	0.10	0.05
8	ஏனைய வருமானம்	11.05	10.44
	மொத்தம்	**149.90**	**149.10**

போட்டிச் சந்தை சுற்றாடலிலும் வெற்றிகரமாக மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதில் எஸ்எல்ஏஈயின் சபை உறுப்பினர்கள், சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் வேலைப்படைக்கு அவர்களது ஒத்துழைப்பிற்காக நான் நன்றிகூற விரும்புகின்றேன்.



பேராசிரியர். எஸ்.ஆர்.டி. றோஸ

தலைவர்

இலங்கை அணுசக்தி சபை

2.0 பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் நாளாந்தம் மக்கள் வாழ்க்கையில் எதிர்கொள்கின்ற பல பிரச்சனைகளிற்கு தீர்வுகளை காண்பதற்கு உதவும். ஆபத்தின்றியும் பாதுகாப்பாகவும் பயன்படுத்தும் போது அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஒவ்வொரு அம்சத்திலும் செயற்திறனாக காணப்படுகின்றது. ஆகையால் அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளத்தை பயன்படுத்துவதற்கு இலங்கையில் வசதிகளை பெற்றுக்கொடுப்பது அவசியமாகும்.

1969 ஆம் ஆண்டில் இது ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து எமது நிறுவனம் இலங்கையில் அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் அமுல்ப்படுத்தலிற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளதுடன் தற்போது நிறுவனரீதியான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்களை கொண்டுவந்துள்ளது.

அணுசக்தி தொழில்நுட்பத்தின் அமைதியான பிரயோகங்களை வழங்கி ஊக்குவித்தல், அதன் நன்மைகளை நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்துதல் மற்றும் கதிர்வீச்சு பணியாளர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றாடலை அயனாக்கல் கதிர்வீச்சின் அபாயகரமான விளைவுகளிலிருந்து பாதுகாத்தல் ஆகிய தந்திரோபாய பணிநோக்குடன் எஸ்எல்ஏஈபீயானது பல வகையான பொறுப்புக்களை கொண்டுள்ளது.

இத்துடன் எஸ்எல்ஏஈபீயின் 2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை சமர்ப்பிப்தில் நான் பெருமைப்படுகின்றேன். இவ் அறிக்கை 2020 ஆம் ஆண்டின் செயன்முன்னேற்றத்தையும் அதன் நிதி நிலைகளையும் பொழிப்பாக்கித் தருகின்றது. எஸ்எல்ஏஈபீயிற்கு 2021 ஆம் ஆண்டு சவாலான ஒன்றாக இருக்கும். எனினும் இலங்கையில் உயர் செயற்திறனொன்றைக் கொண்ட அமைப்பாக இதனை தொடர்ந்து அபிவிருத்தி செய்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

கொவிட் 19 பெருந்தொற்றுநோய் நிலைமையை நாங்கள் மோசமாக எதிர்கொண்டிருந்த போதிலும் ஒட்டுமொத்தமாக, எஸ்எல்ஏஈபீ 2020 ஆம் ஆண்டிற்கான அதன் நோக்கங்களை வெற்றிகரமாக அடைந்துகொண்டுள்ளது என நான் நம்புகின்றேன். மேலும் வெற்றிகரமான இன்னொரு சவாலான பலனளிக்கும் ஆண்டை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ரீ.எம்.ஆர். தென்னக்கோன்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை அணுசக்தி சபை

3.0 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வுகள் 2020

2020 ஆம் ஆண்டிற்கான இலங்கை அணுசக்தி சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் உறுப்பினர்களை கொண்டுள்ளது.

(அ)	திரு. கமல் பத்மசிறி	-	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கான தலைவர்
(ஆ)	திரு. அரோஷா ரொட்ரிகோ	-	குழு உறுப்பினர் (01 வது A&MC கூட்டத்தின் பதில் தலைவராக பணியாற்றுதல்)
(இ)	டாக்டர். டபிள்யூ. மீகொட	-	குழு உறுப்பினர் (2020-09-08 வரை)
(ஈ)	திரு.ஜெயசிங்கம் ஜெயசுஜித்தன்	-	குழு உறுப்பினர்

மேற்படி நான்கு உறுப்பினர்களும் இலங்கை அணுசக்தி சபையின் (எஸ்எல்ஏஈபீ) பணிப்பாளர் சபை உறுப்பினர்களாவர். அத்துடன் நிதி, நிர்வாகம் மற்றும் விஞ்ஞானவியல், துறைகளில் பலவிதமான அனுபவங்களை கொண்டுள்ளனர்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதியான கணக்காய்வு அத்தியட்சகர் (திரு.ஆர்.கருணாரத்ன) மற்றும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் (திருமதி.பீ.ஏ.டி.ஏ.அபேவர்த்தன) ஆகியோரும் அவதானிப்பாளர்களாக கூட்டங்களில் பங்குபற்றியிருந்தனர்.

உள்ளகக் கணக்காய்வாளர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டத்தை கூட்டுபவராக செயற்பட்டிருந்ததுடன் கலந்துரையாடல்கள் போன்றவற்றிற்கு உதவுவதற்கு உரிய அறிக்கைகள் போன்றவற்றை சமர்ப்பிப்பதன் ஊடாக குழுவிற்கு உதவுகின்றார். சபை செயலாளர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாளராக செயற்படுகிறார். திரு.ரீ.எம்.ஆர்.தென்னக்கோன் பணிப்பாளர் நாயகம் மற்றும் திரு. அரசப்பெரும, பணிப்பாளர் (நிதி) ஆகியோரும் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர். ஏனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் அழைப்பின் மூலமும் தேவைப்படும் போதும் குழுக் கூட்டங்களில் பங்குபற்றியிருந்தனர்.

2020 ஆம் ஆண்டின் போது 03 ஆம் காலாண்டு வரை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்த போதிலும் சில உள்ளக சிக்கல்கள் காரணமாக 04 ஆம் காலாண்டு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இறுதியாக அச் சிக்கல் பணிப்பாளர் சபைக்கு கொண்டு செல்லப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தது.

3.1 குழுவின் பணிகள்

2010.12.14 ஆம் திகதிய பிஈடி 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை, பொது முயற்சிகள் "நல்லாளுகைக்கான வழிகாட்டல்" மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றில் வரையறுக்கப்பட்ட குறிக்கோள்கள் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தன. மேற்படி சுற்றறிக்கைகள் மற்றும் அதிகாரச்சட்டங்களில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு கணக்காய்வுக் குழு அதிகபட்ச முயற்சியை மேற்கொண்டது.

எஸ்எல்ஏஈபீ இன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமான காலம் மற்றும் இருக்கும்தன்மை மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக இணங்காமை, நிதி அறிக்கையிடல் முறைமைகளிலுள்ள வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை என்பவற்றை குழு மீளாய்வு செய்ய வேண்டும்.

இது நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் நிலையான தன்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்கிய நிதி அறிக்கையிடல் முறைமையுடன் இணங்குகின்றமை என்பவற்றையும் உறுதிப்படுத்த வேண்டும்.

3.2 2020 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழுவால் ஆற்றப்பட்ட பணி

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தும் போது பொதுமுயற்சிகள் திணைக்களம் மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களை பூர்த்தி செய்வதற்கு குழு முயற்சி செய்திருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது கீழே குறிப்பிடப்பட்ட சிரமங்கள் காரணமாக கணக்காய்வுக் குழுவால் ஒரு தடவையே கூட்டத்தை நடாத்த முடிந்திருந்தது..

- உள்ளக கணக்காய்வு திட்டம் 2020 இற்கு குழு அங்கீகாரத்தை வழங்கியது.

- எஸ்எல்ஏஈபீ கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கான குறிப்பு விதிமுறைகளைத் தயாரித்து 2020 செப்தெம்பரில் சபை அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டது.

- மேலும் மேற்படி குழுவானது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை-2019 இல் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய பிரச்சினைகளை மதிப்பாய்வு செய்து பரிந்துரைகளை வழங்கியதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தீர்வுகளை சபைக்கு சமர்ப்பித்தது.

- பங்குபற்றல் தீர்மானமெடுத்தல் செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு பிரிவின் தலைவர் அழைக்கப்பட்டார்.

- ஆண்டின் போது தீர்வு காணப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் முகாமைத்துவ சிக்கல்களுக்கு பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- கணக்காய்வு ஐயவினாக்களிற்கு காலதாமதமின்றி பதிலளிப்பதற்கான கண்காணிப்பு முறைமையை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு.எச்.ரீ. கமல் பத்மசிறி
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தலைவர்
இலங்கை அணுசக்தி சபை

குழு கூட்ட திகதி மற்றும் நிகழ்ச்சிநிரல் விடய இல.	கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள்/ முக்கிய பிரச்சனைகள்	திருத்த நடவடிக்கைகளிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரைகள்	எஸ்எல்ஏஈபீயால் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள்
கூட்ட திகதி - 2020-02-26 நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-01-03	**<u>உள்ளக கணக்காய்வுத் திட்டம் - 2020</u>** எஸ்எல்ஏஈபீ முகாமைத்துவத்தால் உள்ளக கணக்காய்வு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துவதில் உள்ள பலவீனம் தொடர்பாக குழு கலந்துரையாடியது. குழு 2019 இல் வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பொழிப்பையும் பரிந்துரைகளை அமுல்ப்படுத்துவதன் செயன்முன்னேற்றத்தையும் பரீட்சித்தது. உள்ளக கணக்காய்வு பிரிவினருக்கு உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் இருந்து கோரப்பட்ட தகவல்கள் மற்றும் ஆவணங்கள் கிடைத்திருக்கவில்லை என அவர்களிடமிருந்தான முறைப்பாடொன்று காணப்பட்டது..	வரைவு உள்ளக கணக்காய்வு திட்டம் - 2020 இற்கு குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. எஸ்எல்ஏஈபீயின் தொடர்புடைய பிரிவுகள், உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள் குறித்து அதிக அக்கறை காட்ட வேண்டும் என குழு சுட்டிக்காட்டியது.	முகாமைத்துவ சபை வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளதுடன் திட்டத்தை வரிசை அமைச்சின் செயலாளர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளிற்கு சமர்ப்பிப்பதற்கு அறிவுறுத்தியுள்ளது.
நிகழ்ச்சி நிரல் விடய இல.- 2020-01-04	**<u>நிதிக்கூற்று</u>** இறுதிக் கணக்கின் செயன்முறையில் குறிப்பிட்ட தாமதம் ஏற்பட்டதுடன் இறுதி கணக்கை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு அதனை அனுப்ப வேண்டிய தேவைப்பாடு கசாணப்படவில்லை என்பதை குறிப்பிட்டு நிதிப் பிரிவினால் எஸ்எல்ஏஈபீ தலைவருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வாளர் நிதிக்கூற்று தொடர்பாக சில முக்கிய விடயங்களின் புள்ளிவிபரங்களில் முரண்பாடு உள்ளதாக சுட்டிக்காட்டினார், உள்ளக கணக்காய்வு பிரிவு நிதிப் பிரிவிலிருந்து அவற்றை உண்மையில் பெற்றிருந்ததுடன் அவர்கள் அதனை சபைக்கு சமர்ப்பித்திருந்தனர்.	குழு 2019 ஆம் ஆண்டில் எஸ்எல்ஏஈபீ நிதிக்கூற்றை குறித்துக்கொண்டு, அடுத்த சபைக் கூட்டத்திற்கு மேலதிக மதிப்பாய்விற்காக மீண்டும் அனுப்பியது.	சபையானது 2020-06-12 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான வரைவு நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிப்பதற்கு அங்கீகாரம் அளித்தது.
நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-01-05	**<u>உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் - 2020</u>** 1. **எஸ்எல்ஏஈபீ நிதிக்கூற்றுக்கள் 2019 தொடர்பான உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்கள்** எஸ்எல்ஏஈபீ நிதிக்கூற்றுக்கள் 2019 தொடர்பான உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்களை 2020 மார்ச 13 இல் நடைபெறவுள்ள அடுத்த சபைக் கூட்டத்திற்குச் சமர்ப்பிப்பதாக உள்ளக கணக்காய்வாளர் உறுதியளித்தார்.		எஸ்எல்ஏஈபீ நிதிக்கூற்று - 2019 தொடர்பான உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்களின் விரிவான அறிக்கையை மதிப்பாய்வு

			செய்வதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.
நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-01-06	**<u>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 மற்றும் முகாமைத்துவ பதில்கள் மற்றும் அரசாங்க கணக்காய்வு ஐயவினாக்கள்</u>** 1. கணக்காய்வு அத்தியட்சகரின் ஐயவினா (இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் கதிரியக்க அளவீட்டுக்காக நுகர்வுத் திறனை மதிப்பிடுதல்) மற்றும் முகாமைத்துவ பதில்கள். சரியான மதிப்பீடு இல்லாமல், கதிரியக்கமற்ற இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் சோதனைக் கட்டணங்களை எஸ்எல்�ஏபீ அதிகரித்தது என அரசாங்க கணக்காய்வாளர் விளக்கினார். இலங்கை அணுசக்திச் சட்டத்தின் நோக்கங்களின் பிரகாரம் எஸ்எல்ஏபீ மூலம் சமூகத்திற்கு வழங்கக்கூடிய சேவைகள் குறித்து அது அதிக அக்கறை காட்ட வேண்டும். எனவே, இந்த விலை உயர்வை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், சந்தையில் இருந்தும் உற்பத்தி செய்யப்படும் பால் மாவை எழுமாறான முறையில் சரிபார்க்க வேண்டியதன் அவசியத்தை அவர் விளக்கினார். அத்துடன் எழுமாறான பரீட்சிப்பிற்காக கொள்கலன்களை தெரிவு செய்வதற்கு முறையான பொறிமுறை காணப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார். இந்தச் செயன்முறையில், எஸ்எல்ஏபீ மாத்திரமல்ல, ஒழுங்குபடுத்தல் பேரவைக்கும் இது தொடர்பான முக்கிய பொறுப்பு உள்ளது. மேற்படி ஐயவினாவிற்கு எஸ்எல்ஏபீ ஏற்கனவே அவர்களது பதிலைச் சமர்ப்பித்துள்ளதாக உள்ளக கணக்காய்வாளர் தெரிவித்தார். இந்த விலையேற்றத்தினால் பால்மா விநியோகஸ்தர்களுக்கு இவ்வளவு பெரிய சுமை ஏதும் இல்லை எனவும் நிதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.	2020 செப்தெம்பரில் நடைபெற்ற குழு கூட்டத்தில் சோதனை உணவு மாதிரிக்கான விலை அதிகரிப்பு நியாயமானது என குழுத் தலைவர் தெரிவித்தார்.	

	2. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 மற்றும் முகாமைத்துவ பதில்கள். 2018 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு எஸ்எல்ஏஈபீ ஏற்கனவே அவர்களது முகாமைத்துவ பதில்களை வழங்கியுள்ளதாக உள்ளக கணக்காய்வாளர் தெரிவித்தார்.		
நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-01-07	**<u>ஏனைய ஏதேனும் வணிகம்</u>** 1. மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் 2019 இன் 04 வது காலாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் குறிப்புக்கள். 2. 2019 - 4வது காலாண்டு செயன்முன்னேற்ற அறிக்கை அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளரிற்கு வழங்கப்பட்டது.	குழு இத் தகவலை குறித்துக் கொண்டுள்ளது.	
	3. பொது நிறுவனங்களின் (எஸ்எல்ஏஈபீ) மேற்பார்வைப் பங்கை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு மாற்றுவது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட கடிதம். எஸ்எல்ஏஈபீ 2020 ஆம் ஆண்டிலிருந்து தன்னிறைவு அடையத் திட்டமிட்டுள்ளதாகவும், தற்போது எஸ்எல்ஏஈபீ இந்த நோக்கம் தொடர்பாக செயற்பட்டு வருவதாகவும் பணிப்பாளர் நாயகம் வலியுறுத்தினார். எனவே, எஸ்எல்ஏஈபீ 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 44 மில்லியன் மிகையை பெற்றது. பொது முயற்சியின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு, எஸ்எல்ஏஈபீ புதிய செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டுள்ளது. ஏனையவற்றிடையே, coco feat நிகழ்ச்சித்திட்டம் முக்கியமானதாகும்.	-மேற்படி-	
	<u>திரு. ஆர். கருணாரத்னவின் அவதானிப்புக்கள் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி)</u> கணக்காய்வு அத்தியட்சகரின் அவதானிப்புக்கள் குழு குறிப்புக்களின் பக்கம் இல. 4 & 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.		
	<u>உள்ளக கணக்காய்வாளரின் அவதானிப்புக்கள்</u> உள்ளக கணக்காய்வாளரின் அவதானிப்புக்கள் குழு குறிப்புக்களின் பக்கம் இல. 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.		

	திரு. அரோஷா ரொட்ரிகோ (குழுவின் பதில் தலைவர்) சுட்டிக்காட்டினார்,	தற்போதுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு திறைசேரி பிரதிநிதியைக் கொண்டிருக்காததுடன் இது நிவர்த்தி செய்யப்படாத இழப்பாகும், அத்துடன் மிக உயர்ந்த வழிகாட்டுதல்கள் காணப்படாதமை நிறுவனத்தின் தீர்மானமெடுக்கும் செயன்முறைக்கு மோசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மற்றும் அரசாங்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களில் இருந்து விலகுவதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு சில சபை பத்திரங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே, அனைத்து பணிப்பாளர்களும், சபைப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் அனைவரும் அரசாங்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் கட்டமைப்பைப் புரிந்து கொள்ள வேண்டும் என திரு. அரோஷ ரொட்ரிகோ வலியுறுத்தினார்.	
		திரு. ரொட்ரிகோ, அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு எஸ்எல்ஏஈபீயில் பெறுகை தொடர்பாக உள்ள மூன்று முக்கிய சிக்கல்கள் தொடர்பான பொழிப்புக்களை சமர்ப்பிக்குமாறு உள்ளக கணக்காய்வாளரை பணித்திருந்தார். மேலும், சபைச் செயலாளர் எழுத்துமூலம் எந்தவொரு சபை பத்திரம் தொடர்பாகவும் தனது அவதானிப்புக்களை சமர்ப்பிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.	
கூட்ட திகதி - 2020-09-08 நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-02-11	**<u>திருத்தப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டம் - 2020</u>** உள்ளக கணக்காய்வு பிரிவின் சிரமங்கள் குறித்து குழு அக்கறை கொண்டுள்ளது. உள்ளக கணக்காய்வு பிரிவுக்கான வரையறுக்கப்பட்ட பதவியணியினரே முக்கிய கவலையாக இருந்தது. அவர்களிடம் மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினரே உள்ளனர் என உள்ளக கணக்காய்வாளர் குறிப்பிட்டார், முன்னதாக	திருத்தப்பட்ட உள்ளக கணக்காய்வுத் திட்டம் - 2020 இற்கு குழு அங்கீகாரம் அளித்துள்ளது.	முகாமைத்துவ சபை திருத்தப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளதுடன் திருத்தப்பட்ட திட்டத்தை வரிசை அமைச்சின் செயலாளர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளிற்கு

	(2020 மே வரை), ஐஏ பிரிவுக்கு 03 முகாமைத்துவ உதவியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர், தற்போது அவர்கள் இரண்டு எம்ஏக்களைக் கொண்டுள்ளனர், எனவே பணியை சரியான நேரத்தில் நிறைவேற்றுவது கடினம். மறுபுறம், கொவிட்-19 தொற்றுநோய் இப் பிரிவின் செயற்பாடுகளையும் தொந்தரவு செய்தது. மேலும், எஸ்எல்ஏஈபீயின் காணிகள் மற்றும் கட்டிடத் தகவல்களின் பதிவுகள், என்சீஎன்டிஈ நிர்மாணம் மற்றும் எஸ்எல்ஏஈபீ இன் செயன்முன்னேற்றம் (செயலாற்றல் கணக்காய்வு) போன்றன தொடர்பான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் போன்ற வரிசை அமைச்சால் கேட்கப்பட்ட திட்டமிடப்படாத பணிகள்/ கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அவர்கள் அதிக நேரத்தை பயன்படுத்த வேண்டியுளள்ளது என உள்ளக கணக்காய்வாளர் விளக்கினார். எனினும், உள்ளக கணக்காய்வு பிரிவில் எம்ஏ இற்கான பதவியணி நிலை காணப்படவில்லை என்றும், உள்ளக கணக்காய்வு பிரிவில் காணப்படும் பதவியணியினரை நிரப்புவதற்கு எஸ்எல்ஏஈபீ ஏற்கனவே தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் எஸ்எல்ஏஈபீயின் பணிப்பாளர் நாயகம் விளக்கினார். எனினும், எதிர்காலத்தில் உள்ளக கண்காய்வு பிரிவுக்கு பயிற்சியாளரொருவரை நியமிக்க வாய்ப்பு உள்ளது.		சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.
நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-02-12	**<u>உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்</u>** **1. 2020 இல் வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பொழிப்பு (2020 ஆகஸ்ட் 31 வரை)** • <u>ஐஏ/(ஆர்)/2020/01- கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் முன்னரான கணக்காய்வு</u> சுருக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஐஏ அறிக்கைகளுக்கு பதிலளிக்காததற்கான காரணத்தை குழுவின் தலைவர் கேட்டறிந்தார்.	AMC இன் தலைவர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி ஆகியோர் AMC இற்கு வருகை தரும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் கூட்ட அறிக்கைகளின் பிரதிகளை அனுப்புவது அவசியம் என வலியுறுத்தினர். மறுபுறம், அவர்கள் சம்பந்தப்பட்ட கூட்ட அறிக்கையின் உள்ளடக்கத்திற்கு அவ் உத்தியோகத்தர்கள் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். நியாயமற்ற முறையில் செயற்படும் உத்தியோகத்தர் சபைக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும். AMC இன் தீர்மானங்கள் நிதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக உள்ளக சுற்றறிக்கைகளுக்கான நிலைமையாக	

		இருக்கலாம். எனவே, ஒவ்வொரு உத்தியோகத்தரும் நியாயமாக செயற்பட வேண்டும்.	
	• ஜஏ/(ஆர்)/2020/02- (2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்று தொடர்பான ஜஏ அறிக்கை மற்றும் பணிப்பாளர் நிதியால் அளிக்கப்பட்ட பதில்கள்) **குறிப்பு 03 - நடைமுறை சொத்துக்கள்: - (வங்கியில் உள்ள காசு)** **குறிப்பு 05 – வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் (5.1 வியாபார கடன்பட்டோர்)** **குறிப்பு 06 – சரக்கிருப்பு (இரசாயன இருப்பு) – ரூபா 1.28 மில்லியன்** **குறிப்பு 8.3 - ஏனைய நடைமுறை சொத்துக்கள் (வருமான வரி முற்பணம் ரூபா 17,158)** **குறிப்பு 08.11 - கொள்வனவு முற்பணம் (ரூபா 529,168/-)**	------ AMC இன் தலைவர் கடன்பட்டோரிற்கான வயது பகுப்பாய்வை தயாரிப்பது பற்றி விசாரித்தார். AMC இன் தலைவர், இது பணிப்பாளர் நிதியின் பொறுப்பாக உள்ளது என்றும் அனைத்துப் பிரிவிலிருந்தும் ஒவ்வொரு தரவையும் அந்தந்த பணிப்பாளர்கள் மூலம் சேகரிக்கும் பொறுப்பு அவருக்கு உள்ளது என்று வலியுறுத்தினார். இறுதியாக, இறுதி பொருள் மெய்மையாய்வு அறிக்கையை பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்குவது பணிப்பாளர் நிதியின் பொறுப்பாகும். AMC இன் தலைவர், இந்த விடயத்தை சம்பந்தப்பட்ட வங்கி மூலம் தீர்த்து வைக்குமாறு பணிப்பாளர் நிதிக்கு அறிவுறுத்தினார். -----	
	குறிப்பு 09 - கட்டம் II & வடிவமைப்பு (ரூபா 1.99 மில்லியன்)	AMC இன் தலைவர், 2020 ஆகஸ்ட் 14 இல் எடுக்கப்பட்ட சபை தீர்மானத்தை பரிந்துரைத்தார். அதன் பிரகாரம் ECL (பொறியியல் ஆலோசகர்கள்) மூலம் எஸ்எல்ஏஈ கட்டிடத்தின் 2 ஆம் கட்டத்தின் வரைபடத் திட்டத்திற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின்	

		அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு சபை பணித்துள்ளது.	
	குறிப்பு 09.4 - வெளிப்பாட்டு அறையின் நிர்மாணம் - (என்சீஎன்டிரீ ரூபா 37 மில்லியன்)	கட்டிடத்தை ஒப்படைக்கும் வரை கொடுப்பனவு மேற்கொள்வதை நிறுத்துமாறு பணிப்பாளர் நிதியை AMC பணித்தது.	
	குறிப்பு 10 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (எஸ்எல்ஏஈபீ இடமாற்ற செயற்திட்டம்) எஸ்எல்ஏஈபீயின் இறுதிக் கணக்குகளில் கணக்கீடு செய்யப்படாமல் கண்டறியப்படக்கூடிய பல தெளிவில்லாத சொத்துக்கள் காணப்பட்டன. **பிரதான கட்டிடம்** **விஞ்ஞானவியல் உபகரணங்கள் நன்கொடை**	விசேட புலன்விசாரணை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என AMC இன் தலைவர் தெரிவித்தார். எஸ்எல்ஏஈபீ அலுவலகத்திற்கு தேவையானதாக உள்ள அளவீட்டு நடவடிக்கைகளை எடுத்தல் ஒரு முக்கியமான உண்மையாகும்.	
	குறிப்பு 12.1 - எஸ்எல்எல்ஆர்டிசி (செலுத்த வேண்டிய என்சீஎன்டிரீ நிர்மாணம் ரூபா 30 மில்லியன்)	----------	
	குறிப்பு 12.1.12 – சீஆர்பி செயற்திட்டங்களுக்கு பெறப்பட்ட முற்பணம் - ரூபா 20.35 மில்லியன்	பிஎஸ்/எஸ்பி/எஸ்பீ சுற்றறிக்கை/06/2019 ஐ கருத்தில் கொண்டு, அடுத்த AMC இற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு AMC அறிவுறுத்தியது.	
	குறிப்பு 13 - ஓய்வூதிய நலன் கடப்பாடு		
	குறிப்பு 15 & 16 - மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்	இது தொடர்பாக சபை பத்திரத்தை சமர்ப்பித்து அபிப்பிராயத்தை பெற்றுக்கொள்ளுமாறு AMC பணித்திருந்தது.	
	2. <u>பெறுகை சிக்கல்கள் தொடர்பான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் (கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவால் கோரப்பட்டவாறு)</u> (i) சீசீரீவி நிறுவலின் பெறுகை செயன்முறை தொடர்பான உள்ளக கணக்காய்வு அறிக்கை.	அந்த இரண்டு அறிக்கைகளும் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை	

	இது தொடர்பாக சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டதாக ஐஏ சுட்டிக்காட்டியது. எனினும், இந்த நிறுவலை அமுல்ப்படுத்துவதற்கு சரியான பெறுகை செயன்முறை காணப்படவில்லை. (ii) கதிர்வீச்சு வெளிப்பாட்டு அறையின் நிர்மாணம் தொடர்பான ஐஏ அவதானிப்பு. (iii) எஸ்எல்ஏஈபீயில் மருத்துவக் காப்புறுதியின் பெறுகை செயன்முறை.		
நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-02-13	**<u>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2019 மற்றும் முகாமைத்துவ பதில்கள்</u>** 1. **<u>அரசாங்க கணக்காய்வு ஐயவினா (கதிரியக்கமற்ற இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் நுகர்வு திறனை மதிப்பிடுதல்) மற்றும் முகாமைத்துவ பதில்கள்</u>** 2. **<u>எஸ்எல்ஏஈபீ அவர்களின் 2019 முகாமைத்துவ பதில்களை 3 மாத காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும் என கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி குறிப்பிட்டார்.</u>** மேலும் கணக்காய்வு அத்தியட்சகர் 2019 ஏஜியின் இறுதி அறிக்கையை வழங்குவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி சான்றுபடுத்தியதாக குறிப்பிட்டார். எனவே, மேற்படி வரைவு அறிக்கைகளுக்கான முகாமைத்துவ பதில்கள் தொடர்பாக அதிகம் கலந்துரையாட வேண்டியதில்லை. எனவே, 2019 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவ அறிக்கை 13(7)(அ) தொடர்பாக கலந்துரையாடுவதற்கு உடனடியாக விசேட கூட்டத்தை அழைக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.	இந்த தலைப்பு கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை	
	<u>திரு. ஆர். கருணாரத்னவின் அவதானிப்புக்கள் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி)</u> திரு. கருணாரத்னவின் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி) அவதானிப்புக்கள் குழு குறிப்புக்களின் பக்கம் இல. 6 & 7 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.	AMC இன் தலைவர் I/A இற்கு அனைத்து விஞ்ஞானவியல் பணிப்பாளர்களையும் அடுத்த AMC இற்கு அழைக்குமாறு அறிவுறுத்தினார், மேலும் இது சில முறையற்ற செயற்பாடுகளை குறைக்கலாம். அது மட்டுமின்றி, அரசாங்க நடைமுறைகள் தொடர்பான நிர்வாக அறிவையும் பெறலாம்.	

நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-02-14	**<u>வேறு ஏதேனும் வணிகம் (குழுவிற்கான தகவல்)</u>** 1. கணக்காய்வு சட்டத்தின் 40வது பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தி முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட கடிதம். 2. வரி விலக்களிக்கப்பட்ட வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக DG ஆல் வழங்கப்பட்ட கடிதம் தொடர்பாக திருமதி அனோமா ரத்நாயக்கவின் (பணிப்பாளர் – எஸ்எல்ஜீசீ) கடிதம். 3. கணக்காய்வு மற்றும் மகாமைத்துவக் குழு நோக்கெல்லைக்கான வரைவு TOR. 4. முகாமைத்துவ அறிக்கை தொடர்பாக செப்தெம்பர் 24 இல் விசேட கூட்டத்தை நடாத்துவதற்கு AMC தீர்மானித்தது	வழங்கப்பட்ட தகவலை AMC குறித்துக் கொண்டது. இது போன்ற விடயத்தில் கலந்துகொள்வதற்கு DG இற்கு முழு உரிமை உண்டு என AMC இன் தலைவர் விளக்கினார், எனினும், DG இன் அவதானிப்புக்களுடன் இது தொடர்பாக அடுத்த சபைக் கூட்டத்தில் சபை பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு AMC அறிவுறுத்தியது. ---------- திரு. அரோஷா ரொட்ரிகோ (உறுப்பினர்-AMC) இந்த ஆவணத்தை ஆய்வு செய்வதாக உறுதியளித்தார்.	
கூட்ட திகதி - 2020-09-24 நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-03-16	**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2019 மற்றும் முகாமைத்துவ பதில்கள்** கணக்காய்வு அத்தியட்சகர் திரு.கருணாரத்னாவின் விளக்கம் குறிப்புக்களின் பக்கம் இல. 2 & 3 இல் (2020-03-16) கொடுக்கப்பட்டுள்ளது. AMC இன் தலைவர், உள்ளக கணக்காய்வாளர் தலைவருக்கு அறிக்கையிட வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது என சுட்டிக்காட்டினார். ஆனால் உள்ளக கணக்காய்வாளர் நிறுவனத்தின் நிர்வாக விடயங்களில் DG இற்குக் கீழ்ப்படிய வேண்டும். **ஆண்டறிக்கை 2018**	அனைத்து வெளி நிர்வாகக் கடிதங்களும் DGயின் மேற்பார்வையின் கீழ் அனுப்பப்பட வேண்டும் என்று AMC இன் தலைவர் சுட்டிக்காட்டினார்.	

	கணக்காய்வு அத்தியட்சகரின் விளக்கம் குறிப்புக்களின் பக்க இல. 3 இல் கொடுக்கப்பட்டுள்ளது.		
நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-03-17	**<u>விசேட AMC கூட்டத்தின் நோக்கம்</u>** விசேட AMC இன் நோக்கத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி விளக்கினார். அதன் பிரகாரம், இது வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2019 தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்ட 2020-07-16 ஆம் திகதிய எஸ்எல்ஏஈபீயின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட உண்மைகளைக் குறிப்பிட்டு அவர்களின் சந்தேகத்தை தெளிவுபடுத்துவதற்கு இந்த விசேட AMC கூட்டம் நடாத்தப்படுகிறது,		
	1. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2019 இன் விடய இல. 1.2.1 (we), (wE) & முகாமைத்துவப் பதில்களின் விடய இல. 14(2) (we), (wE) (அரசாங்க கணக்கு நியமங்களில் இருந்து விலகி) **(i) சொத்துக்களின் மீள்மதிப்பீடு** விஞ்ஞானவியல் உபகரணங்களைப் பற்றி சில தீர்வுசெய்யப்படாத கணக்குகள் காணப்படுகின்றன. இதற்கு ஒரு தீர்வாக, இவ் விடயத்தை மீளாய்வு செய்து தீர்வு காண்பதற்கு எஸ்எல்ஏஈபீ குழுவொன்றை நியமித்துள்ளதாக அதன் முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. எனினும், இக் குழுவில் எவ்வித செயன்முன்னேற்றமும் இல்லை என உள்ளக கணக்காய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், எஸ்எல்ஏஈபீயின் முகாமைத்துவத்தால் வழங்கப்பட்ட பதில் போதுமானது மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று AG இன் பிரதிநிதி கூறினார். திரு. கருணாரத்ன உள்ளக கணக்காய்வு திட்டத்தின் விடயங்களை குறிப்பிடுகிறார் என உள்ளக கணக்காய்வாளர் விளக்கினார். எனினும் இவ் விடயத்தை AMC இல் கலந்துரையாடுவதற்கான திட்டம் காணப்படவில்லை. **(ii) பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கீடு**		

	AG இன் அறிக்கை - 2019 இன் பிரகாரம் இந்த விடயத்தை 14(2)(இ) அறிக்கையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. யதார்த்தமான மதிப்பீட்டிற்கு வரையறுக்கப்பட்ட நபர்களே உள்ளனர் என்றும், இது தொடர்பாக அடுத்த சபைக் கூட்டத்திற்கு அவர் சபை பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு உள்ளதாகவும் பணிப்பாளர் நிதி விளக்கினார்.		
	2. AG அறிக்கை - 2019 இன் விடய இல. 1.2.2 (w), (i), (ii), (iii) (iv) & முகாமைத்துவ பதில்களின் விடய இல. 1(4)(3) (w), (wd, 1,2,3) (கணக்கீட்டு குறைபாடு) **(i) எஸ்எல்ஏஈபீ ஐ இடமாற்றும் செயற்திட்டம்** பழைய கட்டிடத்திற்கு பதிலாக புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. நிர்மாண மதிப்பீட்டின் பிரகாரம், இது எஸ்எல்ஏஈபீ இற்கு சாதகமாக உள்ளது. எனவே, இக் கணக்குகள் 2019/04/19 இல் எஸ்எல்ஏஈபீயின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டன. அது கணக்குப் புத்தகங்களில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.		
	எனினும், அது எஸ்எல்ஏஈபீயின் தீர்மானங்களிற்கு காரணமாக இருக்கலாம். ஆனால் எஸ்எல்ஏஈபீயின் உரிமைத்துவம் மற்றும் சொத்துக்களில் எந்த பாதிப்பும் காணப்படவில்லை. எனினும், எஸ்எல்ஏஈபீயின் முகாமைத்துவம் 2020 ஆம் ஆண்டில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக சுட்டிக்காட்டியது. எனவே, கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி, எஸ்எல்ஏஈபீயின் முகாமைத்துவத்தால் அவர்களின் முகாமைத்துவ பதில்கள் 1(4) (3) (w), (wd,1,2,3) மூலம் வழங்கப்பட்ட பதில் போதுமானது என்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றும் கூறினார்.		
	3. AG இன் அறிக்கை - 2019 இன் விடய இல. 2.2 (w), (தாபன விதிக்கோவை XII) • **குறுகிய விடுமுறை** இவ் விடயம் தொடர்பான திரு.கருணாரத்னாவின் விளக்கமும், உள்ளக கணக்காய்வாளரின் விளக்கமும், குறிப்புக்களின் பக்க இல. 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.	கணக்காய்வு குழுவின் தலைவர், எஸ்எல்ஏஈபீயின் குறுகிய விடுமுறை தொடர்பான உள்ளக சுற்றறிக்கையை வெளியிடுமாறு பணிப்பாளர் நிர்வாகத்திற்கு அறிவுறுத்தினார், தாமதமான நேரத்தை மேவுகை செய்வதால் குறுகிய விடுமுறை எடுப்பதற்கான சாத்தியத்தன்மை காணப்படுவதில்லை என்பதை வலியுறுத்தினார். குறுகிய	

		விடுமுறையொன்று 1.5 மணித்தியாலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் மாதமொன்றிற்கு இரண்டு குறுகிய விடுமுறைகளை பெற்றுக்கொள்ள முடியும்.	
	4. AG இன் அறிக்கை - 2019 இன் விடய இல. 2.2 (wd), (நி.பி ஒழுங்குவிதி 128(1)(இ)) மற்றும் முகாமைத்துவ பதில்களின் விடய இல. 1, 6 (wd). • **2005 முதல் நடைமுறைக்கு வரும் முன்னைய SOR மற்றும் அவர்களின் சம்பளத்தின் அடிப்படையில் பதவி உயர்வுகள்** திரு.கருணாரத்னவின் நீண்ட விளக்கம் குறிப்புக்களின் பக்க இல. 5 மற்றும் 6 இல் (விடய இல. 04 இன் கீழ்) குறிப்பிடப்பட்டுள்ளது.	2010/05/25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வழங்கிய வழிகாட்டுதலின் பிரகாரம் எஸ்எல்ஏஈபீயின் பதவியணியினரின் சம்பளப் படிகள் மற்றும் அந்த உத்தியோகத்தர்களை சரியான சம்பளப் படியில் வைப்பது தொடர்பான அறிக்கையைத் தயாரிக்குமாறு AMC இன் தலைவர் பணிப்பாளர் நிர்வாகத்திற்கு பணித்தார். எனவே, AMC இன் தலைவர் இந்த அறிக்கையை பணிப்பாளர் நிர்வாகத்திற்கு இரண்டு வாரங்களுக்குள் பிரிவின் ஏனைய வழக்கமான பணிகளிற்கிடையே தயாரிக்குமாறு அறிவுறுத்தினார்.	
	• **தொழில்சார் படி பிரச்சனை** தொழில்சார் படி தொடர்பான சபை பத்திரம் ஏற்கனவே தீர்மானமொன்றிற்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்றும் இது போன்ற விடயங்களில் அதிக அறிவு கொண்ட திரு.கமல்பத்மசிறி (சபை உறுப்பினர்) அவர்களின் கவனமான பார்வைக்கு வாய்ப்பளிப்பதற்காக சபை இந்த விடயத்தை அடுத்த சபைக் கூட்டத்திற்கு மாற்றியிருந்தது என்றும் எஸ்எல்ஏஈபீயின் DG விளக்கினார். • **வாகன அனுமதிச்சீட்டு (Permit) வழங்கல்** எஸ்எல்ஏஈபீயின் முகாமைத்துவம் கணக்காய்வு ஐயவினா மூலம் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வாகன அனுமதிச் சீட்டைப் பெறுவதற்கான சலுகையை இன்னொரு 5 ஆண்டுகளுக்கு மாற்றுவதற்கு தீர்மானித்துள்ளது. அதனை ஏற்றுக்கொள்ளலாம். திரு.கருணாரத்ன - SA அவர்களின் 2 விடயங்கள் தொடர்பான விளக்கமானது குறிப்புக்களின் பக்கம் இல. 6 மற்றும் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.		

	5. AG இன் அறிக்கை - 2019 இன் விடய இல. 2.3 (அ) மற்றும் முகாமைத்துவ பதில்களின் விடய இல. 3, 4(அ). • **இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவுக்கான பரீட்சிப்புக் கட்டணங்களின் அதிகரிப்பு** SA இன் விளக்கம் குறிப்புக்களின் பக்கம் இல. 7 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.	எஸ்எல்ஏஈபீ இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் பரீட்சிப்புக் கட்டணங்களை 5 ஆண்டுகளுக்குப் பின்னர் அதிகரித்திருந்ததென AMC இன் தலைவர் விளக்கினார். நிறுவனம் முழுமையாக நிலைத்திருக்கும் வரை, எஸ்எல்ஏஈபீ இந்தக் கட்டணங்களைக் குறைக்கும் நிலையில் காணப்படவில்லை.	
	6. AG இன் அறிக்கை - 2019 இன் விடய இல. 2.4 (அ) மற்றும் முகாமைத்துவ பதில்களின் விடய இல. 3. 5 • பொது விடுமுறை நாட்கள் (வணிகத்திற்கானது அற்ற) எஸ்எல்ஏஈபீ கடை மற்றும் அலுவலக சட்டம் மற்றும் தாபன விதிக்கோவை இரண்டையும் பயன்படுத்துகிறது. எனினும் நியதிச்சட்ட சபைகள் தாபன விதிக்கோவையை சார்ந்திருக்க முடியாது. அதேநேரம், எஸ்எல்ஏஈபீ பதவியணியினர் வருடாந்த மிகையூதியம் மற்றும் விடுமுறையை காசாக்கல் இரண்டையும் எடுத்துக்கொள்கிறார்கள். எனவே, எஸ்எல்ஏஈபீ செயன்முறை கையேட்டைத் தயாரித்து, பொது முயற்சிகளிடமிருந்து தேவையான அங்கீகாரத்திற்காக அனுப்பியுள்ளது. பொது முயற்சிகள் MOP ஐ முன்பதிவு செய்து, இலங்கையில் உள்ள நியதிச்சட்ட அமைப்புக்கள் அனைத்திற்கும் பொதுவான திட்டத்தை அறிமுகப்படுத்தப் போவதாக அவர்கள் எஸ்எல்ஏஈபீ இற்கு அறிவித்துள்ளனர்.	AMC இன் தலைவர் இது ஒரு நல்ல நடைமுறை அல்ல என்று கூறினதுடன் பணிப்பாளர் நிர்வாகம் இது தொடர்பாக அடுத்த சபைக் கூட்டத்திற்கு சபை பத்திரமொன்றை சமர்ப்பிக்குமாறு பணித்திருந்தார்.	
	7. AG இன் அறிக்கை - 2019 இன் விடய இல. 2.5 (ஆ) மற்றும் முகாமைத்துவ பதில்களின் விடய இல. 1. 4 (4). • எஸ்சீ/எவ்ஆர்/662/2010 விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப செயலாளரால் வெளியிடப்பட்ட 2008/09/03 ஆம் திகதிய கடிதம் மற்றும் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2008/10/13 ஆம் திகதிய கடிதம் என்பவற்றில் சார்ந்துள்ளது என்று திரு.கருணாரத்ன கூறினார். எஸ்எல்ஏஈபீயின் சபை JM சம்பள அளவீட்டில் இருந்த அனைத்து உத்தியோகத்தர்களையும் MM சம்பள அளவீட்டில் வைப்பதற்கு தீர்மானித்திருந்தது. அத்தகைய தீர்மானத்தை "விவேறு அதிகாரம்" என்று	AMC இன் தலைவர் 2010/05/25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வழங்கிய வழிகாட்டுதலின் பிரகாரம் சரியான சம்பள படிநிலையில் உத்தியோகத்தர்களை வைப்பதற்கான அறிக்கையைத் தயாரிக்குமாறு பணிப்பாளர் நிர்வாகத்திற்கு ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்தார். அந்த அறிக்கையை தயாரித்த பின்னர் இந்த விடயத்தையும் தொடர்பு கொள்ளலாம். அந்த	

	விளக்க முடிவதுடன் அத் தீர்மானத்தை எடுப்பதற்கு சபைக்கு அத்தகைய அதிகாரம் இல்லை. மறுபுறம், அந்த சபை பத்திரம் பிழையாக வழிநடாத்துகிறதுடன் (BP:2016-07-99) சபை அத்தகைய தீர்மானத்தை எடுக்க முடியாததுடன் இது முழு நிர்வாக நடைமுறையையும் மீறுவதாகும்.	அறிக்கையை சபை பெற்றவுடன், இது தொடர்பாக சபை தீர்மானமொன்றை எடுக்க முடியும்.	
	8. AG இன் அறிக்கை - 2019 இன் விடய இல. 2.5 (அ) (iii) மற்றும் முகாமைத்துவ பதில்களின் விடய இல. 4.3 (ஆ) • செயல்நடவடிக்கைத் திட்டம் - எஸ்எல்ஜீசீ எஸ்எல்ஜீசீ ஒரே ஒரு வாடிக்கையாளரை மாத்திரமே (லாலன்) கொண்டுள்ளதாக திரு கருணாரத்ன விளக்கினார். அவர்கள் சுகாதார அமைச்சிடமிருந்து பின் உத்தரவாதத்தைப் பெறத் தவறினால், எஸ்எல்ஜீசீ அவர்களின் வணிகம் குறித்து தெளிவான யோசனையை கொண்டிருக்கவில்லை. லாலன் இன்னொரு 10 ஆண்டுகளுக்கு சுகாதார அமைச்சிடமிருந்து பின் உத்தரவாதம் பெற்றுள்ளார் என்றும், அதுவே இந்த நிலையில் நல்ல பாதுகாப்பு என்றும் பணிப்பாளர் நிதி விளக்கினார்.	AMC இன் தலைவர், கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்களை எழுதுவதில் சிக்கல் இருப்பதாகக் குறிப்பிட்டார். இந்த விடயத்தில் இன்னொரு 10 ஆண்டுகளுக்கு லாலனால் பின் உத்தரவாதம் பெறப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுவது அவசியமாகும். எனினும், இந்த விபரங்கள் அந்த பதிலில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் இது கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்களை வழங்குவதில் உள்ள பலவீனத்தை குறிக்கிறது.	
	9. AG இன் அறிக்கை - 2019 இன் விடய இல. 2.5 (ஊ) மற்றும் முகாமைத்துவ பதில்களின் விடய இல. 3.3 (ஆ) • களனி-பால செயற்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு வரிசை அமைச்சின் ஒத்துழைப்புடன் இவ் விடயத்தை தீர்ப்பதற்கு முயற்சிப்பதாக எஸ்எல்ஏஈபீ தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம் இது தொடர்பாக எஸ்எல்ஏஈபீ வழங்கிய பதிலை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் ஏற்றுக்கொண்டுள்ளது.		
	10. AG இன் அறிக்கை - 2019 இன் விடய இல. 3.6 (ஆ) மற்றும் முகாமைத்துவ பதில்களின் விடய இல. 3.8 (மீண்டெழும் செலவினம்) • பெறுகை திட்டம்		

	பெறுகைத் திட்டம் பற்றிய தெளிவான கருத்தை DG கொண்டிருக்க வேண்டியதுடன் இந்த திட்டம் மூன்று மாதங்களுக்குள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனவே, எஸ்எல்ஏஈபீ அளித்த பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது.		
	11. AG இன் அறிக்கை - 2019 இன் விடய இல. 3.9 • நிலைபேறான இலக்குகள் எஸ்எல்ஏஈபீ ஆல் நடாத்தப்படும் பல செயற்திட்டங்கள் உள்ளன என்று திரு.கருணாரத்ன விளக்கினார். எனவே, இச் செயற்திட்டங்களைச் அமுல்ப்படுத்துவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் முறையான திட்டமொன்று இருக்க வேண்டும்.	AMC இன் தலைவர், எஸ்எல்ஏஈபீ ஆல் கிடைக்கக்கூடிய மற்றும் நடாத்தப்பட இருக்கும் அனைத்து செயற்திட்டங்களையும் கருத்தில் கொண்டு, எஸ்எல்ஏஈபீ ஆல் நிலைபேறான இலக்குகளை அடைந்துகொள்வதற்கான வழி பற்றிய சபை பத்திரத்தை அடுத்த சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்குமாறு DGக்கு பரிந்துரைத்தார்.	
நிகழ்ச்சி நிரல் விடய இல. - 2020-03-18	**<u>ஏனைய ஏதேனும் வணிகம்</u>** 1. செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடுகள் யதார்த்தமாக இருக்க வேண்டும். அந்த செயற்பாட்டில் சில தடைகள் காணப்பட்டால் அதை தெளிவாக குறிப்பிட வேண்டும். கணக்காய்வு ஐயவினாக்களை குறைப்பதற்கு இது பெரிதும் பயனளிக்கிறது. 2. வருமான வரி முற்பணம் ரூபா 17,158. 3. இறுதியாக, AMC இன் தலைவர் அனைத்து கணக்காய்வு விடயங்களையும் இவ் விசேட கூட்டத்தின் மூலம் தீர்த்துக்கொள்ள முடிந்தது என்று வலியுறுத்தினார்.	---------- இந்த விடயத்தை தீர்ப்பதற்கு அடுத்த AMC இற்கு அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு AMC இன் தலைவர் பணிப்பாளர் நிதிக்கு பணித்தார். AMC இன் தலைவர், கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கூட்டமொன்று அவசியமில்லை என குறிப்பிட்டு, தலைவர் சார்பாக கடிதமொன்றை தயாரிக்குமாறு DG இற்கு பணித்திருந்தார். மேலும், AMC இன் தலைவர் அந்த கடிதத்திற்கு தேவையான அங்கீகாரம் மற்றும் தலைவரின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பணித்தார்.	

4.0 அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்

அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் நன்மைகள் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகள் மற்றும் பிரச்சனைகளிற்கு தீர்வுகளை வழங்க பயன்படுத்தும் போது உண்மையிலேயே உணரப்படுகின்றன. அரசாங்க நிறுவனமொன்றாக அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தனித்துவமான திறன்கள் காரணமாக எஸ்எல்ஏஈபீ அதன் சேவைகளை கைத்தொழில், விவசாயம், சுகாதாரம், சுற்றாடல் மற்றும் கல்வித் துறைகளிற்கு இணையற்ற நன்மையுடன் வழங்குகின்றது.

4.1 இலங்கை கமா நிலையம் - கமா கதிர்வீச்சு சேவைகள்



படம் 1: இலங்கை கமா நிலையம் - கமா கதிர்வீச்சு

இலங்கை கமா நிலையம் (எஸ்எல்ஜீசீ) மருத்துவத் துறை, உணவுத் துறை மற்றும் பொருந்தக்கூடிய ஏனைய துறைகளுக்கு அவற்றின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் கமா கதிர்வீச்சு சேவைகளை வழங்குகிறது.

2020 சனவரி 01 அளவில் கோபால்ட்-60 இன் ஆரம்ப செயற்பாடு 193.6 kCi ஆகவும், 2020 திசெம்பர் 31 அளவில் இறுதி செயற்பாடு 169.7 kCi ஆகவும் காணப்பட்டது. இலங்கையிலுள்ள அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிற்குமான சிகிச்சை கையுறைகளின் மொத்த தேவைப்பாட்டை பூர்த்தி செய்கின்ற சிகிச்சை கையுறை உற்பத்தியாளர் ஒருவரான லாலன் றபர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டால் கமா கதிர்வீச்சு சேவை முக்கியமாக பயன்படுத்தப்படுகிறது, 2020 ஆம் ஆண்டில் எஸ்எல்ஜீசீ ஆல் கதிர்வீச்சிடப்பட்ட சிகிச்சை கையுறைகளின் மொத்த அளவு 3493.28 m^3 ஆகும்.
Griptec, PET போத்தல்கள், Gauze Swabs, சிகிச்சை ஏப்ரன்கள் தயாரிக்கும் ஏனைய மருத்துவ தயாரிப்பு வாடிக்கையாளர்களுக்கு எஸ்எல்ஜீசீ ஆல் கதிர்வீச்சு சேவைகளை வழங்க முடிந்தது. எனவே 2020 ஆம் ஆண்டிற்குள் எஸ்எல்ஜீசீ இல் கதிர்வீச்சிடப்பட்ட மருத்துவ சாதனங்களின் மொத்த அளவு 3539.48 m^3 ஆக காணப்பட்டது. துணை கென்வேயர் (மாதிரி கென்வேயர்) சிறிய அளவிலான வாடிக்கையாளர்களால் கமா கதிர்வீச்சுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

சானிட்டரி நப்கின்கள், சிறுநீர் சேகரிப்பு பைகள், போத்தல்கள், சிகிச்சை ஏப்ரான்கள், substrate தூள் மற்றும் பொலிதீன் பைகள் உள்ளடங்கிய மருத்துவ வகைப்படுத்தல்களின் கீழ் வருகின்ற வெவ்வேறு தயாரிப்புக்கள், உணவு, தாவர மூலப்பொருட்கள், பொதியிடல் மூலப்பொருட்கள் ஆகியன துணை கென்வேயரைப் பயன்படுத்தி கதிர்வீச்சிடப்பட்டன.

4.2 வாழ்க்கை விஞ்ஞான பிரிவு – அணுப் பகுப்பாய்வு பரிசோதனை சேவைகள்

எஸ்எல்ஜீசீ ஆல் அதன் வணிக அளவிலான செயற்பாடுகள் மூலம் ரூபா 46.86 தொகையை உழைக்க முடிந்தது. துணை கென்வேயர் (ஆராய்ச்சி கென்வேயர்) கதிர்வீச்சின் விளைவாக ரூபா 0.44 தொகையான வருமானம் காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் மொத்த வருமானம் ரூபா 47.30 ஆகும்.

எஸ்எல்ஜீசீயில் கதிர்வீச்சிடப்பட்ட ஒவ்வொரு தயாரிப்புக்கும் வழக்கமான Dose உறுதிப்பாடு டொசிமெட்ரி ஆய்வுகூடத்தால் மேற்கொள்ளப்பட்டது. டொசிமெட்ரி ஆய்வுகூடம் ஆராய்ச்சி மாணவர்களுக்காக குறைந்த doses இற்கான உணவுப் பொருட்களை கதிர்வீச்சிடுவதன் மூலம் உதவியது.

ஊழியர்கள், சுற்றாடல் மற்றும் பொதுமக்களை தேவையற்ற கதிர்வீச்சு வெளிப்பாடுகளிலிருந்து பாதுகாக்கும் வசதியின் ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு கலாச்சாரத்தை காலரீதியாக மற்றும் நன்கு நிறுவப்பட்ட ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு தேவைப்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன. எஸ்எல்ஜீசீயில் கதிர்வீச்சு வசதி தொடர்பான பரீட்சிப்பு மற்றும் கதிர்வீச்சு கணக்கெடுப்பை இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை (எஸ்எல்ஏஈஆர்சீ) நடாத்தியது.

எஸ்எல்ஜீசீயில் தர முகாமைத்துவ முறைமைகளை பேணுவதற்காக ஐஎஸ்ஓ 13485:2016 இன் வெளிப்புற கணக்காய்வொன்றை சான்றளிப்பு அமைப்பு அசென்ட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் மேற்கொண்டதுடன் ஐஎஸ்ஓ 9001:2015 இன் கண்காணிப்பு கணக்காய்வு இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் (எஸ்எல்எஸ்ஐ) கணக்காய்வாளர்களால் நடாத்தப்பட்டது. காலரீதியான கணக்காய்வுகள் ஊடாக எஸ்எல்ஜீசீ வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவையை வழங்கி அதன் தர முகாமைத்துவ முறைமைகளை தொடர்ந்து பேண முடிந்தது,

கொவிட் 19 பரவியதன் காரணமாக, வாடிக்கையாளர்களுடன் வணிக கலந்துரையாடல்களைத் எஸ்எல்ஜீசீ ஆல் தொடங்க முடியாதிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்குள் உள்நாட்டில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியவில்லை. எனினும், கொவிட் 19 தொற்றுநோயின் போது நேரடியாக ஈடுபடுகின்ற சுகாதார பணியாளர்களிற்கு உதவுகின்ற சுகாதார பராமரிப்பு உற்பத்திப்பொருட்கள் கதிர்வீச்சிடப்பட வேண்டும் என விரும்புகின்ற சில ஆலோசனையாளர்களிடம் இருந்து பல விசாரணைகள் காணப்பட்டன. ஆனால் அதிகப்படியான கதிரியக்க வளமூல வலிமை கிடைக்காததால், எந்த நடவடிக்கையும் காணப்படாத அதே நேரம் Co-60 கதிரியக்க வளமூலத்தை 250 kCi ஆல் தரமுயர்த்துவதற்கு நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் பூர்வாங்க தயாரிப்பு பணிகள் 2020 இல் மேற்கொள்ளப்பட்டன.



படம் 2: இலங்கை கமா நிலையம் - கமா கதிர்வீச்சு

வாழ்க்கை விஞ்ஞான பிரிவில் (எல்எஸ்டி) கிடைக்கக்கூடிய அணுசக்தி பகுப்பாய்வு சோதனை சேவைகள் ஆராய்ச்சி மற்றும் ஒழுங்குமுறை நோக்கங்களுக்காக அதிநவீன அணுப் பகுப்பாய்வு மற்றும் தொடர்புடைய நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன, முடிவுகளின் துல்லியம் மற்றும் செயற்திறனில் அதிக கவனம் செலுத்துகின்றன.

வர்த்தகம் மற்றும் ஏற்றுமதிகளுக்கு முன்னர் உற்பத்திப்பொருட்களின் கதிரியக்கமற்ற தன்மை தொடர்பான சான்றளிப்பிற்காக இவை பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய தொழில்நுட்பங்களுடன் ஒப்பிடும் போது, அணு மற்றும் ஐசோடோபிக் பகுப்பாய்வு நுட்பங்கள் பரந்த அளவிலான சேர்மங்கள் மற்றும் கூறுகளில் வேகமானதும் அதிக துல்லியமானதுமான முடிவுகளைத் தரும் நன்மையை வழங்குகின்றன. மேலும், அதன் அழிவில்லாத திறன் மாதிரி சேதம் அல்லது மீளமுடியாத அபாயத்தை நீக்குகிறது.

இந்த பகுப்பாய்வு சேவைகள் நன்கு நிறுவப்பட்ட பகுப்பாய்வு ஆய்வுகூடங்கள் மூலம் வழங்கப்படுகின்றன; அவை கமா ஸ்பெக்ட்ரோமெட்ரி ஆய்வுகூடம், எக்ஸ்ஆர்எவ் (எக்ஸ்-ரே ப்ளோரசன்ஸ்) ஆய்வுகூடம், ஆல்பா ஸ்பெக்ட்ரோமெட்ரி & மொத்த ஆல்பா பீட்டா ஆய்வுகூடம், ஐசிபி-எம்எஸ் ஆய்வுகூடம் மற்றும் ஐஆர்-எம்எஸ் ஆய்வுகூடம் ஆகிய பெயர்களினாலானவை ஆகும். கிடைக்கக்கூடிய பகுப்பாய்வுக் கருவிகளில், கமா Spectrometers, (High-Purity Germanium detectors (HPGe), சோடியம் அயோடைட் கண்டுபிடிப்பாண்கள்), எக்ஸ்ஆர்எவ் (எரிசக்தி பரவக்கூடிய எக்ஸ்-ரே ப்ளோரசன்ஸ் ஸ்பெக்ட்ரோமீட்டர், மொத்த உள் பிரதிபலிப்பு எக்ஸ்ஆர்எவ் மற்றும் எடுத்துச்செல்லக்கூடிய எக்ஸ்ஆர்எவ்), மொத்த ஆல்பா பீட்டா கணக்கெடுப்பான், 08 கண்டுபிடிப்பான்களுடன் கூடிய ஆல்பா ஸ்பெக்ட்ரோமீட்டர், Inductive Coupled Plasma Mass Spectrometer (ICP-MS) மற்றும் ஐசோடோப் விகித மாஸ் ஸ்பெக்ட்ரோமீட்டர் (ஐஆர்எம்எஸ்).

இதுவரை எல்எஸ்டி ஆல் வழங்கப்பட்ட பகுப்பாய்வு சேவைகளை சோதனை நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்:

(i) இயற்கையான கதிரியக்க அளவுகளை தீர்மானித்தல்.

(ii) கதிரியக்க மாசு ஏதேனும் இருப்பதை சரிபார்த்தல்.

(iii) கண்டுபிடிக்கப்பட்ட தனிமங்களின் செறிவின் கலவை அல்லது அளவை நிர்ணயிப்பதற்கான மாதிரிகளில் உள்ள தனிமங்களை அடையாளம் காணுதல்.

(iv) நிலையான ஐசோடோப் பகுப்பாய்வு

எல்எஸ்டி 2020 ஆம் ஆண்டில் 4167 மாதிரிகளை சோதனை செய்வதன் மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறை, உள்ளூர் கைத்தொழில்கள் மற்றும் R&D நிறுவனங்களுக்கு பகுப்பாய்வு சேவைகளை வழங்கியுள்ளது. 2015 தொடக்கம் 2020 வரை பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை படம் 3 இல் காட்டப்பட்டுள்ளது.

படம் 3: 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை எல்எஸ்டியால் சோதனையிடப்பட்ட மாதிரிகளின் மொத்த எண்ணிக்கை

மாதிரிகளின் வகைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன;

- இறக்குமதியாளர்களிடமிருந்தான பால் உற்பத்திப்பொருட்கள்
- தேயிலை, உலர்ந்த தேங்காய்/ தேங்காய், ஏற்றுமதியாளர்களிடமிருந்தான மசாலா பொருட்கள்
- நீர், மண் போன்ற சுற்றாடல் மாதிரிகள் மற்றும் கைத்தொழில் துறையிலிருந்தான குறித்துரைக்கப்பட்ட alloy/உலோக பொருட்கள்


மேலும் எல்எஸ்டி வருடாந்தம் R & D செயற்திட்டங்களுக்கு தேவையான பகுப்பாய்வு தரவை வழங்குகிறது. முன்னர் குறிப்பிடப்பட்ட மூலப்பொருள் வகைகளில் இந்த பகுப்பாய்வு நுட்பங்களைப் பயன்படுத்துவதன் முக்கிய நோக்கங்கள் மேலும் எல்எஸ்டி ஆனது முழு கிரீம் முதல் குழந்தை பால்மா வரையான வீச்சில் உள்நாட்டில் தயாரிக்கப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் உள்ள கதிரியக்க மாசுபாட்டை சோதிப்பதில் ஈடுபட்டுள்ளது.

இந் நடவடிக்கையின் கீழ், 2020 சனவரி முதல் 12 மாவட்டங்களை உள்ளடக்கிய உள்ளூர் சந்தையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் 65 மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, திட்டமிட்டவாறு தொடர முடியாததால், இந்நிகழ்ச்சித்திட்டம்

இடையிலேயே தடைப்பட்டது. எனினும், 2020 ஆம் ஆண்டில் கதிரியக்க மாசுபாட்டிற்காக 35 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

அளவிடப்பட்ட கதிரியக்க அளவுகள் 1995.07.21 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இருக்க வேண்டுமென கண்டறியப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் இப் பகுப்பாய்வு சேவைகளின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 53.7 மில்லியனாக இருந்ததுடன் 2010 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதியின் போது அவற்றிலிருந்து ஈட்டப்பட்ட வருமானத்தின் போக்கு பகுப்பாய்வு படம் 4 இல் வரைபடமாகக் காட்டப்பட்டுள்ளது.



படம் 4 : எல்எஸ்டி ஆல் 2015 தொடக்கம் 2020 வரை ஈட்டப்பட்ட வருமானம்

சுவடு கூறு பகுப்பாய்வு மற்றும் நிலையான ஐசோடோப் பகுப்பாய்வுக்காக புதிதாக நிறுவப்பட்ட ஆய்வுகூடங்கள், அதன் வழக்கமான பகுப்பாய்வு சேவைகளைத் தொடங்கியுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (சீஈஏ) ஒழுங்குமுறை தேவைப்பாடுகளின் கீழ் கழிவுநீருக்கான மொத்த ஆல்பா பீட்டா அளவீடுகளுக்கான பகுப்பாய்வு சேவை தொடங்கப்பட்டுள்ளது. எமது ஆய்வுகூடங்கள் 2020 இல் உள்ளவாறு சுற்றாடல் மாசு கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவத்திற்கான ஆலோசனையாளராக சீஈஏ இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கமா ஸ்பெக்ட்ரோமெட்ரி ஆய்வுகூடம் 2006 முதல் ISO IEC 17025:2005 பரிசோதனை ஆய்வுகூடத்திற்கான சர்வதே தராதர அங்கீகாரத்தின் பிரகாரம் தர முகாமைத்துவ முறைமையை (கியூஎம்எஸ்) பேணி வருகிறது, 2020 பெப்ரவரியில் ISO IEC 17025:2017 இன் புதிய பதிப்பின் பிரகாரம் அனைத்து ஆவணங்கள் மற்றும் செயன்முறைகள் உட்பட கியூஎம்எஸ் தரமுயர்த்தப்பட்டது.

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நடாத்தப்படும் QA/QC நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்ந்து பங்கேற்பதன் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட தர முகாமைத்துவ முறைமையை எல்எஸ்டி ஆல் மேலும் வலுப்படுத்த முடிந்தது. இந்த ஆய்வுகூடங்கள் உள்ளக மற்றும் வெளியக புலமை சோதனை பயிற்சிகள், தர கணக்காய்வு, இலங்கை தாரதர அங்கீகார சபை (எஸ்எல்ஏபீ) மற்றும் ஐஏஈஏ ஆல் நடாத்தப்படும் வழக்கமான மதிப்பீடுகளில் பங்குபற்றியிருந்தன.

செல்லுபடியாகும் சோதனை முடிவுகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கு தேவையான தொழில்நுட்ப திறன் மற்றும் முகாமைத்துவ திறன்கள் இரண்டையும் எல்எஸ்டி நிரூபித்துள்ளது.

எஸ்எஸ்டி ஆல் மேற்கொள்ளப்பட்ட R & D செயற்பாடுகள்:

தேசிய சமூக-பொருளாதார நலனை முன்னேற்றுவதற்கான இலங்கையின் முயற்சிகளின் முன்னணியில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முக்கிய பங்கு வகிக்கிறது. அணு மற்றும் கதிர்வீச்சு பயன்பாடுகளானது விவசாயத்தில் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், சிறந்த மருத்துவ சேவைகளை

வழங்குதல், கைத்தொழில்துறை உற்பத்திப்பொருட்களின் தரம் மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் சுற்றாடலைப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

உலகலாவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக திட்டமிட்டவாறு R & D பணியை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(i) "இலங்கை தேயிலை" இன் தோற்றத்தை சரிபார்த்தல் தொடர்பான புவி இரசாயனவியல் அணுகுமுறை குறித்த ஆரம்ப செயற்திட்டம்

2020 திசெம்பர் 18 இல் மேற்படி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு எஸ்எல்ஏஈபீ, இலங்கை தேயிலை சபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே முத்தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. (படம் 5).

இச் செயற்திட்டமானது இலங்கை தேயிலையை ஏனைய தோற்றத் தேயிலையிலிருந்து வேறுபடுத்துவதற்கு ஐசோடோப் பண்பு மற்றும் தனிம கலவையின் அடிப்படையில் விஞ்ஞானவியல் சரிபார்ப்பு முறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



படம் 5 : முத்தரப்பினரால் முத்தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுதல்

இம்முறையில் பயன்படுத்தப்படும் முக்கிய அணுக்கரு பகுப்பாய்வு நுட்பங்கள் அடிப்படை பகுப்பாய்வுக்கான ICP-MS மற்றும் தேநீரின் ஐசோடோப் பண்பை கண்டறிவதற்கான ஐஆர்எம்எஸ் என்பனவாகும்.

இந்த உடன்படிக்கை ஒவ்வொரு தரப்பினரினதும் வகிபங்குகள் மற்றும் பொறுப்புக்கள், மாதிரி மூலோபாயங்கள் மற்றும் செயற்திட்டத்திற்கான நிதியிடல் பொறிமுறை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகிறது. 2021 சனவரி முதல் நாட்டின் அனைத்து தேயிலை விளையும் பகுதிகளான அதிக விளைச்சல், நடுத்தர விளைச்சல் மற்றும் குறைந்த விளைச்சல் தேயிலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், முன்னணி தேயிலை தொழிற்சாலைகளிலிருந்து வெவ்வேறு தரங்களுடன் கூடிய மரபுவழி கருப்பு தேயிலை மாதிரிகளை சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இச் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் விளைவு, உலக தேயிலை அரங்கில் இலங்கை தேயிலையின் உயர் தரத்தை பேணுவதும், அதிக விலையை அடைந்துகொள்வதும், இலங்கை தேயிலையை உலக சந்தையில் பாதுகாப்பதற்காக குறிப்பிட்ட புவியியல் அடையாளத்தின் (GI) உற்பத்தியாக இலங்கை தேயிலையை பதிவு செய்வதற்கு ஆதரவளிப்பதும் ஆகும்.

(ii) தொழில்துறை தளம், பியகம ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தில் காற்றின் தர கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை முதலீட்டுச் சபையால் (BOI) நிர்வகிக்கப்படும் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் (06°57"53.8380" N, 080°00"16.6500" E) காற்றின் தரக் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாதிரி கருவி (GENT மாதிரி) வலயம் பீ இல் அமைந்துள்ள பணிப்பாளரின் விடுதி வளாகத்தில் நிறுவப்பட்டது.

காற்றில் உள்ள காற்று துகள்கள் (APM) நேர்த்தியான மற்றும் கரடுமுரடான, துளை அளவு முறையே <0.4 µm மற்றும் 8 µm காற்று வடிகட்டிகளில் சேகரிக்கப்பட்டது. 2018 நவம்பர் முதல் 2020 செப்தெம்பர் வரை வாரத்திற்கு ஒருமுறை மாதிரி அதிர்வெண்ணுடன் மொத்தம் 160 வடிகட்டிகள் (80 சோடி நேர்த்தியான மற்றும் கரடுமுரடான வடிகட்டி மாதிரிகள்) சேகரிக்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டில், 2020 செப்தெம்பர் 15 வரை, 22 சோடி நேர்த்தியான மற்றும் கரடுமுரடான வடிகட்டி மாதிரிகள் (மொத்தம் 44 வடிப்பான்கள்) ஒரு வாரத்திற்கு ஒரு முறை மாதிரி அதிர்வெண்ணுடன் சேகரிக்கப்பட்டன. இக் காலப்பகுதியின் போது சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக வரையறுக்கப்பட்டுள்ளது. 2020 மார்ச் முதல் 2020 மே வரை முழு நாடும் பூட்டப்பட்டதுடன் அதன் பின்னர், உலகளாவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக வேலை நாட்கள் மற்றும் வேலை மணித்தியாலங்கள் மட்டுப்படுத்தப்பட்டது.

சேகரிக்கப்பட்ட நேர்த்தியான மற்றும் கரடுமுரடான வடிப்பான்களின் கிராவிமெட்ரிக் (gravimetric) அளவீடுகள் PM 2.5 மற்றும; PM 10 ஐக் கணிப்பிடுவதற்காக செய்யப்பட்டதுடன் ED-XRF நுட்பத்தைப் பயன்படுத்தி 44 நேர்த்தியான வடிப்பான்களுக்கான அடிப்படை அளவீடுகள் இந்தோனேசியாவின் (BATAN) பயன்பாட்டு அணு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தேசிய அணுசக்தி முகவராண்மைக்கான நிலைத்தின் ஒரு வகை பங்களிப்பாக மேற்கொள்ளப்பட்டன.


இலங்கை அணுசக்தி சபை (எஸ்எல்ஏஈபீ) மற்றும் இந்தோனேசியாவின் (BATAN) பயன்பாட்டு அணு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தேசிய அணுசக்தி முகவராண்மைக்கான நிலையம் ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (MOU) 2019 யூன் 24-26 இல் மங்கோலியாவின் உலான்பாதரில் நடைபெற்ற ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு கூட்டதின் போது பரிந்துரைக்கப்பட்டவாறு இலங்கையில் காற்று மாசுபாடு ஆய்வுகளுக்கு உதவுவதற்கு பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி கையொப்பமிடும் நிலை வரை முன்னேறவில்லை.

வடிப்பான்களில் பதினாறு தனிமங்கள் (Al, Si, S, K, Ca, Ti, V, Cr, Mn, Fe, Ni, Cu, Z, Pb, As, மற்றும் Cl போன்றவை) கண்டறியப்பட்டுள்ளன.

மேற்பரப்பு மண் மற்றும் பயிர்கள் போன்ற சுற்றாடல் மாதிரிகள் 2019 (1வது - 2வது காலாண்டு) மற்றும் 2020 (2வது காலாண்டு) இல் பியகம கைத்தொழில் வலயத்தின் அருகிலுள்ள பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்டன. பதினான்கு (14) மேற்பரப்பு மண் மாதிரிகள் (APM மாதிரி தளம் மற்றும் அருகிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து) மற்றும் இருபத்தி இரண்டு (22) தாவர (பழங்கள் மற்றும் காய்கறிகள்) மாதிரிகள் கன உலோக பகுப்பாய்விற்கு (தெரிவுசெய்யப்பட்ட Mn, Fe, Cr, Co, Ni, Cu, Zn, As, Hg மற்றும் Pb போன்ற கன உலோகங்கள்) இலங்கை அணுசக்தி சபை ஆய்வுகூடங்களின் தயாரிக்கப்பட்டன. தற்போதுள்ள ED-XRF ஐப் பயன்படுத்தி கன உலோகப் பகுப்பாய்விற்காக மாதிரித் துகள்களைத் தயாரிப்பதற்கு <63 µm நேர்த்தியான துகள்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்பரப்பு மண் மாதிரிகள் அடுப்பில் உலர்த்தப்பட்டு சல்லடை செய்யப்பட்டன. பயிர் மாதிரிகள் சுத்தம் செய்யப்பட்டன. ED-XRF ஐப் பயன்படுத்தி பகுப்பாய்விற்கு முனனர் அகேட் ஆலையைப் பயன்படுத்தி அடுப்பில் உலர்த்தப்பட்டு தூள் செய்யப்பட்டது. QA/QCக்கு சான்றளிக்கப்பட்ட குறிப்பு பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.

பயிர் மாதிரிகளில் பெறப்பட்ட தனிம செறிவுகளின் பிரகாரம், காடை புல் (quail grass) மாதிரியில் அதிக தனிம செறிவு அவதானிக்கப்பட்டது. பகுப்பாய்வு செய்யப்பட்ட காய்கறிகளைக் கருத்தில் கொள்ளும்போது, குளிர்கால செர்றி > முட்டைச் செடி > கீரை > கத்தரிக்காய் > பாகற்காய் போன்றவற்றில் அதிக Fe தனிம செறிவுகள் காணப்பட்டன. WHO தரநிலையின் (1996) பிரகாரம்

ஆய்வு செய்யப்பட்ட தாவர மாதிரிகளில் உள்ள Cu, Zn மற்றும் Pb இன் பதிவு செய்யப்பட்ட அளவுகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட வரம்புகள் கீழே விளக்கப்பட்டுள்ளன (படம் 6).



படம் 6: தாவர மாதிரிகளில் தாமிரம், துத்தநாகம் மற்றும் ஈயம் ஆகிய தனிமங்களின் செறிவில் ஏற்படும் மாற்றங்கள்

மண் மற்றும் காய்கறிகளில் கனரக உலோகங்களின் அதிகபட்ச அனுமதிக்கக்கூடிய வரம்புகள் கீழே உள்ள அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) போன்ற நியம ஒழுங்குமுறை அமைப்புக்களால் நிறுவப்பட்டுள்ளன:

Elements	*Target value of soil (mg/kg)	***Permissible value of plant (mg/kg)
Cd	0.8	0.02
Zn	50	0.60
Cu	36	10
Cr	100	1.30
Pb	85	2
Ni	35	10

அட்டவணை 1: மண் மற்றும் காய்கறிகளில் கன உலோகங்களின் அதிகபட்ச அனுமதிக்கக்கூடிய வரம்புகள்

வெளியீடுகளின் பட்டியல் - 2020

1. **டபிள்யூ.ஏ.ரீ.எல். வீரக்கொடி, சீ.கே. திஸாநாயக்க,** ஏ.ஜீ. சந்திரபால, **எம்.டி. கல்பகே, ரீ.என். அத்தநாயக்க,** கே.எம்.ஏ. கெந்தரகம - இலங்கையின் டொலோஸ்பேஜில் பயிரிடப்பட்ட நுண்ணிய நீர்பிடிப்பு நிலத்தில் சீசியம்-137 மற்றும் ஈயம்-210 ஆகியவற்றைப் பயன்படுத்தி மண் அரிப்பை மதிப்பிடுதல், ஸ்பெயினின் பார்சிலோனாவில் 2020 நவம்பர் 25 - 26 இல் மண், செடி மற்றும் நீர் விஞ்ஞானம் தொடர்பான 4 வது வருடாந்த மாநாடு (வாய்வழி விளக்கக்காட்சி).

2. **டபிள்யூ.ஏ.ரீ.எல். வீரக்கொடி, சீ.கே. திஸாநாயக்க,** ஏ.ஜீ. சந்திரபால, எம்.டி. கல்பகே, **ரீ.என். அத்தநாயக்க,** கே.எம்.ஏ. கெந்தரகம, ஹெட்டியாராச்சி ஏ.கே. (2020) இலங்கையின் டொலோஸ்பேஜில் பயிரிடப்பட்ட நுண்ணிய நீர்ப்பிடிப்பு நிலத்தில் சீசியம்-137 மற்றும் ஈயம்-210 ஐப் பயன்படுத்தி மண் அரிப்பை மதிப்பிடுதல், சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் நச்சுயியல் ஆராய்ச்சிக்கான சர்வதேச இதழ் தொகுதி. 9(3) பக். 51-61, 2020 ஒக்தோபர். (தாக்கக் காரணி= 1.12). https://www.interesjournals.org/research-environmental-science-toxicology/articles-in-press.html.

3. ஏ.ஜீ. சந்திரபால, **சி.கே. திஸாநாயக்க,** கே.எம்.ஏ. கெந்தரகம, எஸ்.கே. வெத்தசிங்க, **எம்.டி. கல்பகே**, **ஏ.எம்.ரீ.என். அத்தநாயக்க,** ஏ.கே. ஹெட்டியாராச்சி. அணு நுட்பங்களை பயன்படுத்தி நாளந்த நீர்த்தேக்க நீர்ப்பிடிப்பு மற்றும் குருவிட்ட, களுகங்கை உப நீர்ப்பிடிப்புகளில் வெவ்வேறு நிலப் பயன்பாடுகளின் கீழ் மண் அரிப்பை மதிப்பீடு செய்தல், இலங்கை விவசாயத் திணைக்களத்தின் பதிவறிக்கைகள் (ASDA 2020) pp11 (22).

4. டானியா வர்ணகுலசூரிய, செனனி வில்லியம்ஸ், **திவங்க வீரக்கொடி**, மங்களா தபரெற, குசும் ரொட்ரிகோ, **வஜிரா வதுகே,** திலீப எதிரிவீர, நிரோஷன் சிறிவர்தன மற்றும் ராஜித விக்கிரமசிங்க (2020) இலங்கையில் கனிம மணல் சுரங்க தொழிற்சாலையொன்றிற்கு அருகே பின்னணி கதிர்வீச்சு நிலைகள்: MICRONUCLEI அதிர்வெண்ணுடன் கதிர்வீச்சு அளவீடுகளின் இணைப்பு. *கதிர்வீச்சு பாதுகாப்பு டொசிமெட்ரி* (2020), தொகுதி. 189, இல. 1, பக். 114–126 (தாக்கக் காரணி=1.0)

5. மண்ணில் இயற்கையாக நிகழும் கதிரியக்கப் பொருட்களின் (NORM) K-40, Th-232 மற்றும் U-238 ஆகியவற்றை அளவிடுவதற்கான இன்-சிட்டு கமா ஸ்பெக்ட்ரோஸ்கொபியின் முறை சரிபார்ப்பு. **DABARE, *Poshitha*** *(இலங்கை அணுசக்தி சபை); பேராசிரியர் மஹவத்த, பாலி (கொழும்பு பல்கலைக்கழகம், அணு விஞ்ஞான துறை, இலங்கை); திரு மஹாகுமார, பிரசாத் தனஞ்சய (இலங்கை அணுசக்தி சபை),* இயற்கையாக நிகழும் கதிரியக்க மூலப்பொருட்களின் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு (NORM), 2020 ஒக்தோபர் 19-30, வியன்னா, ஆஸ்திரியா 2020 வெளியிடுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது/ சமர்ப்பிக்கப்பட்டது:

6. இல்யா ஸ்ட்ராஷ்னோவா, நுவான் பண்டார கருணாரத்ன, பியகமகே ருச்சிக பெர்னாண்டோ, **சம்பா திஸாநாயக்க, கசுன் மதுசங்க பிந்துஹேவா.** பால்மாவில் உள்ள மெலமைனைக் கண்டறிவதற்கான Isotope Dilution Liquid Chromatography-Mass Spectrometry முறையொன்று. இதழ்: உணவு சேர்க்கைகள் மற்றும் அசுத்தங்கள்

7. ***திவங்க வீரக்கொடி, சம்பா திஸாநாயக்க,*** *ஏ.ஜி. சந்திரபால,* ***மஹேஷிகா கல்பகே, திலகா அத்தநாயக்க, இந்திராணி திசாநாயக்க, கசுன் பிந்துஹேவா*** *(2021)* இலங்கை இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட பிரதேசத்தில் நிலப்பரப்பு கதிர்வீச்சு அளவின் நிர்ணயிப்பு கமா ஸ்பெக்ட்ரோமெட்ரி பகுப்பாய்வு **கதிர்வீச்சு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பான இரண்டாவது சர்வதேச மாநாட்டில்** (ICARST-2021) சமர்ப்பிக்கப்பட்டது.

8. ஏ.ஜீ.சந்திரபால, **சி.கே. திஸாநாயக்க,** கே.எம்.ஏ. கெந்தரகம, எஸ்.கே. வெத்தசிங்க, **எம்.டி.கல்பகே, ஏ.எம்.ரீ.என். அத்தநாயக்க,** ஏ.கே. ஹெட்டியாராச்சி. நாளந்த நீர்த்தேக்க நீர்ப்பிடிப்பு மற்றும் குருவிட்ட, களுகங்கை துணை நீர்ப்பிடிப்புகளில் அணு நுட்பங்களைப் பயன்படுத்தி வெவ்வேறு நிலப் பயன்பாடுகளின் கீழ் மண் அரிப்பு மதிப்பீடு (2020) Tropical Agriculturist இதழில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9. **திவங்க வீரக்கொடி, லக்மாலி ஹந்தகிரிபத்திர, போஷித தாபரே, திசரி குருகே** (2021) iSolo ஆல்பா/பீட்டா எண்ணுதல் முறைமை மூலம் நீர் மாதிரிகளில் மொத்த அல்பா மற்றும் மொத்த பீட்டா செயற்பாட்டை தீர்மானித்தல் ICRER 2021 இல் வாய்வழி விளக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது : **2021** யூன் 21-22 இல் ஆஸ்திரியாவின் வியன்னாவில் கதிரியக்கவியல் மற்றும் சுற்றாடல் கதிரியக்கத்தின் 23வது சர்வதேச மாநாடு நடைபெறும்.

10. **திவங்க வீரக்கொடி, சம்பா திஸாநாயக்க,** ஏ.ஜி.சந்திரபால, **மஹேஷிகா கல்பகே, திலகா அத்தநாயக்க, இந்திராணி திசாநாயக்க, கசுன் பிந்துஹேவ** (2021) ‘‘இலங்கையின் வடமேல் மாகாணத்தின் பத்தலேகொடவில் நிலப்பரப்பு பின்னணி கதிர்வீச்சு ஆய்வு’’ 2021 யூன் 14 முதல் 18 வரை பல்வேறு ஆராய்ச்சித் துறைகளில் கதிர்வீச்சு (RAD 2021), *Herceg Novi, Montenegro* தொடர்பான ஒன்பதாவது சர்வதேச **வாய்மொழி விளக்கக்கூட்டத்தில்** ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

4.3 அழிவு எதிர்ப்பு சோதனைக்கான தேசிய நிலையம் - என்டிரீ சேவைகள



படம் 7: எஸ்எல்ஏஈபீயின் என்சீஎன்டிரீ

இலங்கை அணுசக்தி சபையின் அழிவு எதிர்ப்பு சோதனைக்கான தேசிய நிலையம் இலங்கையில் உள்ள அரசு மற்றும் தனியார் துறைகளுக்கு அழிவில்லாத சோதனை (என்டிரீ) சேவைகளை வழங்கும் அரசுக்கு சொந்தமான நிறுவனமாகும்.

என்சிஎன்டிரீ இன் பிரதான நோக்கம் என்டிரீ தொடர்பான பயிற்சி மற்றும் பரீட்சிப்பு சேவைகளை வழங்குவதாகும். சிவில் பொறியியல் மற்றும் கைத்தொழில்துறை என்பவற்றிற்கு அழிவில்லாத மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்களின் சேவைகளை வழங்கி சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் பிரகாரம் நன்கு நிறுவப்பட்ட தராதர அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடங்கள் இருக்க வேண்டும் என இது எதிர்பார்க்கிறது. (படம் 7).

4.3.1 பயிற்சி மற்றும் சான்றளிப்பு சேவைகள்

என்டிரீ பயிற்சி இயலளவுகளை ஊக்குவிக்கும் போது ISO9712, "அழிவு எதிர்ப்பு சோதனை – பணியாளர்களின் தகைமை மற்றும் சான்றளிப்பு" மற்றும் ISO/IEC 17024, "ஒத்தியல்பு மதிப்பீடு – நபர்களின் சான்றளிப்பை செயற்படுத்தும் அமைப்புக்களிற்கான பொதுத் தேவைப்பாடுகள்" இன் தேவைப்பாடுகளிற்கிணங்க என்டிரீ பணியாளர்களின் தகைமை மற்றும் சான்றளிப்பிற்கான தேசிய சான்றளிப்பு அமைப்பு (சீபீஎன்டிரீ) ஒன்றை ஸ்தாபிப்பதற்கு எஸ்எல்ஏஈபீ வசதியளித்திருந்தது.

இந்த சீபீஎன்டிரீ இற்கு ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையால் (எஸ்எல்ஏபீ) பணியாளர் சான்றளிப்பு அமைப்பொன்றாக (பிசீபீ) தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் இது அழிவு எதிர்ப்பு சோதனைக்கான சர்வதேசக் குழுவின் (ஐசீஎன்டிரீ) கீழ் பதிவுசெய்யப்பட்ட பிசீபீ ஆக உள்ளதுடன் ஐசீஎன்டிரீ பலதரப்பு அங்கீகார உடன்படிக்கை (எம்ஆர்ஏ) அட்டவணை 2 இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.

ISO 9712 இன் பிரகாரம் சீபீஎன்டிரீயால் நடாத்தப்படுகின்ற தகைமை மற்றும் சான்றளிப்பு செயன்முறையை எதிர்கொள்வதற்கு அதன் பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்களை அனுமதிப்பதற்காக என்சீஎன்டிரீ இன் என்டிரீ பயிற்சி பிரிவு நடாத்திய என்டிரீ சான்றளிப்பு பயிற்சி கற்கைநெறிகள் சீபீஎன்டிரீ ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.


மேலும், என்சீஎன்டிரீ நடாத்திய சான்றளிப்பு கற்கைநெறிகள் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்

கல்வி மற்றும் தொழிற்கல்வி அதிகாரச்சட்டம் மற்றும் 1995 செப்தெம்பர் 7 ஆம் திகதிய 887/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டம் என்பவற்றின் பிரகாரம் பதிவு செய்யப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் என்சீஎன்டிரீ வருடாந்தம் என்டிரீ செயலமர்வுகள் மற்றும் விசேட என்டிரீ பயிற்சி கற்கைநெறிகளை நடாத்துகிறது.

2020 ஆம் ஆண்டின் போது மேற்படி அனைத்து நடவடிக்கைகளிலும் மொத்தமாக 97 நபர்கள் பங்குபற்றியிருந்தனர். இந் நடவடிக்கைகளின் கீழ் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூபா 1.2 மில்லியன் (வரி தவிர்ந்த) ஆகும். 2020 ஆம் ஆண்டிற்கான இலக்கானது 120 பணியாளர்கள் பங்குபற்ற வேண்டும் என்பதும் ரூபா 3.52 மில்லியன் வருமானத்தை ஈட்டுவதுமாகும்.

கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் காரணமாக இந்த சேவைகள் இந்த ஆண்டு அனைத்து சந்தர்ப்பங்களிலும் குறைவாகவே காணப்பட்டன.



படம் 8: பயிற்சி வழங்கப்பட்டு/ தகைமை பெற்று/ சான்றளிக்கப்பட்ட என்டிரீ பணியாளர்களின் எண்ணிக்கை

தரார அங்கீகாரம் பெற்ற சீபீஎன்டிரீ இன் பராமரிப்பு:

ISO/IEC 17020:2012, "நபர்களின் சான்றளிப்பை செயற்படுத்தும் அமைப்புக்களிற்கான பொதுவான தேவைப்பாடுகள்" இன் பிரகாரம் அழிவு எதிர்ப்பு சோதனைக்கான சான்றளிப்பு அமைப்பின் (சீபீஎன்டிரீ - இலங்கை) தராதர அங்கீகார நிலை வெற்றிகரமாக பேணப்பட்டு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சான்றளிப்பு பிரிவு

(i) 17 என்டிரீ பணியாளர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
(ii) 18 என்டிரீ பணியாளர் சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டன.
(iii) ஐசீஎன்டிரீ எம்ஆர்ஏ பட்டியல் 2 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட பிசீபீ ஆக சீபீஎன்டிரீ - இலங்கைக்கான புதுப்பித்தல் பெறப்பட்டது
(iv) என்சீபீஎன்டிரீ இன் முதல் கண்காணிப்பு மதிப்பீடு நடாத்தப்பட்டது.
(v) திருத்த நடவடிக்கைகள் (06) ஆவண ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டன.
(vi) சீபீஎன்டிரீ இன் சபை உறுப்பினர்களின் பட்டியல் திருத்தப்பட்டது.
(vii) சபை உறுப்பினர்களின் தனிநபர் கோவைகள் தயாரிக்கப்பட்டன.
(viii) 06 புதிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (ரீஏசீ) உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.
(ix) ரீஏசீ உறுப்பினர்களின் தனிநபர் கோவைகள் தயாரிக்கப்பட்டன
(x) ஆவணங்களின் முதன்மை பட்டியல் (சீபீஎன்டிரீ/எம்எல்டி) திருத்தப்பட்டது.

(xi) "அழிவு எதிர்ப்பு சோதனை தகுதி மற்றும் சான்றளிப்பிற்கான சீபீஎன்டிரீ வழிகாட்டல்" (சீபீஎன்டிரீ திட்டம்) தயாரிக்கப்பட்டது.

(xii) சான்றிதழ் தகவலுக்கான துண்டுப் பிரசுரம் தயாரிக்கப்பட்டது.

(xiii) சீபீஎன்டிரீ இணையப் பக்கம் புதுப்பிக்கப்பட்டது.

(xiv) ரீஏசீ இற்கான ரீஓஆர் தயாரிக்கப்பட்டது.

(xv) "என்டிரீ தொழில்துறை அனுபவ லொக் புத்தகம்" என்ற புதிய லொக் புத்தகம் தயாரிக்கப்பட்டது

(xvi) பாதுகாத்தல் பாரபட்சமற்ற தன்மை-ஆபத்து பகுப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

(xvii) பரீட்சை மற்றும் சான்றளிப்பிற்கான வாடிக்கையாளர் கருத்துப் படிவங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

(xviii) ஆரம்ப சான்றிதழ் கட்டணம், சான்றிதழ் புதுப்பித்தல் கட்டணம், மறு சான்றிதழ் கட்டணம் ஆகியவை திருத்தப்பட்டன.

(xix) உள்ளக தர கணக்காய்வு நடாத்தப்பட்டது.

(xx) தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (ரீஏசீ) கூட்டம் நடாத்தப்பட்டது.

(xxi) என்டிரீ பயிற்சிக்கான பாடத்திட்டம் MT, UT, RT, ET மற்றும; PT ஆகிய முறைகளுக்குத் தயாரிக்கப்பட்டது.

(xxii) தகுதிக்கான செயன்முறை, ஆரம்ப சான்றிதழ், சான்றிதழ் புதுப்பித்தல், மறு-சான்றிதழ் என்பன தயாரிக்கப்பட்டன.

சீபீஎன்டிரீ இன் பரீட்சைக் குழு (ஈசீ)

(i) 09 என்டிரீ பரீட்சைகள் பின்வருமாறு நடத்தப்பட்டன:

- அசல் பரீட்சைகளின் எண்ணிக்கை: 05
- முதல்வாவது மீள்பரீட்சைகளின் எண்ணிக்கை: 02
- இரண்டாவது மீள் பரீட்சைகளின் எண்ணிக்கை: 02

(ii) 1, 2, மற்றும் 3 ஆம் நிலைகளுக்கான MT, PT, UT, ET மற்றும் RT ஆகியவற்றின் தகைமை மற்றும் மீள் தகைமை தொடர்பான அசல், முதலாவது மீள் மற்றும் இரண்டாவது மீள் பரீட்சைகளின் பரீட்சை பெறுபேற்று தாள் படிவங்கள் திருத்தப்பட்டன - 90 படிவங்கள்

(iii) நிலை 1, 2 மற்றும் 3 இல் உள்ள அனைத்து முறைகளுக்குமான முதலாவது மற்றும் இரண்டாவது மீள் பரீட்சைகள், மீள் சான்றளிப்புப் பரீட்சைகள் மற்றும் மீள்சான்றளிப்பு மீள் பரீட்சைகளிற்கான பரீட்சை கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன.

(iv) செயன்முறை புள்ளியிடல் திட்டம் திருத்தப்பட்டது - RT 1

(v) செயன்முறை பரீட்சை முதன்மை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன - MT 2

(vi) "பரீட்சை விண்ணப்பதாரர்களுக்கான தகவல் தாள்கள்" திருத்தப்பட்டன- RT 1, UT 1, MT 1.

(vii) பரீட்சை பதவியணியினரின் தனிநபர் கோவைகள் தயாரிக்கப்பட்டன.

(viii) புதிதாக நியமிக்கப்பட்ட பரீட்சை பதவியணியினரிற்கான கடமை பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன.

(ix) பரீட்சை எழுதுபவர்களுக்கான உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது.

(x) "பரீட்சை அனுமதி" படிவம் திருத்தப்பட்டது.

(xi) "பரீட்சை வழிகாட்டல்கள்" என்ற புதிய ஆவணம் தயாரிக்கப்பட்டது.

(xii) பரீட்சை சோதனை மாதிரி இருப்பு தயாரிக்கப்பட்டது.

(xiii) "சீபீஎன்டிரீ-ஈசீ இன் முதல் கண்காணிப்பு மதிப்பீடு" இன் நான்கு மதிப்பீட்டாளர் கருத்துகளுக்கான திருத்த நடவடிக்கைகள் எஸ்எல்ஏபீ இற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

(xiv) "அழிவு எதிர்ப்பு சோதனை தகைமை மற்றும் சான்றிதழுக்கான என்சீஎன்டிரீ வழிகாட்டல்" மதிப்பாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டது.

(xv) "என்சீபீஎன்டிரீ இன் நோக்கெல்லை" மதிப்பாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டது.

(xvi) இரண்டு என்டிரீ பரீட்சை பெறுபேற்று மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

4.3.2 பரீட்சிப்பு சேவைகள்:


என்டிரீ பயிற்சி சேவைகள் தவிர, கைத்தொழில் பாகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் கைத்தொழில்சார் உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்கும் என்சீஎன்டிரீ ஆனது இயந்திரங்கள் மற்றும் உலோகக்

கூறுகளிலுள்ள குறைபாடுகளை கண்டறியும் பொருட்டு என்டிரீ பரீட்சிப்பு சேவைகளை வழங்குகின்றது. இப் பரீட்சிப்பு சேவைகள் இலங்கை தராதர அங்கீகார சபையால் (எஸ்எல்ஏபீ) ISO 17020 இன் பிரகாரம் தராதர அங்கீகாரம் பெற்ற அமைப்பொன்றாக உள்ள என்சீஎன்டிரீ இன் என்டிரீ பரீட்சிப்பு அமைப்பால் வழங்கப்படுகின்றன.

எஸ்எல்ஏபீயானது "ISO/IEC 17011 இற்கிணங்க செயற்படுகின்ற தராதர அங்கீகார அமைப்புக்களிற்கான சர்வதேச நிறுவனத்தால் (ஐஎல்ஏசீ) அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அளவுத்திருத்த ஆய்வுகூடங்கள் (ISO/IEC 17025 இனை பயன்படுத்துதல்), பரிசோதனை ஆய்வுகூடங்கள் (ISO/IEC 17025 இனை பயன்படுத்துதல்), மருத்துவ பரிசோதனை ஆய்வுகூடங்கள் (ISO 15189 இனை பயன்படுத்துதல்) மற்றும் பரீட்சிப்பு அமைப்புக்கள் (ISO/IEC 17020 இனை பயன்படுத்துதல்) உள்ளடங்கலாக ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களின் தராதர அங்கீகாரம் வழங்குவதில் ஈடுபட்டுள்ளது".

இத் தராதர அங்கீகார செயன்முறையின் கீழ் 04 என்டிரீ முறைகள் (காந்த துகள் பரிசோதனை, திரவ ஊடுருவல் பரிசோதனை, மீயொலி பரிசோதனை மற்றும் கொங்கிறீட் கட்டமைப்பு பரிசோதனை) காணப்படுவதால் 04 தொடர்புடைய ஆய்வுகூடங்கள் தராதர அங்கீகாரம் பெற்றுள்ளன.

என்சீஎன்டிரீயின் நன்கு பயிற்சி பெற்ற மற்றும் சான்றளிக்கப்பட்ட பதவியணியினர் மேற்படி பரீட்சிப்பு சேவைகளை மேற்கொள்கின்றனர். என்சீஎன்டிரீ 2020 ஆம் ஆண்டில் அரசாங்கம் மற்றும் தனியார் துறைத் கைத்தொழில்களுக்கு 211 என்டிரீ பரீட்சிப்பு சேவைகளை வழங்கியதுடன் இதன் மூலம் ரூபா 12.924 மில்லியன் (வரியைத் தவிர்த்து) வருமானம் ஈட்டப்பட்டது.



படம் 9: கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட என்டிரீ பரீட்சிப்பு சேவைகளின் எண்ணிக்கை

நாட்டில் கைத்தொழில் துறை கூறுகள், நிர்மாணங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் மற்றும் சிவில் நிர்மாணங்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான என்சீஎன்டிரீயின் பிரதான நோக்கத்தை அடையும் போது அடுத்த தசாப்தத்தினுள் **"சுய நம்பகத்தன்மை மற்றும் நிலையான"** அணுசக்தி நிறுவனமொன்றாக செயற்படுவதை நோக்கி என்சீஎன்டிரீ நகருகின்றது.

தராதர அங்கீகாரம் பெற்ற பரீட்சிப்பு அமைப்பின் பராமரிப்பு:

ISO/IEC 17020 இன் பிரகாரம் என்சீஎன்டிரீயின் பரீட்சிப்பு அமைப்பு (ஐபீ) தராதர அங்கீகாரம் பெற்றிருந்தது. இலங்கை தராதர அங்கீகார சபையால் (எஸ்எல்ஏபீ) 2017 முதல் Magnetic Particle பரிசோதனை (MT), Liquid Penetrant பரிசோதனை (PT), Ultrasonic பரிசோதனை (UT) and கொங்கிறீட் கட்டமைப்பு பரிசோதனை (CST என்பவற்றிற்கான "ஒத்தியல்பு மதிப்பீடு - பரீட்சிப்பை மேற்கொள்ளும் பல்வேறு வகையான அமைப்புக்களின் செயற்பாட்டிற்கான தேவைப்பாடுகள்" மற்றும் தராதர அங்கீகார பராமரிப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக தொடரப்பட்டன. அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டில் முக்கியமாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

(i) பாரபட்சமற்ற மதிப்பீடு/ இடர் பகுப்பாய்வு நடத்தப்பட்டது.

(ii) உள்ளக தர கணக்காய்வு நடாத்தப்பட்டது.

(iii) திறன் சோதனை நிகழ்ச்சித்திட்டம்பூர்த்தி செய்யப்பட்டது.

(iv) "என்சீஎன்டிஈ இன் ஐபீ இன் இரண்டாவது கண்காணிப்பு மதிப்பீடு" இன் நான்கு மதிப்பீட்டாளர் கருத்துகளுக்கான திருத்த நடவடிக்கைகள் எஸ்எல்ஏபீ இற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

(v) தற்போதுள்ள நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் (SOPfs), படிவங்கள், பட்டியல்கள் மற்றும் வடிவங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டன.

(vi) என்சீஎன்டிஈ இன் ஐபீ இன் தரக் கையேடு மதிப்பாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டது.

(vii) புதிய SOPs, படிவங்கள், உள்ளக அளவுத்திருத்த நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல் எழுதுதல்கள் உருவாக்கப்பட்டன.

(viii) புதிதாக நியமிக்கப்பட்ட ஐபீ ஊழியர்களுக்கான கடமைப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன.

(ix) தேவையான அழிவு எதிர்ப்பு சோதனை உபகரணங்களின் உள்ளக மற்றும் வெளியக அளவுத்திருத்த செயன்முறைகள் தொடரப்பட்டன.

(x) முகாமைத்துவ மீளாய்வு கூட்டம் நடாத்தப்பட்டது.

(xi) என்சீஎன்டிஈ இன் ஐபீ இன் தொலைநிலை மீள்மதிப்பீடு எஸ்எல்ஏபீ மதிப்பீட்டாளர்களின் உதவியுடன் நடாத்தப்பட்டது.

(xii) "என்சீஎன்டிஈ இன் ஐபீ இன் மீள்மதிப்பீடு" மூன்று (03) மதிப்பீட்டாளர் கருத்துகளுக்கான திருத்த நடவடிக்கைகள் எஸ்எல்ஏபீ இற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

<u>காய்ச்சி ஒட்டுபவர் தகைமை வசதி ஸ்தாபிப்பு:</u>

இலங்கை அணுசக்தி சபையின் (எஸ்எல்ஏஈபீ) அழிவு எதிர்ப்பு சோதனைக்கான தேசிய நிலையத்தின் (என்சீஎன்டிஈ) காய்ச்சி ஒட்டுபவர் தகைமை வசதி (டபிள்யூகியூஎவ்) காய்ச்சி ஒட்டுபவர்கள், மேற்பார்வையாளர்கள், பரிசோதகர்கள் போன்ற சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காய்ச்சி ஒட்டும் நிபுணர்களை உருவாக்குவதற்காக நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த டபிள்யூகியூஎவ் ஆனது அளவீடு செய்யப்பட்ட உபகரணங்கள், பாதுகாப்பான சூழல் மற்றும் CWI, CSWIP போன்ற சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் திட்டங்களுடன் திறமையான வள பணியாளர்களைக் கொண்டிருக்கும்.

இந்த வசதியை நிறுவுவதன் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

(i) இலங்கையில் காய்ச்சி ஒட்டுபவர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தை எளிதாக்குதல்.

(ii) காய்ச்சி ஒட்டுபவர் ASME பிரிவு IX நியம தேவைப்பாடுகள் அல்லது வாடிக்கையாளரின் கம்பனியின் நியமத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தால் அவருக்கு ஒரு சான்றிதழை வழங்குவதன் மூலம் அவரின் திறமை மற்றும் திறன்களை உறுதிப்படுத்துதல். என்சீஎன்டிஈ வழங்கிய சான்றிதழ் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்படும்.

(iii) நடைமுறை தகைமைபெறும் சேவைகள்.

(iv) வாடிக்கையாளரின் கம்பனி நியமங்கள்/ ASME பிரிவு IX நியம தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு அவர்கள் தகுதி பெற்றிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கு காய்ச்சி ஒட்டுபவர்களின் திறன்கள் மற்றும் திறமையைக் மதிப்பிடுவதற்கு அவர்களை மதிப்பாய்வு செய்தல்.

(v) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி.

(vi) காய்ச்சி ஒட்டுதல் கலையில் தொழில்முறை சமூகமொன்றை உருவாக்குதல்.

என்சீஎன்டிஈ ஆல் இந்த முக்கியமான செயற்திட்டத்தை உருவாக்குவது காய்ச்சி ஒட்டுபவர்களிற்கு தொழில் ரீதியாக தகுதி வாய்ந்ததாக இருப்பதால் பல நன்மைகளைப் பெறுவதுடன் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்காக தொழில் ரீதியாக தகுதி வாய்ந்த காய்ச்சி ஒட்டுபவர்களின் தேவையை பூர்த்தி செய்யும். மேலும், இது அவர்களின் வாழ்க்கை நிலையை தரமுயர்த்துவதன் மூலம் அவர்களுக்கு பயனளிக்கும்.

அதன் பிரகாரம் பின்வரும் நடவடிக்கைகள் முக்கியமாக 2020 இல் மேற்கொள்ளப்பட்டன:

(i) தேவையான காய்ச்சி ஒட்டுதல் உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்களை கொள்வனவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

(ii) வர்த்தக நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

(iii) தேவையான காய்ச்சி ஒட்டுதல் உபகரணங்களின் உள்ளக மற்றும் வெளியக அளவுத்திருத்த செயன்முறைகள் தொடங்கப்பட்டன.

(iv) 2020 ஆம் ஆண்டிற்கான காய்ச்சி ஒட்டுதல் மேற்பார்வையாளர்கள் மற்றும் காய்ச்சி ஒட்டுதல் பரிசோதகர்கள்/ பரீட்சகர்களைத் தெரிவுசெய்வதற்கான ஆலோசனை பெறுகை நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.

(v) டபிள்யூகியூஎவ் இன் பொருளிருப்புக்கள் (கட்டிடப் பொருட்கள், பாதுகாப்புப் பொருட்கள், காய்ச்சி ஒட்டுதல் உபகரணங்கள் மற்றும் காய்ச்சி ஒட்டுதல் கருவிகள்) தயாரிக்கப்பட்டன.

(vi) சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(vii) தர முகாமைத்துவ முறைமை ஆவணங்களைத் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டது.

(viii) காய்ச்சி ஒட்டுபவர் தகைமை பரீட்சை, நடைமுறைத் தகைமை மற்றும் காய்ச்சி ஒட்டுபவர்களை மதிப்பாய்வு செய்தல் ஆகியவற்றுக்கான கட்டணத்திற்காக சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

(ix) Shielded Metal Arc Welding (SMAW) இல் உள்ள 6G நிலைக்கான நடைமுறை தகைமை ஏடு (PQR) உருவாக்கப்பட்டது.

ரீசீ செயற்திட்டம் - எஸ்ஆர்எல் 1009 ஊடாக என்சீஎன்டிரீ இன் அபிவிருத்திக்கான ஐஏஈஏ உதவி

செயற்திட்ட விளைவு:
கைத்தொழில்துறை உற்பத்திப்பொருட்கள், இயந்திரங்கள், கட்டிடங்கள் மற்றும் சிவில் பொறியியல் கட்டமைப்புக்களின் தரம் மற்றும் பாதுகாப்பு மேம்பாட்டிற்காக என்டிரீ முறைகள் மற்றும் தொடர்புபட்ட தொழில்நுட்பங்களில் நிலையானதும் சுயாதீனமானதுமான பயிற்சி நிலையம் மற்றும் சேவை வழங்குநராக வருவதற்கு இலங்கை அணுசக்தி சபையின் (எஸ்எல்ஏஈபீ) அழிவு எதிர்ப்பு சோதனைக்கான தேசிய நிலையத்தினை (என்சீஎன்டிரீ) முன்னேற்றுதல்.


செயற்திட்ட வெளியீடு:

- ISO 17020 இன் பிரகாரம் தராதர அங்கீகாரம் பெற்ற பரீட்சிப்பு அமைப்பு ஒன்றின் ஊடாக வழக்கமான என்டிரீ முறைகளில் என்டிரீ பரீட்சிப்பு சேவைகள் கிடைக்கின்றன.
- ISO 17020 இன் பிரகாரம் தராதர அங்கீகாரம் பெற்ற பரீட்சிப்பு அமைப்பு ஒன்றின் ஊடாக கொங்கிறீட் பரிசோதனையில் என்டிரீ பரீட்சிப்பு சேவைகள் கிடைக்கின்றன.
- ISO 9712/ISO 17024 இன் பிரகாரம் என்டிரீ பணியாளர்களின் பயிற்சி, தகைமை மற்றும் சான்றளிப்பிற்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமை காணப்படுகின்றது.
- காய்ச்சி ஒட்டுபவர்களின் தகைமை மற்றும் சான்றளிப்பிற்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமை காணப்படுகின்றது.
- வழக்கமற்ற என்டிரீ முறைகள் தொடர்பாக என்டிரீ பரீட்சிப்பு சேவைகள் கிடைக்கின்றன.

2020 ஆம் ஆண்டின் செயன்முன்னேற்றம்

ஆண்டு முழுவதும் செயற்திட்ட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டிருந்தன.

4.4 பொது விஞ்ஞானவியல் பிரிவு – கதிர்வீச்சு ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பிற்கான தொழில்நுட்ப உதவி



படம் 10: கதிர்வீச்சு பாதுகாப்பு பயிற்சி & விழிப்புணர்வு



படம் 11: J02012 இன் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள்

தற்போது அணுசக்தி அல்லாத நாடாக இலங்கையானது அணுசக்தி எரிபொருள் சுழற்சி தொடர்பான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. எனினும் கதிரியக்க மூலப்பொருளானது மருத்துவம், கைத்தொழில், ஆராய்ச்சி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு போன்ற பல பயன்பாடுகளில் பரவலாக பயன்படுத்தப்படுகின்றது.

கதிர்வீச்சு தொழில்நுட்பங்களை மனிதகுலத்தின் மேம்பாட்டிற்கு பயன்படுத்துகின்ற ஏறத்தாழ 1,950 கதிர்வீச்சு பணியாளர்கள் நாட்டில் உள்ளனர். கதிர்வீச்சு பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்குமுறை தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக தீவு முழுவதும் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் ஆபத்தின்மை சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் கதிர்வீச்சு வசதிகளில் பாதுகாப்பு கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக பணியிட கண்காணிப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

பாதுகாப்பு ஆட்சிக்கு இணையாக நாட்டில் கதிரியக்க வளமூலங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சிறந்த தொழில்நுட்ப நிபுணத்துவம் அவசியம். இது களவு, வசதியின் செயற்பாட்டை நாசப்படுத்துதல், ஆபத்து விளைவிக்கும் செயல்களிற்காக அல்லது அங்கீகரிக்கப்படாத அணுகல் மூலம் வேறு ஏதேனும் தீங்கு விளைவிக்கும் செயல்களிற்காக கதிரியக்க வளமூலங்களை தவறாக பயன்படுத்துதல் என்பவற்றிற்கான சாத்தியத்தன்மையை தவிர்க்கின்றது.

கதிர்வீச்சு வசதிகளில் அணுசக்தி பாதுகாப்பை அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், நடைமுறைகள் மற்றும் மனித வளங்களை உருவாக்குவதற்கு இது மற்றொரு அவசியமான ஒழுங்குமுறைத் தேவைப்படாகும். இது பொதுமக்கள், கதிர்வீச்சு பணியாளர்கள் மற்றும் சுற்றாடலின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது.

ஒரு கட்டாய சர்வதேச தேவைப்பாடாக கதிர்வீச்சு ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு எல்லைகளுக்கு தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞானவியல் தலைமைத்துவத்தை வழங்குவது எஸ்எல்ஏஈபீயின் பிரதான பொறுப்பாகும். இத்தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு 2020 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் மற்றும் சேவைகள் நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன.

4.4.1 பணியாளர் கண்காணிப்பு சேவைகள் ஊடாக தொழில்சார் வெளிப்பாட்டு கட்டுப்பாடு:

கட்டாய ஒழுங்குமுறை தேவைப்பாடாக கதிர்வீச்சு பணியாளர்களிற்கான வெளிப்பாட்டு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் எஸ்எல்ஏஈபீ ஆல் வழங்கப்படுகின்றது.

கதிர்வீச்சு வசதியின் கட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இச் சேவையை பெற வேண்டும். தொழில்சார் வெளிப்பாட்டு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் முக்கியமாக தனிப்பட்ட கண்காணிப்பு சேவையின் மூலம் உணரப்படுகின்றது.

ISO 17025:2005 தராதர அங்கீகாரம் பெற்ற தனிப்பட்ட கண்காணிப்பு சேவைகள் ஆய்வுகூடம் Thermo-Luminescent Dosimeters (TLDs) இனை பயன்படுத்தி கதிர்வீச்சு வெளிப்பாட்டின் தனிப்பட்ட கண்காணிப்பிற்காக தீவு முழுவதும் சேவைகளை வழங்குகின்றது.

2020 ஆம் ஆண்டின் போது ஆய்வுகூடத்தின் தராதர அங்கீகாரம் தர நியமங்களின் சமீபத்திய பதிப்பான ISO/IEC 17025:2017 இற்கு தரமுயர்த்தப்பட்டது. நாடு முழுவதும் உள்ள 168 நிறுவனங்களில் இருந்து உணவு வழங்கும் 1,927 கதிர்வீச்சு பணியாளர்களுக்கு 7,107 செயலற்ற டொசிமீட்டர்கள் ஆண்டின் போது அளவிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன, 2020 ஆம் ஆண்டில் சேவையின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 16 மில்லியனாகும். மேலும், சுமார் 210 கதிர்வீச்சு பணியாளர்கள் கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்து பயிற்சி பெற்றனர்.

2020 ஆம் ஆண்டின் போது, ஐஏஈஏ ஆல் நடத்தப்படும் தொழில்சார் கதிர்வீச்சு பாதுகாப்பு மதிப்பீட்டு சேவை (ஓஆர்பிஏஎஸ்) பணியை அமுல்ப்படுத்துவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் அபிவிருத்தியானது பங்குபெறும் அனைத்து பங்குதாரர்களின் பங்களிப்புடன் எஸ்எல்ஏஈபீ ஆல் தொடரப்பட்டது. இது தவிர, தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டம் (என்சீசீபி) மற்றும் உலக சுகாதார அமைப்பின் (டபிள்யூஎச்ஓ) அழைப்பின் பேரில், எஸ்எல்ஏஈபீ "சுகாதாரத் துறைக்கான கதிர்வீச்சு பாதுகாப்புக்கான தேசிய வழிகாட்டி" மற்றும் "கதிர்வீச்சு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான விரிவான குறிப்பு விதிமுறைகள் (ரீஓஆர்)" ஆகியவற்றை உருவாக்கியுள்ளது. இந்த ஆவணங்கள் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சையில் சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டுதலை உருவாக்குகின்றன.

4.4.2 இரண்டாம் நியமத்தர Dosimetry சேவை

கதிர்வீச்சு கருவிகளின் அளவுத்திருத்தமானது குறிப்பாக நோயை கண்டறிதல் மற்றும் சிகிச்சை கதிரியக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வைத்தியசாலைகளில் கருவியின் செயற்திறனின் சரியானதன்மையை உறுதிப்படுத்துகின்ற அத்தியாவசிய கதிர்வீச்சு பாதுகாப்பு நடைமுறைகளில் ஒன்றாகும்.

தராதர அங்கீகாரம் பெற்ற இரண்டாந்தர நியம டொசிமெட்ரி ஆய்வுகூடம் (எஸ்எஸ்டிஎல்) அளவை மானிகள், பொக்கெற் டொசிமீட்டர்கள், மாசுபடுதல் கண்காணிப்பான்கள் போன்ற கதிர்வீச்சு அளவிடும் கருவிகளை அளவுத்திருத்தம் செய்ய தீவு முழுவதும் சேவைகளை வழங்குகிறது. அதன் கதிர்வீச்சு நியமங்கள் ஐஏஈஏ மற்றும் பீஐபிஎம் முதன்மை நியமங்களில் இருந்து பெறப்படுகின்றன.

எஸ்எஸ்டிஎல் ஆனது ISO 4037 இற்கு இணங்க மருத்துவ ஊடு-கதிர் கற்றையொன்றையும் பேணுகிறது. எஸ்எஸ்டிஎல் இன் தராதர அங்கீகார நியமங்கள் ISO//IEC 17025:2017 சேவையின் தரத்தை மேலும் செயற்படுத்துவதற்கு சமீபத்திய சர்வதேச நியமங்களுக்கு மேம்படுத்தப்பட்டு குறுகிய-ஸ்பெக்ட்ரம் ஊடுகதிர் கற்றை, கண்டறியும் கதிரியக்கத்தில் ஊடுகதிர் உருவாக்கும் மற்றும் அளவிடும் கருவிகளின் அளவுத்திருத்தத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

கதிர்வீச்சு பாதுகாப்பிற்கான கட்டாயத் தேவைப்பாடாக, 2020 ஆம் ஆண்டில், எஸ்எஸ்டிஎல் 81 கதிர்வீச்சு அளவிடும் கருவிகளுக்கான அளவுத்திருத்தங்களை வழங்கியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் அளவுத்திருத்த சேவையின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 0.73 மில்லியனாகும்.

4.4.3 அணுசக்தி கருவியாக்கல் சேவைகள்

இலங்கையில் அணுசக்தி கருவிகளிற்கான ஒரே கருவியாக்கல் ஆய்வுகூகூடமாக நாட்டில் கதிர்வீச்சை கண்டறிதல் மற்றும் பகுப்பாய்விற்கான தொழில்நுட்ப இயலளவுகளை வலுப்படுத்தும் பொறுப்பை அணுசக்தி கருவியாக்கல் ஆய்வுகூடம் (என்ஐஎல்) கொண்டுள்ளது. இதன் செயற்பாடுகள் அணுசக்தி கருவிகளை திருத்தம் செய்து பராமரித்தல் மற்றும் கருவிகள் மற்றும் முறைகளின் புதிய அபிவிருத்தி என்பவற்றில் உள்ளன.

எஸ்எல்ஏஈபீயில் உள்ள உட்கருவிகள் மற்றும் அதிநவீன முறைமைகள் உள்ளடங்கலாக அணுசக்தி கருவிகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தலிற்கான சேவைகளை என்ஐஎல் வழங்குகின்றது. கருவி தெரிவு, நோய் கண்டறிதல் மற்றும் தவறான பகுப்பாய்வுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குவதை என்ஐஎல் தொடங்கியுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது என்ஐஎல் ஆனது 26 சேவைநாடுநர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்திருந்ததுடன் வணிக மட்ட கமா எண்ணுதல் முறைமைகள், கதிர்வீச்சு அளவிடும் மானிகள் மற்றும் மின்சார Cloud Chamber கருவித்தொகுதிகள் என்பவற்றின் 21 தொகுதிகளை உருவாக்கியிருந்தது. வட மாகாண கல்வி அமைச்சிற்கு இக் கல்வி செயன்முறை விளக்கம் மற்றும் experiment kits என்பன வழங்கப்பட்டிருந்தன. கருவி அபிவிருத்தி செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 2.5 மில்லியனை உழைத்திருந்தது. இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட "சஹசக் நிமெவும் 2020" தேசிய கண்டுபிடிப்பு போட்டியில் கல்வி உபகரண கருவித்தொகுதி தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.

என்ஐஎல் திருத்த சேவைகளை வழங்குவதன் மூலம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 0.20 மில்லியன் வருமானத்தை ஈட்டியிருந்தது.

4.4.4 அணுசக்தி பாதுகாப்பு

அணுசக்தி பாதுகாப்பு உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதில் உலகளாவிய அணுசக்தி சமூகத்தில் பாதுகாப்பு குறித்து வளர்ந்து வரும் அக்கறைகள் எஸ்எல்ஏஈபீயின் முக்கியமான பொறுப்புக்களில் ஒன்றாகும்.

ஐஏஈஏ இன் ஒத்துழைப்புடன், சர்வதேச அணுசக்தி பாதுகாப்பு அபிவிருத்திகளுக்கு எஸ்எல்ஏஈபீ குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செலுத்த முடிந்தது. ஆர்பிஈஎஸ்டி ஆனது ஐஏஈஏ உடன் இரண்டு ஒருங்கிணைந்த ஆராய்ச்சி செயற்திட்டங்களில் (CRPs) பின்வருமாறு ஈடுபட்டுள்ளது,

- ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டிற்கு வெளியே அணுசக்தி மற்றும் ஏனைய கதிரியக்க மூலப்பொருட்களை கண்டறிவதற்கான முற்கூட்டிய கதிர்வீச்சு கண்டறிதல் உபகரணம் (ஜே02012)

- கதிர்வீச்சு கண்டறிதல் கருவிகளிலிருந்து ஆரம்ப அலாரங்களின் மேம்பட்ட மதிப்பீடு (ஜே02005)

ஜே02005 சீஆர்பி வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டு TRACE (கதிர்வீச்சு அலாரம் மற்றும் பெருட்கள் மதிப்பீட்டிற்கான கருவி) mobile app உருவாக்கப்பட்டிருந்தது. ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டிற்கு வெளியே கதிர்வீச்சு மூலப்பொருட்களை கண்டறிவதற்காக கதிர்வீச்சு கண்டறிதல் கருவிகளிலிருந்து எழுப்பப்படும் அலாரங்களை மதிப்பீடு செய்வதற்கு அணுசக்தி பாதுகாப்பு கலாச்சாரத்தில் அக்கறையுடையோரிற்கு இப் பிரயோகம் (app) பயனளிக்கும் (MORCs).

சீஆர்பி ஜே02012 இன் கீழ் 07 Radionuclide இனங்காணல் சாதனங்கள் (RIDs) நன்கொடையாக பெறப்பட்டதுடன் அவை நாட்டின் அணுசக்தி பாதுகாப்பு கண்டறிதல் இயலளவுகளை வலுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட முடியும்.

மேலும் ஆர்பிஈஎஸ்டியின் உத்தியோகத்தர்கள் சர்வதேச அளவில் அணுசக்தி பாதுகாப்பு அபிவிருத்திகளில் ஈடுபட்டுள்ளனர். ஆர்பிஈஎஸ்டியின் கோரிக்கையொன்றின் அடிப்படையில் ஆர்பிஈஎஸ்டி பதவியணி உறுப்பினர் ஒருவரால் தொழில்நுட்ப விஜயம் மற்றும் மதியுரை சேவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இவை தவிர, நாட்டிற்குள் அணு பாதுகாப்பிற்கான தேவை அதிகரித்து வருவதால், ஆர்பிஈஎஸ்டி பத்து அணுசக்தி பாதுகாப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதுடன் அணுசக்தி பாதுகாப்பு கண்டறிதல் மற்றும் பதிலளிப்பதற்காக சுமார் 161 முன்னணி வரிசை உத்தியோகத்தர்களிற்கு (FLOs)

பயிற்சி அளித்துள்ளது. இலங்கை சுங்கத்தின் கோரிக்கையின் பேரில் மெகா துறைமுகத்தில் 10 வழக்குகளுக்கு எச்சரிக்கை மதிப்பீட்டிற்கான நிபுணர் உதவி வழங்கப்பட்டுள்ளது.

4.4.5 கதிரியக்க கழிவு முகாமைத்துவம்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மத்திய பயன்படுத்தப்படாத பொறியிடப்பட்ட கதிரியக்க வளமூல (டிஎஸ்ஆர்எஸ்) சேமிப்பக வசதி அதன் செயற்பாட்டிற்கான முதல் உரிமத்தைப் பெற்றிருந்ததுடன் டிஎஸ்ஆர்எஸ் ஏற்றுக்கொள்ளும் அளவுகோல்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. கதிரியக்க பாதுகாப்பு மற்றும் வசதியின் பாதுகாப்பிற்கான கையேடுகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் (SOPs) ஆகியன வசதியை தக்கவைப்பதற்கு நாளதுவரையாக்கப்பட்டுள்ளன. தற்போது, கோரிக்கையின் அடிப்படையில் டிஎஸ்ஆர்எஸ் இன் நீண்ட கால சேமிப்பிற்கான வணிகச் சேவைகளை வழங்கும் முழுத் திறனும் காணப்படுகின்றது.

4.4.6 அவசரகால தயார்நிலை மற்றும் கதிர்வீச்சு கண்காணிப்பு

நாட்டின் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் ஆபத்தின்மை நோக்கங்களை மேலும் மேம்படுத்துவதற்காக அவசரகால பதிலளிப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கதிர்வீச்சு கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் பின்வருமாறு பல செயற்பாடுகள் மூலம் அவை செயற்படுகின்றன. கதிரியக்க கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் வணிகச் சேவையாக வலுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ், 2020 ஆம் ஆண்டில் 14 அளவீடு மற்றும் பகுப்பாய்வு சேவைகள் நடாத்தப்பட்டன.

4.4.6.1 தேசிய அணுசக்தி அனர்த்த முன் எச்சரிக்கை முறைமை

இப்பகுதியில் அணுசக்தி அனர்த்தம் ஏற்படுவதற்கான முன்னெச்சரிக்கையாக தேசிய அணுசக்தி அனர்த்த முன் எச்சரிக்கை முறைமை நிறுவப்பட்டுள்ளது. இந்த முறைமை முழுமையாக தன்னாட்சியாக உள்ளதுடன் 2012 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயற்படுகிறது. கணனியின் தடையற்ற நிலை மற்றும் சரியான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு அரையாண்டு அளவுத்திருத்தம் அவசியமாகும்.

4.4.6.2 சுற்றாடல் கதிர்வீச்சு கண்காணிப்பு

தேசிய தேவைப்பாடொன்றாக, நாட்டிற்கான அடிப்படை கதிர்வீச்சு தகவல் முறைமையை உருவாக்குவதற்கு சுற்றாடல் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது.

in-situ கமா spectroscopy, ambient கமா கதிர்வீச்சு ஆய்வுகள் மற்றும் மண் Radon அளவீடுகளினை பயன்படுத்தி கதிர்வீச்சு தரவு சேகரிக்கப்படுகின்றது. தானியங்கி கதிர்வீச்சு கண்காணிப்பு முறைமை மூலம் சேகரிக்கப்பட்ட தானியங்கு கண்காணிப்புத் தரவை சர்வதேச அணுசக்தி முகவராண்மையின் (ஐஏஈஏ) சர்வதேச கதிர்வீச்சு அளவீட்டு தகவல் முறைமைக்கு (ஐஆர்எம்ஐஎஸ்) வழங்குவதற்கு எஸ்எல்ஏஈபீ ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

4.4.6.3 பணியிட கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம்

பணியிட கண்காணிப்பானது பணியிடத்தில் கதிர்வீச்சு மட்டத்தை மதிப்பிடுகின்றதுடன் இது பணிசெய்தல் நிலைமைகளின் கீழ் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மற்றும் தனிப்பட்ட அளவை (dose) இனங்காண்பதற்கான தகவல்களை வழங்குகின்றது. இச் சேவை முறையாக ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் பணியிடங்களுக்கு தொடர்ந்து சேவைகளை வழங்குகிறது. ambient கமா dose ஆய்வுகள் மற்றும் வளிமண்டல Radon அளவீடுகளை பயன்படுத்தி கதிர்வீச்சு மட்ட ஆய்வுகள் இங்கே மதிப்பிடப்படுகின்றன. 04 பணியிட கண்காணிப்பு சேவைகள் 2020 இல் நடாத்தப்பட்டுள்ளன.

4.4.7 தகவல் தொழில்நுட்ப சேவைகள்

உள்ளக சேவையொன்றாக அலுவலக நிர்வாகம் மற்றும் விஞ்ஞானவியல் நடவடிக்கைகளிற்காக IT உதவிச் சேவைகளை எஸ்எல்ஏஈபீ வழங்குகின்றது. நிதி திட்டமிடல், ஏடுகளை பேணுதல் மற்றும் விலைப்பட்டியலிடல், பௌதீக விநியோகம் மற்றும் திட்ட செயற்பாடுகள் மற்றும் தனிப்பட்ட ஏடுகளை பேணுதல் என்பவற்றுடன் தொடர்புடைய அலுவலக தன்னியக்க செயற்பாடுகளிற்கு இப்பிரிவிலிருந்து உதவப்படுகின்றன. விஞ்ஞானவியல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை அமுல்ப்படுத்துதல்

மற்றும் அறிவுத்திறன் முகாமைத்தவ நடவடிக்கைகள் போன்ற விஞ்ஞானவியல் நடவடிக்கைகள் IT வசதிகளை அதிகளவில் பயன்படுத்துகின்றன.

இப் பிரிவால் 2020 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) எஸ்எல்ஏஈபீ இற்கான புதிய உத்தியோகபூர்வ இணையதளத்தை உருவாக்குதல்.

(ii) வன்பொருள் மற்றும் வலையமைப்பு வசதிகளின் விரிவாக்கம் மற்றும் பராமரிப்பு.


(iii) கணினிகள் மற்றும் தொடர்புடைய வன்பொருளுக்கான திருத்த மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குதல்.

(iv) அஞ்சல் சேவையகங்கள், வலையமைப்பு மற்றும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் வழக்கமான பராமரிப்பு நடவடிக்கைகள்.

(v) மென்பொருள் தொடர்பான சேவைகள் மற்றும் பராமரிப்பு பணிகளை வழங்குதல்.

	2016	2017	2018	2019	2020
ஆளணியினர் கண்காணிப்பு சேவை (PMS)	1.68	2.86	5.66	12.10	13.67
இரண்டாம் நிலை Dysentery அளவுத்திருத்தம் (SSDL)	0.21	0.21	1.04	0.92	0.73
அணு கருவியாக்கல் (NIL)	0.00	0.04	0.07	2.98	0.20
கதிர்வீச்சு கண்காணிப்பு சேவை (RMS)	0.06	0.18	0.06	0.13	0.07
அணு பாதுகாப்பு (NS)	0.12	0.14	0.06	0.00	0.36
மொத்தம் (ரூபா. மில்லியன்)	**2.08**	**3.43**	**6.89**	**16.13**	**15.03**

அட்டவணை 2: பொது விஞ்ஞானவியல் பிரிவின் வருமான உருவாக்கம்



படம் 12: ஜீஎஸ்டியின் வருடாந்த வருமானம்

4.5 கைத்தொழில் துறை பயன்பாடுகள் பிரிவு – ஐஏடி

4.5.1 நீர்வளவியல் ஐசோடோப் நுட்பங்களுடன் தொடர்புடைய R & D செயற்பாடுகள்:

4.5.1.1 மல்வத்து ஓயா வடிநிலம் மற்றும் கீழ் மகாவலி வடிநிலத்தில் நிலத்தடி நீர் புலனாய்வுகள்

இந்த ஆய்வு ஐஏஈஏ (தேசிய ரீசீ நிகழ்ச்சித்திட்டம்) இன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்டது. மேற்படி பகுதிகளில் உள்ள நிலத்தடி நீரில் உள்ள இயற்கை அசுத்தங்கள், முக்கிய குடிநீர் வளமூலம் என்பன இச் செயற்திட்டத்தின் கீழ் கவனம் செலுத்தப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் இரண்டு ஆற்று வடிநிலங்களில் இரண்டு கள விஜயங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. சேகரிக்கப்பட்ட மாதிரிகள் எஸ்எல்ஏஈபீ இல் இரசாயன மற்றும் ஐசோடோப் அளவுருக்களுக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டன. அதே மாதிரித் தொகுப்பு சீனாவிலுள்ள சீன விஞ்ஞானவியல் அக்கடமிக்கு (சீஏஎஸ்) அனுப்புவதற்குத் தயாரிக்கப்பட்டது.

தற்போது சீஏஎஸ் இல் PhD படிக்கும் விஞ்ஞானவியல் உத்தியோகத்தர் ஒருவரால் (ஐசோடோப் நீர்வளவியல் பிரிவு) மூலம் தரவு மதிப்பீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. இச் செயற்திட்டம் 2021 இல் பூர்த்தியடைடையும். செயற்திட்டத்தின் இறுதியில் விரிவான செயற்திட்ட அறிக்கையொன்றும் இதழ் வெளியீடுகளும் தயாரிக்கப்படும்.

2020 ஆம் ஆண்டில் தண்ணீரில் deuterium மற்றும் 18-O ஐ பகுப்பாய்வு செய்வதற்கான நீர் ஐசோடோப் பகுப்பாய்வி (PICARO), நீரில் tritium மற்றும் 14C ஐ பகுப்பாய்வு செய்வதற்கான Hidex 300SL Liquid Scintillation Counter (LSC) மற்றும் நீர் மாதிரிகளில் tritium செறிவூட்டலுக்கான முழுமையான அமைப்பு உள்ளிட்ட பல உபகரணங்களை வழங்குவதன் மூலம் செயற்திட்டத்திற்கு ஐஏஈஏ உதவியளித்தது.

இந்தியாவின் Noki தொழில்நுட்பத்திலிருந்து தொழில்நுட்ப நபரொருவர் 2020 இல் LSC ஐ நிறுவுவதற்கு எஸ்எல்ஏஈபீ இற்கு வருகை தந்திருந்தார். எனினும், தொழிற்சாலைக் கோளாறு காரணமாக உபகரணங்களால் சிறப்பாகச் செயற்பட முடியவில்லை, மேலும் தொற்றுநோய் நிலைமை சாதாரணமாகிவிட்ட பின்னர் Noki தொழில்நுட்பத்தால் விரைவில் சரிசெய்யப்படும்.

4.5.2 ஐசோடோப் மற்றும் இரசாயன முறைகளைப் பயன்படுத்தி இலங்கையின் மேற்குப் பகுதியில் கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரையிலான ஆழமற்ற கரையோர நீர்நிலை முறைமையின் பாதிப்பு மதிப்பீடு

மேற்குக் கரையோர வலயத்தில் கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரை அதிக உற்பத்தித் திறன் கொண்ட ஆழமற்ற மணல், lateritic, ஆழமான உடைந்த மற்றும் காலநிலையால் பாதிக்கப்பட்ட கடின பாறை நீர்நிலை அலகுகளை உள்ளடக்குகின்றதுடன் அப்பகுதியில் உள்ள 90% இற்கும் அதிகமான மக்கள் நிலத்தடி நீரைக் குடிப்பதற்கும், உள்நாட்டு மற்றும் ஏனைய தேவைகளுக்கும் அண்மைய கடந்த காலம் வரை பயன்படுத்தி வருகின்றனர். கொழும்பு தலைநகருக்கு அருகாமையில் இருக்கும் உயர் சாத்தியமான நன்னீர் வளமூலங்களில் ஒன்றாக இது இருப்பதால், இந்த நீர்நிலை முறைமையின் நிலத்தடி நீர் வளமானது நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானது என்பது நன்கு புரிந்து கொள்ளப்படுகிறது.

கொழும்பில் இருந்து நீர்கொழும்பு வரை, பல்வேறு வகையான உற்பத்தி ஆலைகளை உள்ளடக்கிய பல தொழில்துறை வலயங்கள் அமைந்துள்ளன. 2020 ஆம் ஆண்டில் நீர் வளங்கள் சபையுடன் இணைந்து பாதிப்பு மதிப்பீட்டு ஆய்வு இப்பகுதியில் தொடங்கப்பட்டது. ஆய்வின் ஆரம்ப நோக்கம் நீர்நிலை முறைமையில் உள்ள இயற்கை மற்றும் மானுடவியல் அசுத்தங்கள்/ மாசுகளைப் புரிந்துகொள்வதாகும். மேலும், நிலத்தடி நீர் மீள்நிரப்பல்/ தோற்றம், நிலத்தடி நீரின் வயது, மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீரின் தொடர்பு, கடல் நீர் ஊடுருவல், நீரின் தரம் ஆகியவை ஐசோடோப் மற்றும் இரசாயன முறைகளைப் பயன்படுத்தி ஆராயப்படும். 2020 ஆம் ஆண்டில் கள

விஜயம் ஒன்று பூர்த்தி செய்யப்பட்டதுடன் நீர் வளங்கள் சபையுடன் பல கலந்துரையாடல்கள்/ கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

4.5.3 நீர்ப்பாசன நோக்கங்களுக்காக கலா ஓயா வடிநிலத்தில் நிலத்தடி நீர் திறன்

"நிலையான நீர்வள முகாமைத்துவம் மற்றும் நீர்ப்பாசனம் புத்துயிர் பெறுதல் என்பவற்றிற்காக கலா ஓயா வடிநிலத்தில் நிலத்தடி நீர் வளங்களை மதிப்பீடு செய்தல்" என்ற தலைப்பிலான செயற்திட்டம் 2018 முதல் 2021 வரை ஐஏஈஏ இன் சிஆர்பியாக நடாத்தப்படுகிறது. இந்த செயற்திட்டம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் (யூஓஎஸ்ஜேபி) மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் (ஓயூஎஸ்எல்) இணைந்து அமுல்ப்படுத்தப்படுகிறது. சேகரிக்கப்பட்ட கள மாதிரிகள் 2020 இல் இரசாயன அளவுருக்களுக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டன. உருவாக்கப்பட்ட தரவை மதிப்பீடு செய்த பின்னர் முன்னேற்ற அறிக்கைகள் ஐஏஈஏ இற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. 2020 இல் யூஓஎஸ்ஜேபி மற்றும் ஓயூஎஸ்எல் இல் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கும் முடிவுகளை வழங்குவதற்கும் சில கூட்டங்கள் நடத்தப்பட்டன.

4.5.4 இலங்கை முழுவதும் மழையின் போது ஐசோடோப்கள்

நாடு முழுவதும் மழையின் போது ஐசோடோப்களின் இடம்சாந்த மற்றும் தற்காலிக மாறுபாடானது எதாவது ஐசோடோப் நீரியல், ஐசோடோப் சூழலியல் மற்றும் காலநிலை ஆய்வுகளிற்கான அடிப்படைத் தகவல்களாக புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஆகையால் இலங்கையின் வெவ்வேறு புவியியல் இடங்களில் மழை நீரை சேகரிப்பது முக்கியமானதாகும். இக் கணக்கெடுப்பின் கட்டம் - 1 2012 முதல் 2015 வரையான காலப்பகுதியின் போது வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் சில பகுதிகளில் பூர்த்தி செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட கணக்கெடுப்பின் கட்டம் - 2 தென், ஊவா, சப்ரகமுவ, மேல் மற்றும் கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் சில பகுதிகளில் தொடங்கப்பட்டது.

ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாக மாதாந்த மழை நீர் சேகரிபிற்காக 20 இற்கும் மேற்பட்ட மழை சேகரிப்பு நிலையங்கள் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டம் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டது.

ஐசோடோப் நீர்வளவியல் பிரிவு 2008 ஆம் ஆண்டிலிருந்து ஐஏஈஏ ஆல் நடாத்தப்பட்ட மழை பொழிதலில் ஐசோடோப்கள் இன் உலகளாவிய வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக (ஜீஎன்ஐபி) மழை நீரை சேகரித்து வருகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாதிரி சேகரித்தல் முறைமைகள் கொழும்பு, கடுகஸ்தோட்ட மற்றும் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக நிறுவப்பட்டு வருகின்றன. இந்த நோக்கத்திற்காக எஸ்எல்ஏஈபீ ஆண்டுதோறும் ஐஏஈஏ இற்கு மழை நீர் மாதிரிகளை அனுப்பி வருகிறது. நீரியல், சூழலியல் மற்றும் காலநிலை பற்றிய பிராந்திய மற்றும் உள்ளூர் ஆய்வுகளுக்கான தரவுகளை ஐஏஈஏ இன் ஜீஐஎன்பி தரவு தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

4.5.5 ஐஏடி இன் கீழ் ஐசோடோப் சூழலியல் நிகழ்ச்சித்திட்டம்

நிலையான ஐசோடோப்கள் உயிரியல் முறைமைகளில் tracers ஆக அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றதுடன் காலப்போக்கில் மாற்றங்கள் மற்றும் செயன்முறைகளைக் கண்காணிக்கும் அவற்றின் திறன் சூழலியல் ஆராய்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. ஐசோடோப் சூழலியல் சுற்றாடல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சரியான மற்றும் ஆக்கப்பூர்வமான வழிகளில் ஐசோடோப் tracers பயன்படுத்துகிறது.

இலங்கை அணுசக்தி சபை (எஸ்எல்ஏஈபீ) "நீர் உபயோகத்தை மேம்படுத்துவதற்கு ஐசோடோப் நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம வறட்சி நிலைமைகளின் கீழ் பயிர் உற்பத்தியை அதிகரித்தல்" தொடர்பாக விசேட கவனம் செலுத்தி உயிரியல் முறைமைகளை கையாள்வதற்கான ஐசோடோப் சூழலியல் நிகழ்ச்சித்திட்டத்தை தொடங்கியுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச அணுசக்தி முகவராண்மையின் பிராந்திய கூட்டுறவு உடன்படிக்கையின் கீழ் ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான இந்த விடயத்தில் இரண்டு ஆண்டு செயற்திட்டம் உருவாக்கப்படுகிறது. இந்த பிராந்திய செயற்திட்டத்தின் முன்னணி நாடு இலங்கையாகும்.

நீர் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு ஐசோடோப் நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வறட்சி நிலைமைகளின் கீழ் பயிர் உற்பத்தித்திறனை அதிகரித்தல்

முறையற்ற நீர் முனாமைத்துவம், கண்மூடித்தனமான நீர் பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை உலகளாவிய நன்னீர் வளங்களைக் குறைக்கும் முக்கிய காரணிகளாகும், மேலும் உலகின் பல பகுதிகளை எதிர்கொள்ளும் முக்கிய சவால்களாகும்.

உலகின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள அனைத்து நன்னீர் பயன்பாட்டில் ஏறத்தாழ 70% நீர்ப்பாசனம் மற்றும் விவசாய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. விவசாயத்தில் நிலத்தடி நீர் பயன்பாட்டின் வளர்ச்சி படிப்படியாக அதிகரித்து வருகிறது, அதே நேரத்தில் நீர் பயன்பாட்டு வினைத்திறன் 50% இற்கும் குறைவாக உள்ளது. பயிர் நீர் உற்பத்தித்திறனை (CWP) அதிகரிப்பதன் மூலம் விவசாய நீர் பயன்பாட்டு வினைத்திறனை (WUE) மேம்படுத்துவதற்கான அவசரத் தேவை உள்ளது. உதாரணம்., மொத்த நீர் நுகர்வின் ஒரு அலகிற்கான பயிர் உற்பத்தி திறன் (ஒரு சொட்டுக்கு அதிக பயிர்)

ஆவியாதல் மூலம் மண்ணின் மேற்பரப்பில் இருந்து நீர் இழப்பது பெரும்பாலும் CWP ஐ எதிர்மறையாக பாதிக்கின்ற விவசாய முறைமைகளில் உள்ள மண் நீர் சமநிலையின் முக்கிய கூறாகும், ஏனைய தொடர்புடைய நுட்பங்களுடன் சேர்த்து நீர் மற்றும் நீராவியில் நிலையான ஐசோடோப்களான ^{18}O மற்றும் ^{2}H கலவைகளைப் பயன்படுத்துதல் விஞ்ஞானிகளிற்கு நேரடியாக மண் நீராவியாதல் எதிர் தாவரத்திலிருந்து நீராவியின் போக்கு மூலம் நீர் இழப்புகளை வேறுபடுத்த உதவுகிறது.

மண்ணின் நீர் அளவீடு, modelling மற்றும் தொலைநிலை உணர்திறன் செயற்கைக்கோள் படங்களிலிருந்து தரவுத் தொகுப்புகளுடன் சேர்ந்த் அந்த அறிவு பொருத்தமான மண் மற்றும் நீர் பாதுகாப்பு முகாமைத்துவ நடைமுறைகளைப் பயன்படுத்துவதற்கு பயன்படுத்தப்படலாம்.

அணுக்கரு, ஐசோடோப் மற்றும் தொடர்புடைய நுட்பங்களைப் பயன்படுத்தி மண்ணின் நீரின் அளவை சரியாக அளவிடுதலானது பயிர்களுக்கான தண்ணீர் அளவு மற்றும் கிடைப்பனவு பற்றிய தகவல்களை வழங்க முடியும். இது விவசாயிகள்/ காணி முகாமையாளர்களுக்கு தண்ணீர், பண்ணை செலவுகள் மற்றும் அதிகப்படியான நீர்ப்பாசனத்தின் விளைவாக ஊட்டச்சத்து இழப்பைக் குறைப்பதற்கு உதவி செய்து விவசாயிகளுக்கு உகந்த நீர்ப்பாசன அட்டவணையை உருவாக்க அனுமதிக்கிறது, இறுதியில் வறட்சிக்கு எதிராக பயிர் தாங்கும் திறனை அதிகரிக்கிறது.

தெரிவுசெய்யப்பட்ட பயிர்களின் நீர் பயன்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தொலைநிலை உணர்திறன் செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி நீர் உற்பத்தித்திறனை வரைபடமிடுதல் உட்பட, அணு, ஐசோடோபிக் மற்றும் தொடர்புடைய நுட்பங்களைப் பயன்படுத்தி நீர்-கட்டுப்பாட்டு நிலைமைகளின் கீழ் பயிர் நீர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதை இச் செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில், ஒரு பிராந்திய செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டது. பிராந்திய செயற்திட்ட ஆவணத்தின் (RPD) மேம்பாடு மற்றும் Logical Framework Matrix (LFM) பல திருத்தங்களுடன் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டது.

2022 இல் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக, பசுமை இல்லம், cryogenic vacuum distillation அமைப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் பெறுகை மற்றும் உள்ளூர் தயாரிப்புகளுடன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடங்கப்பட்டது.

4.5.6 அரச பல்கலைக்கழகங்களுடன் இணைந்து நடாத்தப்பட்ட ஆராய்ச்சி

"ஐசோடோப் நுட்பங்களைப் பயன்படுத்தி இலங்கையில் போத்தலில் அடைக்கப்பட்ட/ பொதியிடப்பட்ட தண்ணீரின் தோற்றத்தைக் கண்டறிதல்" பற்றிய முதுகலை ஆராய்ச்சி 2020 இல் உதவி செய்து பூர்த்தி செய்யப்பட்டது. இந்த ஆய்வானது NCNDT-SLAEB இல் உள்ள விஞ்ஞானவியல் உத்தியோகத்தர் ஒருவராக உள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தின் அணு விஞ்ஞான துறையைச் சேர்ந்த மாணவர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டது.

நிலத்தடி நீரில் உள்ள இயற்கை அசுத்தங்களைப் புரிந்துகொள்வதற்காக கீழ் மகாவலி வடிநிலத்தில் உள்ள மெதிரிகிரிய பகுதியைச் சுற்றியுள்ள நிலத்தடி நீரை மதிப்பிடுவதற்கான இளங்கலை ஆராய்ச்சி 2020 இல் பூர்த்தி செய்யப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உள்ள ஒரு சில இளங்கலைப் பட்டதாரிகளுக்கு அவர்களின் தொழில்துறை பயிற்சித் தேவைப்பாடுகளின் கீழ் ஐசோடோப் நீர்வளவியல் தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டது.

4.5.7 2020 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி வெளியீடுகள்

சர்வதேச சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழ்களில் இரண்டு ஆராய்ச்சி வெளியீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சேனாரத்ன. எஸ்., ஜெயவர்தன, ஜே.எம்.சி.கே., எதிரிசிங்க, ஈ.ஏ.என்.வி., & சந்திரஜித், ஆர். (2021). இலங்கையின் அரை வறண்ட ஆற்று வடிநிலத்தில் நிலத்தடி நீர் கனிமமயமாக்கலுக்கான புவி இரசாயனவியல் மற்றும் ஐசோடோப் சான்றுகள். பிரயோக புவி இரசாயனவியல், 124, 104799.

(ii) எதிரிசிங்க, ஈ.ஏ.என்.வி., கருணாரத்ன, ஜி.ஆர்.ஆர்., திலகரத்ன, ஐ.ஏ.என்.டி.பி., குணசேகர, ஜே.டி.சி., & பிரியதர்ஷனி, கே.எஸ்.ஜி.எஸ். (2020). நிலத்தடி நீர் மேம்பாட்டு அம்சங்களுக்காக வட இலங்கையில் யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள இயற்கை நீரின் ஐசோடோப் மற்றும் இரசாயன மதிப்பீடு. சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார ஆய்வுகளில் ஐசோடோப்கள், 56(3), 205-219.

4.5.8 பாடசாலைகளுக்கான அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் (STEM) ஒரு நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு அவசியமாகும். அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (NST) என்பது STEM இன் ஒரு கூறாகும். ஒரு நாட்டில் என்எஸ்டியின் அறிமுகம் மற்றும் விரிவாக்கம் மனித வள அபிவிருத்திக்கான தேவையை அதிகரிக்க வேண்டும்.

எனவே அடுத்த தலைமுறை விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்களை சென்றடையும் வகையில் அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக மாணவர்களின் புரிந்துகொள்ளலை மேம்படுத்துதல் மிகவும் அவசியமாகும். எனவே, 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பாடசாலைகளுக்கு NST ஐ அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் கல்வி அமைச்சின் விஞ்ஞான கிளையுடன் தொடர்வதற்கு இனங்காணப்பட்டுள்ளதுடன் மூன்றாம் நிலை கல்விக்கான நிகழ்ச்சித்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை எதிர்பார்க்கிறது.

4.5.8.1 இரண்டாம் தர பாடசாலை மாணவர்களுக்கான அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான சிமார்ட் புத்தகம்

சிமார்ட் புத்தகமானது online மற்றும் offline பயன்முறையில் கிடைக்கூடியவாறு மின்னணு சுய கல்வி தொகுப்பாக உருவாக்கப்பட்டு வருகிறது, இது கல்வி அமைச்சின் விஞ்ஞான கிளையுடன் தொடங்கப்பட்டது.

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் NST குறித்து நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குழு, தொகுதிக்கான அடிப்படை உள்ளடக்கத்தை உருவாக்குவதற்கு அவர்களது வள ஆதரவை வழங்கினர். பின்னர், சேவை வழங்குநர் மற்றும் எஸ்எல்ஏஈபீ மூலம் சுய-கல்வி தொகுப்பு வடிவத்துடன் பொருந்தும் வகையில் உள்ளடக்கம் மேலும் உருவாக்கப்பட்டது.

சிமார்ட் புத்தகத்தின் சிங்கள பதிப்பு Moodle மென்பொருளில் உருவாக்கப்பட்டதுடன் பல முறை சேவை வழங்குநர்களின் உதவியுடன் திருத்தப்பட்டது. கொவிட் 19 கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் பின்னர் dubbing நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிமார்ட் புத்தகத்தின் சிங்கள பதிப்பு ஐந்து அத்தியாயங்களுடன் Moodle மென்பொருளில் இறுதி செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு அத்தியாயத்திலும் பாடநெறி உள்ளடக்கம், கேள்வித்தாள் மற்றும் மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்க ஒருங்கிணைக்கப்பட்ட எளிய விளையாட்டு ஆகியவை அடங்கும்.

உரையாடல், விளக்கக்காட்சி, கதை, கார்ட்டூன் மற்றும் உண்மைகள் என ஐந்து அத்தியாயங்கள் ஐந்து வெவ்வேறு வடிவங்களில் உருவாக்கப்பட்டன. சர்வதேச அணுசக்தி முகவராண்மையின் தெரிவு செய்யப்பட்ட வீடியோக்களை பயன்படுத்தி சிமார்ட் புத்தகத்தில் இணைப்பதற்கு அவர்களின் அனுமதி வழங்கப்பட்டது.

இது இரண்டாம் தர மாணவர்கள், என்எஸ்டியில் ஆர்வமுள்ள எவருக்கும் அறிமுகப்படுத்தப்படப் போகிறது. இந்த சுய-கற்றல் மின்-தொகுதியானது விஞ்ஞான பாடத்திற்கான ஒரு பாடத்திட்டம் சாராத செயற்பாடாக அவற்றை அறிமுகப்படுத்த உள்ளது. தொகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளடக்கத்தின் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகள் இறுதி செய்யப்பட்டுள்ளன, மேலும் இது அடுத்த ஆண்டில் முழு தொகுப்பையும் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

4.5.8.2 கல்வி நோக்கத்திற்காக ஐஏஈஏ கதிர்வீச்சு அளவிடும் உபகரணங்களை நன்கொடையாக வழங்குதல்

"அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான இரண்டாம் தர மாணவர்கள் மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு கல்வி கற்பித்தல்" தொடர்பான RAS0079 ஐஏஈஏ பிராந்திய செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் கீழ், ஐஏஈஏ இலங்கைக்கு பின்வரும் உபகரணங்களை நன்கொடையாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அனுபவங்களை வழங்குவது கதிர்வீச்சுக் கல்வியின் முக்கிய கூறாகும். நமது உணர்ச்சி உறுப்புக்கள் மூலம் கதிர்வீச்சை இனங்காண முடியாது என்பதால், கதிர்வீச்சைப் பற்றிக் கற்றுக்கொள்வதற்கு குறித்துரைக்கப்பட்ட கருவிகள் இருப்பது கட்டாயமானதாகும்.

உபகரணங்கள் கிடைத்தவுடன் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்வி கற்பதற்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. RAS0079 செயற்திட்டத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ் ரூபா 4,922,623.00 கிரயத்தில் பெறப்படும் உபகரணங்களின் பட்டியல் பின்வருமாறுள்ளது.

(i) அடிப்படை கதிர்வீச்சு Monitors - 12
(ii) கதிர்வீச்சு பரிசோதனை கருவித்தொகுதிகள் - 24
(iii) அளவை மானிகள் – 12
(iv) Dry Ice Cooled Cloud Chamber - 12
(v) Peltier Cooling (Electronic) Cloud Chamber – 12

4.5.8.3 கல்வி அமைச்சின் (MOE) விஞ்ஞான கிளையுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்

MOE இன் விஞ்ஞான கிளையுடன் அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (NST) பற்றிய கல்வி மற்றும் அடைந்துகொள்ளல் நிகழ்ச்சித்திட்டத்தை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2020 செப்தெம்பர் 16 இல் MOE இல் பணிப்பாளர், விஞ்ஞான கிளை, விஞ்ஞான கிளை பதவியணியினர், எஸ்எல்ஏஈபீ இன் தலைவர், எஸ்எல்ஏஈபீ இன் DG மற்றும் IAD இன் பணிப்பாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் போது கடந்த வருடங்களின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் பொழிப்பாக்கப்பட்டு எதிர்கால நடவடிக்கைகளுக்காக திட்டமிடப்பட்டது.



படம் 13 – MOE இல் கூட்டம்

4.5.8.4 எஸ்எல்ஏஈபீ ஆல் நடத்தப்பட்ட ஏனைய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

	வகை	**நிகழ்ச்சித்திட்டம்**	**திகதி**	**இல.**
01	செயலமர்வு	கிரிபத்கொட விஹாரமஹாதேவி பாலிகா வித்தியாலயம் - விடயம் மற்றும் கதிர்வீச்சு	20.02.26	300
02	செயலமர்வு	ஐசோடோப் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி வாய்ப்புகள்	20.01.02	50
03	வசதி விஜயங்கள்	இரசாயனவியல் நிறுவகத்தின் மாணவர்கள்	20.01.28	50



படம் 14 – விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

5.0 சர்வதேச ஒத்துழைப்பு பிரிவு - ஐசீடி

5.1 ஐஏஈஏ மற்றும் ஏனைய தொடர்புபட்ட சர்வதேச அமைப்புக்கள் ஊடான ரீசீ

சர்வதேச அணுசக்தி முகவராண்மையின் (ஐஏஈஏ) தேசிய தொடர்பு அலுவலகமாக செயற்பட்டு வரும் இலங்கை அணுசக்தி சபையின் (எஸ்எல்ஏஈபீ) சர்வதேச ஒத்துழைப்பு பிரிவானது (ஐசீடி) அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்காக அதன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு (ரீசீ) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஐஏஈஏ உடனான நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்புக்கு முக்கியமாக பொறுப்பாக உள்ளது. இது நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்கி வழிநடாத்துகின்றதுடன் இருதரப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து அமுல்ப்படுத்துவதற்கு ஐஏஈஏ உறுப்பு நாடுகளுடன் இது செயற்படுகிறது.

இப் பிரிவு சர்வதேச அணுசக்தி முகவராண்மையின் நிபந்தனைகளுக்கு இணங்குவதிலும் நாட்டில் அணு தொழில்நுட்பம் தொடர்பான பயன்பாடுகளை மேம்படுத்துவதில் ஐஏஈஏ இடமிருந்து பெறப்பட்ட கணிசமான உதவிகளைப் பாதுகாப்பதிலும் அதன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இலங்கையின் தேசிய பிரதான அமைப்பாக சர்வதேச அணுசக்தி முகவராண்மைக்கு எஸ்எல்ஏஈபீ இன் வகிபங்கை திறம்பட மேற்கொண்டு வருகிறது,

அணுசக்தி துறையில் மனித வளங்களை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்ற தோழமை, விஞ்ஞானவியல் விஜயங்கள், பயிற்சி, நிபுணர் பணி மற்றும் செயற்திட்டங்களின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளைச் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் போன்ற வடிவங்களில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டங்களின் கீழ் ஐஏஈஏ அதன் உறுப்பு நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது. ஐஏஈஏ ரீசீ மூலம் நாட்டிற்கு அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இச் செயற்திட்டத்தின் திட்டமிடல், வடிவமைத்தல், அமுல்ப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பன சர்வதேச ஒத்துழைப்பு பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள புவியியல் தளத்தின் பிரகாரம் அமுல்ப்படுத்தப்படும் பல்வேறு செயற்திட்டங்கள் மூலம் இத்தகைய தொழில்நுட்ப உதவி பெறப்படுகிறது.

- தேசிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டங்கள் (ரீசீ செயற்திட்டங்கள்)
- பிராந்திய தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டங்கள் (உடன்படிக்கை/ உடன்படிக்கையல்லாத செயற்திட்டங்கள்)
- இடை-பிராந்திய தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டங்கள்

ஏனைய செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

- ஆராய்ச்சி ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டம் (ஒருங்கிணைந்த ஆராய்ச்சி செயற்திட்டங்கள்- சீஆர்பி)

  - அணு மின்சக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் செயற்திட்டம் (சீஈபீ உடன் இணைந்து)
  - அணு அறிவு முகாமைத்துவ செயற்பாடுகள்
    - செயற்பாட்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் (அணு அறிவைப் பரப்புதல் மற்றும் உள்ளுர் இயலளவை பலப்படுத்துதல்)
    - எல்எம்எஸ் (கற்றல் முகாமைத்துவ முறைமை) அபிவிருத்தி
    - IoT (Internet of Things)

அணுசக்தி தொழில்நுட்ப துறையில் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சர்வதேச அமைப்புகளை இப் பிரிவு ஒருங்கிணைக்கின்றது.

- கொரியாவில் பிராந்திய ஒத்துழைப்பு உடன்படிக்கை பிராந்திய அலுவலகம் (RCARO)

- கல்வி, விளையாட்டுக்கள், கலாச்சாம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு (MEXT) ஜப்பான்
- ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (JAICA)
- கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (KOICA)
- கோட்பாட்டு பௌதீகவியலுக்கான சர்வதேச நிலையம் (ICTP) Trieste, இத்தாலி போன்றன.

2020 ஆம் ஆண்டின் போது, ஐஏஈஏ இன் ஏனைய பிராந்திய மற்றும் இடை பிராந்திய செயற்திட்டங்களில் ஈடுபடும்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதின்மூன்று (13) தேசிய ரீசீ செயற்திட்டங்களை இலங்கையில் அமுல்ப்படுத்தும் பொருட்டு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன,

கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை இருந்த போதிலும், இலங்கை விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக இலங்கையால் பல online நிபுணர் உதவிகளைப் பெற முடிந்தது. வெளிநாட்டு பயிற்சி, செயலமர்வு, கூட்டங்கள், மாநாடுகள் போன்றவற்றில் பங்கேற்பதற்கான எட்டு (08) வாய்ப்புக்கள் விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் மற்றும் தொடர்புடைய தேசிய நிறுவனங்களில் உள்ள ஆராய்ச்சியாளர்களால் பெறப்பட்டன. மேலும் ஐஏஈஏ இன் பிராந்திய மற்றும் இடை பிராந்தியங்களுக்கு இடையேயான தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டங்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட அத்தகைய நிகழ்வுகளில் மெய்நிகரான பங்பற்றலிற்கு எமது விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களாலும் வாய்ப்புக்கள் பெறப்பட்டன.

செயற்திட்டங்களின் திட்டமிட்ட செயற்பாடுகளைச் செய்வதற்குத் தேவையான பல்வேறு வகையான மதிப்புமிக்க விஞ்ஞானவியல் உபகரணங்களும் இரசாயனங்களும் 2020 ஆம் ஆண்டில் இத் தேசிய செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட எதிரேயுள்ள நிறுவனங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்பட்டு வரும் செயற்திட்டங்கள்;

இல.	**செயற்திட்ட இல.**	**செயற்திட்டத்தின் பெயர்**
1	எஸ்ஆர்எல் 5049	ஆடுகளின் வயிற்றுப் புழுத் தொற்றைக் கட்டுப்படுத்த உதவுதல்
2	எஸ்ஆர்எல் 5050	தேயிலையின் மரபணு முன்னேற்றத்தை ஆதரித்தல்
3	எஸ்ஆர்எல் 6037	Positron Emission Tomography Radiopharmaceuticals உற்பத்திக்கான மருத்துவ Cyclotron வசதியை நிறுவுதல்
5	எஸ்ஆர்எல் 9011	கதிர்வீச்சு வளமூலங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒழுங்குமுறை உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல்
6	எஸ்ஆர்எல் 1009	அழிவு எதிர்ப்பு சோதனைக்கான தேசிய நிலையத்தை வலுப்படுத்துதல்
7	எஸ்ஆர்எல் 2010	அணு மின்வலு நிகழ்ச்சித்திட்டத்திற்கான வரைபடத்தை உருவாக்குதல்
8	எஸ்ஆர்எல் 5045	அணு விவசாயத்திற்கான தேசிய நிலையத்தை நிறுவுதல்
9	எஸ்ஆர்எல் 5046	பால் மாடு உற்பத்தி மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்: பெண் விவசாயிகளை வலுவூட்டுதல்
10	எஸ்ஆர்எல் 5047	Vector-borne நோய்க் கட்டுப்பாட்டுக்கான மருத்துவம் மற்றும் மூலக்கூறு பூச்சியியலில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் சேவைகளுக்கான தேசிய நிலையத்தை நிறுவுதல்
11	எஸ்ஆர்எல் 5048	உணவு மற்றும் தீவனப் பாதுகாப்பிற்கான தேசிய திறனை வலுப்படுத்துதல்

12	எஸ்ஆர்எல் 6036	யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் அணு மருத்துவப் பிரிவை (Radioimmunoassay ஆய்வுக்கூடம்) நிறுவுதல்
13	எஸ்ஆர்எல் 7006	நீர் வள முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்

இலங்கை அணுசக்தி சபையுடனான (எஸ்எல்ஏஈபீ) ஆலோசனையுடன் நாட்டிலுள்ள தேசிய பங்குதாரர் நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட பின்வரும் ஏழு (07) தேசிய செயற்திட்ட முன்மொழிவுகள் அடுத்த தொழில்நுட்ப ஒத்துழைப்பு சுழற்சி 2022/23 இற்கான பரிசீலனைக்காக ஐஏஈஏ இற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

சமர்ப்பிக்கப்பட்ட எட்டு (08) கருத்துக்கள் ஆரம்பத்தில் ஐஏஈஏ ஆல் வடிவமைப்பு கட்டத்தின் கீழ் மேலதிக மேம்பாட்டிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் சமர்ப்பிக்கப்பட்ட எட்டு (08) செயற்திட்டக் கருத்துக்களில் உள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கையை ஏற்றுக்கொள்வதன் ஊடாக இச் செயற்திட்டங்கள் மூலம் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு வரவுள்ளது.

2022 இல் இச் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் தொடங்கப்படும்.

2022/23 ரீசீ சுழற்சிக்காக ஐஏஈஏ இற்கு சமர்ப்பிக்கப்பட்ட தேசிய செயற்திட்ட முன்மொழிவுகள்

இல.	**செயற்திட்ட தலைப்பு**	**எதிர்ப்பகுதி நிறுவனம்**
1	புற்றுநோய் நோயாளி பராமரிப்பு முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் molecular imaging நுட்பங்களுக்குத் தேவையான கதிரியக்க மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான மருத்துவ Cyclotron வசதியை இலங்கையில் நிறுவுதல் (கட்டம் II)	இலங்கை அணுசக்தி சபை (எஸ்எல்ஏஈபீ) சுகாதார அமைச்சு
2	இலங்கையில் நோயாளிகள் மற்றும் சுகாதார பராமரிப்பு வழங்குநர்களுக்கு கதிர்வீச்சு பாதுகாப்பு திறன்களை உறுதிப்படுத்துவதன் மூலம் தரமான மற்றும் ஆரம்பகால புற்றுநோய் கண்டறிதல் மற்றும் பல்வேறு சிகிச்சை முறைகளுக்கு சமமான அணுகலை மேம்படுத்துதல்	தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் இலங்கை அணுசக்தி சபை (எஸ்எல்ஏஈபீ)
3	கதிர்வீச்சு சம்பந்தப்பட்ட மருத்துவ நடைமுறைகளுக்கான நோயாளி பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நிறுவுதல்	சுகாதார அமைச்சு இலங்கை அணுசக்தி சபை (எஸ்எல்ஏஈபீ)
4	அணு அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்கு பதிலளிப்பதற்கான தேசிய திறன்களை வலுப்படுத்துதல்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை (ஏஈஆர்சீ)
5	காலநிலை சிமார்ட் விவசாய நடைமுறைகள் மூலம் பச்சை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் திறன் உருவாக்கம்	இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
6	தொழில்துறை உற்பத்தித்திறனுக்கான முன்கூட்டிய கதிரியக்க முறைகள் மற்றும் ஏனைய முன்கூட்டிய NDT முறைகளின் பயன்பாட்டை அதிகரித்தல்”	அழிவு எதிர்ப்பு சோதனைக்கான தேசிய நிலையம், (என்சீஎன்டிஎ) இலங்கை அணுசக்தி சபை (எஸ்எல்ஏஈபீ)
7	இலங்கையின் தனிமைப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்திப் பகுதிகளில் மலட்டு பூச்சி	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

	நுட்பத்தை ஒருங்கிணைத்து முலாம்பழ ஈக்களின் எண்ணிக்கையை அடக்குதல்	
8	அணு மின்வலு நிகழ்ச்சித்திட்டத்திற்கான தேசிய உட்கட்டமைப்பை உருவாக்குதல்	இலங்கை அணுசக்தி சபை (எஸ்எல்ஏஈபீ)

கொவிட்-19 தொடர்பாக பெறப்பட்ட உதவி

கொவிட்19 இன் தொற்றுநோய் நிலைமையின் போது, இலங்கையால் ஐஏஈஏ இடமிருந்து மூன்று PCR இயந்திரங்களை அவற்றுடன் தொடர்புடைய ஏனைய பொருட்களுடன் பெற்றுக்கொள்ள முடிந்தது, மேலும் இந்த இயந்திரங்கள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் கண்டி பொது வைத்தியசாலை ஆகியவற்றிற்கு விநியோகிக்கப்பட்டன.

பிராந்திய ஒத்துழைப்பு உடன்படிக்கை (ஆர்சீஏ)

ஆர்சீஏ என்பது ஐஏஈஏ இன் அனுசரணையில் கீழ் கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான ஒரு சர்வதேச அரசு உடன்படிக்கையாகும், ஆசியா மற்றும் பசிபிக் (ஆர்சீஏ) இற்கான அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் அமைதியான பயன்பாடுகளின் போது கூட்டிணைவு ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி செயற்திட்டங்களை மேம்படுத்தி, ஒருங்கிணைத்து, அமுல்படுத்துவதற்கான பிராந்திய கூட்டுறவு உடன்படிக்கையானது தெற்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா, பசிபிக் மற்றும் தூர கிழக்கில் அமைந்துள்ள ஐஏஈஏ உறுப்பு நாடுகளிடையேயான ஒரு சர்வதேச அரசு உடன்படிக்கையாகும்.

இலங்கையில் அமுல்ப்படுத்தப்படும் பல்வேறு ஆர்சீஏ செயற்திட்டங்கள் சமூக-பொருளாதார தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கும் அணு தொழில்நுட்பங்களை வழங்குகிறது. இச் செயற்திட்டங்கள் பின்வரும் பகுதிகளில் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

- விவசாயம்
- சுற்றாடல்
- தொழில்துறை
- மனித ஆரோக்கியம் மற்றும்
- கதிர்வீச்சு பாதுகாப்பு

மேற்படி பகுதிகளில் தற்போது 14 ஆர்சீஏ செயற்திட்டங்களில் இலங்கை பங்குபற்றுகின்றது.

கொவிட்-19 தொற்றுநோய் காணப்பட்ட போதிலும் இந்த ஆர்சீஏ செயற்திட்டங்களின் மூலம் இலங்கை விஞ்ஞானிகள் ஐஏஈஏ ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு வகையான கூட்டங்கள், பயிற்சிகள், செயலமர்வுகள் போன்றவற்றில் online மூலம் கலந்துகொள்ளும் வாய்ப்புகளைப் பெற்றனர். நாட்டில் ஆர்சீஏ செயற்பாடுகளைச் அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான சில உபகரணங்கள் ஐஏஈஏ இடமிருந்து கோரப்பட்டு பெறப்பட உள்ளது.

கொவிட்19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, 2020 இல் இலங்கையில் ஐஏஈஏ நிகழ்வுகளை நடாத்த இலங்கையால் முடியவில்லை.

இலங்கையின் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி செயற்திட்டங்களை (சீஆர்பி) ஈடுபடுத்தல்

2020 இல் இலங்கை விஞ்ஞானிகளால் ஈடுபடுத்தப்பட்ட சீஆர்பி செயற்திட்டங்களின் பட்டியல்:

- டி52038 - உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையின் பால் உற்பத்திகளை அங்கீகரிப்பதில் நிலையான ஐசோடோப்கள் மற்றும் பல கூறுகள் பகுப்பாய்வை ஒரு தடமறிதல் முறைமையாகப் பயன்படுத்துதல்.

- டி52040 - இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால்மாவின் நம்பகத்தன்மை, பாதுகாப்பு மற்றும் தரத்தை மதிப்பிடுவதற்கான விரைவான திரையிடல் முறைகளின் அபிவிருத்தி.

- ஜே02012 - கிடைக்கக்கூடிய Radionuclide அடையாள சாதனங்களின் (RIDs) கண்டறிதல் திறன்களை புலனாய்வு செய்து மேம்படுத்துதல்.

- எவ்32007 - நைட்ரஜன் மாசுபாடு மற்றும் நதிகள் மற்றும் ஏரிகளின் Eutrophication ஆகியவற்றை ஆய்வுசெய்வதற்கான ஐசோடோப்கள்.

- ஜே 02005 - ஆபத்தான கொள்கலன்களின் கதிர்வீச்சு கண்டறிதல் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு.

- சீஆர்பி கே41016 - ஐசோடோபிக் மற்றும் அணு கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் தெரிவுசெய்யப்பட்ட கடலோரப் பகுதிகளில் மாசுபாட்டின் தற்காலிக போக்குகள் தொடர்பான ஆய்வு.

- எவ்23032 - ‘‘காப்பகப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் கலாச்சார பாரம்பரிய கலைப்பொருட்களின் ஒருங்கிணைப்பு பாதுகாப்பிற்காக கதிர்வீச்சு கையாளல் முறைகள் மற்றும் புதிய Resin Formulations என்பவற்றை உருவாக்குதல்’’

- கே41015- ‘‘இலங்கையில் Marine Paleo-பதிவுகளில் காலநிலை போக்குகள் மற்றும் மாறுபாட்டின் கதிரியக்க பகுப்பாய்வு மற்றும் ஐசோடோபிக் ஆய்வுகள்’’

- ஐ12007 – ‘‘Small Modular Reactor (SMR) செயற்திட்டங்களின் பொருளாதார மதிப்பீடு: முறைமைகள் மற்றும் பயன்பாடுகள்’’

மனித வள அபிவிருத்தியை மேம்படுத்துவதன் மூலம் பிராந்திய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஆர்சீஏ இல் உடன்படிக்கை அல்லாத பிராந்திய செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அச் செயற்திட்டங்கள் முக்கியமாக இருந்தன: கதிர்வீச்சு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் ஐஏஈஏ இன் உறுப்பு நாடுகளில் தொழில், மருத்துவம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் நிறுவனங்களில் உள்ளுர் விஞ்ஞானிகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் பயிற்சிகள், கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் கலந்துகொள்வதற்கு வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் மனித வள அபிவிருத்தியை மேற்கொள்ளுதலும் இரண்டாவதாக நிபுணர் சேவையை வழங்குவதற்காகவும் ஆகும்.

2020 ஆம் ஆண்டில் மூன்று (03) இடை பிராந்திய செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன, மேலும் ஒரு பிராந்தியத்திற்கு மட்டுமல்ல, ஏனைய பிராந்தியங்களுக்கும் பொருந்தக்கூடிய நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் இத் தன்மையிலான செயற்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட செயற்திட்ட வகைகளின் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் பணிபுரியும் அதன் உறுப்பு நாடுகளின் உத்தியோகத்தர்களுக்கு பிராந்திய அளவில் பயிற்சி, செயலமர்வு, கூட்டம், சிம்போசியம் மற்றும் மாநாடுகளில் கலந்துகொள்வதன் மூலம் சர்வதேச வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை ஐஏஈஏ வழங்குகிறது.

2020 ஆம் ஆண்டில் எஸ்எல்ஏஈபீ நாட்டுக்கு பெரிதும் பயனளித்த பின்வரும் நிறுவனங்களிலிருந்து: ஜப்பான் கல்வி, கலாச்சாரம், விளையாட்டு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு (MEXT), கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (KOICA) மற்றும் தென் கொரியா பிராந்திய கூட்டுறவு உடன்படிக்கை பிராந்திய அலுவலகம் (RCARO) மற்றும் இத்தாலி கோட்பாட்டு பௌதீகவியலுக்கான சர்வதேச நிலையம் (ICTP) போன்றவற்றிலிருந்து பல மெய்நிகர் அடிப்படையிலான அறிவுப் பகிர்வு/ பயிற்சி வாய்ப்புகளைப் பெற்றது.

5.2 அறிவு முகாமைத்துவம்

அறிவு முகாமைத்துவம் மூன்று (03) அடிப்படை கூறுகளை: மக்கள், செயன்முறைகள் மற்றும் தொழில்நுட்பம் கொண்டுள்ளது. அறிவின் பகிர்வு மற்றும் பயன்பாட்டை தூண்டி வளர்த்தல்; அறிவைக் கண்டறிந்து, உருவாக்கி, கைப்பற்றி, பகிர்ந்து கொள்வதற்கான செயன்முறைகள் அல்லது முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தை சேமித்து, அறிவை அணுகக்கூடியதாக்குதல், மக்கள் ஒன்றாக இல்லாவிட்டாலும் ஒன்றாக வேலை செய்வதை அனுமதித்தல் என்பவற்றிற்காக அறிவு முகாமைத்துவம் மக்கள் மற்றும் நிறுவன கலாச்சாரத்தின் மீது கவனம் செலுத்துகிறது, மக்கள் மிக முக்கியமான கூறாகும், ஏனெனில் அறிவை முகாமை செய்தலானது அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் மீண்டும் பயன்படுத்தவும் மக்களின் விருப்பத்தில் தங்கியுள்ளது.

அறிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் பொதுவாக நிறுவன நோக்கங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளன, மேலும் அவை பகிரப்பட்ட நுண்ணறிவு, மேம்படுத்தப்பட்ட செயற்திறன், போட்டி நன்மைகள் அல்லது புதுமையின் உயர் நிலைகள் போன்ற குறித்துரைக்கப்பட்ட விளைவுகளை அடைந்துகொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

சர்வதேச நிகழ்வில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் ஆர்வமுள்ள ஏனைய பணியாளர்களுடன் தமது அறிவைப் பகிர்ந்துகொள்ளும் வகையில் இப்பிரிவால் பல செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடிந்தது.

5.3 அணு மின்சக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டம் - 2020

இலங்கை அணுசக்தி சபை (எஸ்எல்ஏஈபீ) இலங்கை மின்சார சபையுடன் (சீஈபீ) இணைந்து "இலங்கையில் அணு மின்சக்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒரு வீதி வரைபடத்தை உருவாக்குதல்" என்ற செயற்திட்டத்தை 2018 முதல் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் தொடங்கியது.

இலங்கை சூழலில் அணு மின்சக்தியை ஒரு சாத்தியமான விருப்பமாக கருதுவதற்கு அரசியல், பொருளாதார, சமூகவியல், தொழில்நுட்ப, சுற்றாடல் மற்றும் சட்ட அம்சங்களை ஆய்வு செய்வதற்கு ஐஏஈஏ ஏற்கனவே தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியுள்ளது.

தற்போது, இலங்கை மின்சார உற்பத்திக்காக அதன் நீர் வளங்களின் செறிவூட்டலை கிட்டத்தட்ட அடைந்துள்ளதுடன், மின்சார உற்பத்திக்கு இறக்குமதி செய்யப்பட்ட புதைபடிவ (fossil) எரிபொருளைச் சார்ந்திருப்பது நாட்டில் 50% இற்கும் அதிகமான மின்சார உற்பத்தியை அடைவதன் மூலம் அதிகரித்துள்ளது. இலங்கையில் வருடாந்தம் 5 - 6% மின்சாரத்திற்கான கேள்வி அதிகரித்து வருவதோடு, நாட்டில் எதிர்கால முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படுவதால், நீண்ட காலத்திற்கு நாட்டிற்கு அதிக எரிசக்தி வளமூலங்கள் தேவை என்று கருதப்படுகிறது.

உண்மையில், இறக்குமதி செய்யப்பட்ட புதைபடிவ எரிபொருட்களில் அதிகமாக தங்கியிருப்பதை தவிர்ப்பதற்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் மாற்று எரிசக்தி விநியோக விருப்பங்களை ஆராய்வது மிகவும் முக்கியமாகும். காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கும், நாட்டிலும் பிராந்தியத்திலும் சமூக-பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான வழிமுறையாக அணு மின்சக்தி அதிக முக்கியத்துவம் பெறும். இலங்கை ஒரு தீவு நாடு என்பதால், அணு மின் நிலையங்களை அறிமுகப்படுத்துவதும் அவற்றின் இருப்பிடமும் அண்டை நாடுகளிடையே பிராந்திய ஒத்துழைப்பு உடன்படிக்கையுடன் கவனமாக இனங்காணப்பட வேண்டும்.

மேலும், எஸ்எல்ஏஈபீ மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை வலுப்படுத்த பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டது.

- இலங்கையில் அணு மின்சக்தி திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு முக்கிய குழுக்களை உருவாக்குதல்

- அணு அறிவு பாகுபாட்டு நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்துதல்.

- சர்வதேச அளவிலான பயிற்சியையும், வெளிப்பாட்டையும் வழங்குவதன் மூலம் அணு மின்சக்தி திட்டமிடல் செயற்திட்டம் தொடர்பான மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்துதல்

- பங்குதாரர் நிறுவனங்களிலிருந்தான பொறியியலாளர்கள்/ விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள்.

- சீஈபீ நீண்ட காலத்தின் கீழ் அணு மின்சக்தி திட்டமிடல் செயற்திட்டம் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைக்கும் வகையில் ஐஏஈஏ உதவி மூலம் சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுதல்.

- தலைமுறை மற்றும் விரிவாக்கல் திட்டம்

- அணுசக்தி வளமூலங்களை அடிப்படையாகக் கொண்ட இலங்கை அரசாங்கக் கொள்கையை தயாரித்து பலப்படுத்துதல்

எஸ்எல்ஏஈபீ உத்தியோகபூர்வமாக 2020 சனவரியில் ஐஏஈஏ இன் அணுசக்தி பிரிவிடம் இருந்து இலங்கைக்கான ஒருங்கிணைந்த அணுசக்தி உட்கட்டமைப்பு மீளாய்வு (ஐஎன்ஐஆர்) பணியை கோரியது. பின்னர், சுய மதிப்பீட்டு அறிக்கை (SER) ஏற்கனவே ஐஏஈஏ இற்கு 2020 மே மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஐஏஈஏ ஏற்கனவே இலங்கைக்கான கட்டம் 1 – ஐஎன்ஐஆர் பணிக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

மேலும், 2020 செப்தெம்பர் 14 முதல் 17 வரை ஐஎன்ஐஆர் இற்கு முன்னரான பணி நடாத்தப்பட்டு SER ஒரு மெய்நிகர் வடிவமாக மீளாய்வு செய்யப்பட்டது. உண்மையில், அந்த அணு உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவு (என்ஐடிஎஸ்), ஐஏஈஏ நிபுணர்களின் மதிப்பாய்வுகளின் பிரகாரம் திருத்தப்பட்ட SER ஐக் கோரியது. ஐஏஈஏ இற்கு SER இன் இறுதி மதிப்பாய்விற்கு சமர்ப்பிப்பதற்கு இலங்கை விஞ்ஞானிகள் 2020 இல் மதிப்பாய்வு மற்றும் திருத்தும் செயன்முறையில் ஈடுபடுகின்றனர்.

மேலும், ஐஏஈஏ பல செயலமர்வுகளை நடாத்தியதுடன் இலங்கையின் அணுசக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மெய்நிகர் அடிப்படையாக மதிப்பாய்வு செய்தது.

2020 ஆம் ஆண்டில் ஐஏஈஏ உதவியுடன் நடாத்தப்பட்ட மெய்நிகர் அடிப்படையிலான அணுசக்தி செயலமர்வுகள்.

இல.	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	நிபுணர்களின் பெயர்	நாடு	காலப்பகுதி	ஒருங்கிணைப்பு நிறுவனம்/கள்
1	மெய்நிகர் அடிப்படையிலான முன்னரான- ஐஎன்ஐஆர் & சுய மதிப்பீட்டு அறிக்கை மதிப்பாய்வு செயலமர்வு	திரு. ஜோஸ் பஸ்டோஸ் திரு. பிரெடெரிக் போர்டின்	ஐஏஈஏ	2020 செப்தெம்பர் 14 - 17	சீஈபீ & எஸ்எல்ஏஈபீ
		திரு. ஜுலியோ பார்சிலோ	ஸ்பெயின் (ஐஏஈஏ வெளி நிபுணர்)		
		திரு. குங் மோ நாம்	அவதானிப்பாளர் (ஐஏஈஏ)		
2	இலங்கைக்கான விரிவான அறிக்கையின் மதிப்பாய்வு	திரு. மில்கோ கோவாச்சேவ் திரு. ஜோஸ் பஸ்டோஸ்	ஐஏஈஏ	2020 நவம்பர் 13	சீஈபீ & எஸ்எல்ஏஈபீ

	முடிவுகளை பகிர்வதற்கான மெய்நிகர் கூட்டம்	திரு. பிரெடெரிக் போர்டின் திரு. குங் மோ நாம்			
		திரு. ஸ்டீபன் மார்டின்	ஐக்கிய இராச்சியம் (ஐஏஈஏ வெளி நிபுணர்)		

செயற்திட்டத்தின் பணிக்குழு கூட்டங்கள் & வழிகாட்டல் குழு கூட்டங்கள்

2019 மே 10 முதல் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் கீழ் "இலங்கையில் அணுசக்தி விருப்பத்தை ஆய்வு செய்வதற்கு" செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு நிறுவப்பட்டதுடன் இலங்கை சூழலில் நடைபெற்று வரும் அணுசக்தி உட்கட்டமைப்பு அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கு எஸ்எல்ஏஈபீ பதவியணியினரிடதிருந்து 09 பணிக்குழுக்கள் நிறுவப்பட்டது.

ஐஏஈஏ முறைமையின் பிரகாரம் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்காக 2020 இல் பல செயற்குழு கூட்டங்கள், வழிகாட்டல் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

	கூட்டத்தின் பெயர்	**பங்குபற்றும் நிறுவனங்கள்**	**இடம்**	**திகதி**
1	பணிக்குழு கூட்டம்	சீஈபீ, எஸ்எல்ஏஈபீ, ஏஈஆர்சீ	கேட்போர் கூடம், எஸ்எல்ஏஈபீ	2020 சனவரி 08
2	பணிக்குழு கூட்டம்	சீஈபீ, எஸ்எல்ஏஈபீ, ஏஈஆர்சீ	கேட்போர் கூடம், எஸ்எல்ஏஈபீ	2020 மார்ச் 10
3	பணிக்குழு கூட்டம்	சீஈபீ, எஸ்எல்ஏஈபீ, ஏஈஆர்சீ	கேட்போர் கூடம், எஸ்எல்ஏஈபீ	2020 ஆகஸ்ட் 13
4	"அணு மின்சக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் செயற்திட்டத்தின் முன்னேற்றம்" மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டது	எம்ஓபிஈ, சீஈபீ, எஸ்எல்ஏஈபீ, ஏஈஆர்சீ	கேட்போர் கூடம், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு (எம்ஓபிஈ)	2020 யூலை 28
5	09 செயற்குழுக்கள் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரிடம் முன்னேற்றத்தை சமர்ப்பித்தன.	எம்ஓபிஈ, சீஈபீ, எஸ்எல்ஏஈபீ, ஏஈஆர்சீ	கேட்போர் கூடம், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சகம்	2020 செப்தெம்பர் 29
6	"அணு மின்சக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் செயற்திட்டத்தின் முன்னேற்றம்" மின்சக்தி அமைச்சின் மாண்புமிகு அமைச்சரிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.	எம்ஓபிஈ, எஸ்எல்ஏஈபீ	கேட்போர் கூடம், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சகம்	2020 திசெம்பர் 16

6.0 நிர்வாகம், மனித வளங்கள் மற்றும் பெறுகை பிரிவு

நிறுவப்பட்ட சட்டத்திற்கும் அரசாங்கத்தின் ஏனைய பொருத்தமான சட்டத் தேவைப்பாடு மற்றும் பிரமாணங்களிற்கும் முழுமையாக இணங்கி நாட்டினதும் அரசாங்கத்தினதும் சிறந்த நலனிற்காக எஸ்எல்ஏஈபீயினை நிர்வகிக்கும் பொறுப்பு நிர்வாகப் பிரிவிற்கு உள்ளது. அலுவலகம் மற்றும் அலுவலக முறைமைகளின் வினைத்திறனான முகாமைத்துவம், பொது நிர்வாகம் மற்றும் பெறுகை என்பன இப் பிரிவின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற பிரதான பகுதிகளாகும். இப் பிரிவு வருடாந்த நிர்வாக அறிக்கைகளை தயாரித்தல், மனித வள அபிவிருத்தி, விஞ்ஞான ரீதியற்ற உபகரணங்கள் மற்றும் கட்டிடங்களின் பராமரிப்பு, பதவியணியை நாளதுவரையாக்கி சமாப்பித்தல், திறைசேரிக்கு மூலதன பாதீட்டை நாளதுவரையாக்கி சமர்ப்பித்தல், உயர் அதிகாரிகளால் கோரப்படும் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்கள், அறிக்கைகளை தயாரிப்பதில் உதவுதல், வினைத்திறனான தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமைகளை ஸ்தாபித்தல், பயன்பாட்டு பெறுகை செயன்முறையின் முகாமைத்துவம், பயன்பாட்டு சேவைகளின் முகாமைத்துவம் மற்றும் எஸ்எல்ஏஈபீயின் விஞ்ஞான மற்றும் விஞ்ஞான ரீதியற்ற பிரிவுகளால் கோரப்படும் ஏனைய உதவிச் சேவைகள் என்பவற்றிற்கு இப் பிரிவு பொறுப்பாக உள்ளது.

6.1 பதவியணி நிர்வாகம், மனித வளம் மற்றும் பெறுகை பிரிவு

பணிப்பாளர்	: 01
பிரதி பணிப்பாளர்	: 01
நிர்வாக உத்தியோகத்தர்	: 01
முகாமைத்துவ உதவியாளர்	: 09
மின்னியலாளர்	: 01
சாரதி	: 05
அலுவலக உதவியாளர்	: 06
சாரதி	: 05
அலுவலக உதவியாளர்	: 06
பெறுகை பிரிவு- முகாமைத்துவ உதவியாளர்	: 03

6.2 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எஸ்எல்ஏஈபீயின் மொத்த பதவியணி தகவல்கள்

பதவி	சம்பளக் குறியீடு	சேவை நிலை	ஏஈபீ இற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்			எஸ்எல்ஜீசீ இற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்			என்சீஎன்டிரீ இற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்		
			அங்கீக. ரிக்கப்பட் டது	உள்ள படியா னது	வெற்றிடம்	அங்கீக. ரிக்கப்பட் டது	உள்ள படியா னது	வெற்றிடம்	அங்கீக. ரிக்கப்பட் டது	உள்ள படியா னது	வெற் றிடம்
பணிப்பாளர் நாயகம்	எச்எம் 2-3	4	1	1							
பணிப்பாளர் - (பொது விஞ்ஞானவியல் சேவைகள்)	எச்எம் 1-3	4	1	1							
பணிப்பாளர் - (வாழ்க்கை விஞ்ஞானம்)	எச்எம் 1-3	4	1	1							
பணிப்பாளர் - (கைத்தொழில் பயன்பாடுகள்)	எச்எம் 1-3	4	1	1							
பணிப்பாளர் - (என்.சீ.என்.டி.ரீ)	எச்எம் 1-3	4							1	1	
பணிப்பாளர் - (எஸ்.எல்.ஜீ.சீ)	எச்எம் 1-3	4				1		1			
பணிப்பாளர் - (சர்வதேச ஒத்துழைப்பு)	எச்எம் 1-3	4	1	1							
பணிப்பாளர் - (நிர்வாகம்)	எச்எம் 1-3	4	1	1							
பணிப்பாளர் - (நிதி)	எச்எம் 1-3	4	1	1							
பொறி செயற்பாட்டு முகாமையாளர்	எச்எம் 1-1	4				1	**1**				
பிரதி பணிப்பாளர் – (கைத்தொழில் பயன்பாடுகள்)	ஏஆர் 2	4	1		1						
பிரதி பணிப்பாளர் –(என்.டி.ரீ)	ஏஆர் 2	4							1		1
பிரதி பணிப்பாளர் –(Isotope நீரியல்.)	ஏஆர் 2	4	1	1							
பிரதி பணிப்பாளர் –(பொது விஞ்ஞானவியல் சேவைகள்)	ஏஆர் 2	4	1	1							
பிரதி பணிப்பாளர் – (வாழ்க்கை விஞ்ஞானம்)	ஏஆர் 2	4	1	1							
பிரதி பணிப்பாளர் –(கதிர்வீச்சு செயன்முறைப்படுத்தல்.)	ஏஆர் 2	4	1		1						
சிரேஷ்ட விஞ்ஞானவியல் உத்தியோகத்தர்	ஏஆர் -1	4	20	20		6	6		16	16	
விஞ்ஞானவியல் உத்தியோகத்தர்கள்											
ஏடி/டிடி (நிதி மற்றும் வழங்கல்கள்)	எம்எம் 1-1	4	1	1							
ஏடி/டிடி (நிர்வாகம் & மனித வள முகாமைத்துவம்)	எம்எம் 1-1	4	1	1							
ஏடி/டிடி (சர்வதேச ஒத்துழைப்பு)	எம்எம் 1-1	4	1		1						
உள்ளக கணக்காய்வாளர்	எம்எம் 1-1	4	1	1							
சபை செயலாளர்/ சட்ட உத்தியோகத்தர்	எம்எம் 1-1	4	1	1							

பதவி	சம்பளக் குறியீடு	சேவை நிலை	ஏஈபீ இற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்			எஸ்எல்ஜீசீ இற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்			என்சீஎன்டிரீ இற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்		
			அங்கீக. ரிக்கப்பட் டது	உள்ள படியா னது.	வெற்றிடம்	அங்கீக. ரிக்கப்பட் டது	உள்ள படியா னது.	வெற்றிடம்	அங்கீக. ரிக்கப்பட் டது	உள்ள படியா னது.	வெற் றிடம்

நிர்வாக உத்தியோகத்தர் (நிர்வாகம் மற்றும் மனித வள முகாமைத்துவம்)	ஜேஎம் 1-2	3	1	1							
நிர்வாக உத்தியோகத்தர்	ஜேஎம் 1-2	3				1	1				
நிதி உத்தியோகத்தர்	ஜேஎம் 1-2	3				1	1		1		1
உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்	ஜேஎம் 1-2	3	1	1							
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	ஜேஎம் 1-2	3	1	1							
பணிப்பாளர் நாயகத்திற்கான தனிப்பட்ட உதவியாளர்*	ஜேஎம் 1-1	3	1		1						
தலைவரிற்கான செயலாளர்*	ஜேஎம் 1-1	3	1		1						
நூலகர் மற்றும் தகவல் உத்தியோகத்தர்	எம்ஏ 5-2	3	1	1							
தொழில்நுட்ப உதவியாளர்	எம்ஏ 2-2	2	12	9	3	6	6		11	9	2
புத்தக எழுதுநர்	எம்ஏ 2-2	2	1	1							
முகாமைத்துவ உதவியாளர்	எம்ஏ 1-2	2	26	26		3	3		6	6	
மின்னியலாளர்/ பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர்	பிஎல் 3	1	1	1		4	4				
கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்	பிஎல் 3	1	1	1							
சாரதிகள்	பிஎல் 3	1	5	5		4	3	1	1	1	
ஆய்வுகூட உதவியாளர்	பிஎல் 1	1	6	5	1	3	3		6	6	
அலுவலக உதவியாளர்	பிஎல் 1	1	6	6		8	7	1	3	2	1
மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 எனது அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவர்த்து கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.2(அ) மற்றும் (ஆ) பந்தியின் கணக்காய்வு விடயங்கள் தவிர சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை;

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே சபையினால் செய்துகொள்ளப்பட்ட

ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 பின்வரும் அவதானிப்பு தவிர 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

சட்டம்/ பணிப்புரைக்கான தொடர்பு	**விபரம்**
(அ) 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டம் 82 (1) ஆம் பிரிவு	சம்பந்தப்பட்ட அதிகாரத்தின் ஒவ்வொரு உறுப்பினரும், ஒவ்வொரு குழுவும், ஒரு ஆலோசனைக் குழு மற்றும் மேன்முறையீட்டுக் குழு மற்றும் ஒவ்வொரு நிபுணர், அங்கீகரிக்கப்பட்ட பரிசோதகர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் தமது கடமைகளில் நுழைவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரத்தின் பணியுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களிலும் கடுமையான இரகசியத்தைக் கடைப்பிடிப்பதற்கு அவர்களாகவே உறுதியளித்து ஒரு பிரகடனத்தில் கையொப்பமிடுவர். எனினும் சபையினால் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 260	சான்றுறுதிப்படுத்தப்பட்ட உறுதிச்சீட்டுக்களிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது உறுதிச்சீட்டுக்களில் பெயரிடப்பட்ட நபர்களுக்கு அல்லது அவர்களின் சட்டப் பிரதிநிதிகளுக்கு மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,509,453 பெறுமதியான 76 உறுதிச்சீட்டுக்களில் ரூபா 357,710 பெறுமதியான 32 உறுதிச்சீட்டுக்களுக்கு குறித்த தேவைப்பாட்டிற்கு முரணாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை	
	II ஆம் பந்தியின் 15 : I (ix)	வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளை உரிய திகததியில் நடாத்துவதற்கு பணி நியமன அதிகாரி/ நிர்வாக அதிகாரி/ நிறுவனத்தின் தலைவர் ஆகியோர் இணை பொறுப்பு வகிக்கின்றனர். அதற்கிணங்க சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுத் திட்டத்தின் பிரகாரம் சில பதவிகளுக்கு வருடாந்தமும் ஏனைய பதவிகளுக்குத் தேவைப்படும் போதும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் சபையினால் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	பொது நிர்வாக சுற்றறிக்கைகள்	
	2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	அனைத்து அரசாங்க நிறுவனங்களும் உரிய நிறுவனங்களில் பிரஜைகள்/ வாடிக்கையாளர் பட்டயங்களை (Citizens'/Clients' Charters) அறிமுகப்படுத்த வேண்டியதுடன் அத்தகைய நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் பொறிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும் சபை அதற்கிணங்க நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.
(உ)	அரச நிதி சுற்றறிக்கைகள்	
	(i) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	பதவியணி உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் பணிபுரியும் எந்தவொரு உத்தியோகத்தரிற்கும் சிறிய செலவினங்களுக்காக சிறுசெலவுக் காசுக் கட்டுநிதியாக ரூபா 25,000 ஆகக்கூடிய தொகை வழங்கப்பட முடியுமான போதிலும் குறித்த எல்லையை மீறி 19 சந்தர்ப்பங்களில் ரூபா 862,385 கூட்டுமொத்தமான சிறுசெலவுக் காசு கட்டுநிதி சபையால் வழங்கப்பட்டிருந்தது.
	(ii) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம்	2020 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையானது 2021 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர்

	இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான அணுசக்தி சபையின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஊ)	அரச கணக்குகள் சுற்றறிக்கைகள்	
	1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை	வெளிநாட்டு உதவி தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இந்தத் தேவைப்பாட்டிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 40,949,996 தொகையான வெளிநாட்டு மானியங்கள் திறைசேரி மூலம் பெறப்படாமல் நேரடியாக நிறுவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதில் ரூபா 3,636,894 பெறுமதி நிதி நன்கொடையாக பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 37,313,102 பெறுமதி பொருட்களாக பெறப்பட்டிருந்தது.
(எ)	பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள்	
	2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
	(i) 5.1 ஆம் பந்தி	வரவிருக்கும் 3 ஆண்டுகளுக்கான நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் முகாமைத்துவ சபையால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் குறித்த தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
	(ii) 6.5.1 ஆம் பந்தி	கணக்காண்டு முடிவடைந்தவுடன் 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் நிதிக்கூற்றுக்கள் 118

		நாட்கள் தாமதத்துடன் அதாவது 2021 யூன் 28 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.
(iii)	9.8 ஆம் பந்தி	இந்த பத்தியின் கீழ் உள்ளடக்கப்படாத படிகளுக்கு பொதுமுயற்சிகள் திணைக்களம் மற்றும் பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறை மீதான படிகளாக ரூபா 7,032,661 தொகை அத்தகைய அங்கீகாரம் இல்லாமல் செலுத்தப்பட்டிருந்தது. குறித்த படி முன்னைய ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.
(ஏ)	சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைகள்	
	2017 யூன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	2018 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் உரிய காலாண்டின் இறுதியில் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு (Comptroller General) சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 297,544,655 தொகையான சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் (நன்கொடைகளாக பெறப்பட்ட ரூபா 146,730,744 பெறுமதியான சொத்துக்கள் உள்ளடங்கலாக) கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

2.2.4 பின்வரும் அவதானிப்புக்கள் தவிர 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

(அ) தேசிய மயக்க மருந்து ஆராய்ச்சி நிலையத்தின் நிர்மாணம் தொடர்பான ரூபா 38,258,027 தொகையான மேலதிக பணிகளுக்கு செலுத்த வேண்டியவைகளிற்காக அமைச்சரவை

நியமித்த பெறுகை குழுவின் அங்கீகாரம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கமா நிலையத்தின் பல்நோக்கு கமா கதிர்வீச்சு ஆலையின் அதிகபட்ச கொள்ளளவு 3000kci ஆக காணப்பட்ட போதிலும் மேற்படி மூலத்தின் தற்போதைய கொள்ளளவு 177kci ஆகும். புதிய கோபால்ட் 60 மூலத்தை கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து 2020 ஆகஸ்ட் 30 இல் ரூபா 96.525 தொகை பெறப்பட்டது. எவ்வாறாயினும், பெறுகை நடவடிக்கைகள் சரியாக திட்டமிடப்படாததன் காரணமாக இது தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் 2021 ஏப்ரல் 21 வரை தாமதமாகியிருந்தன.

(இ) பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவை தொடர்பாக சபை உரிய நிறுவனங்களுடன் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கையின் காலப்பகுதி காலாவதியாகியிருந்த போதிலும் புதிய விலைமனுக்கள் கோரப்படாமல் சேவையானது தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டிருந்தது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 18,088,997 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 17,396,257 பெறுமதியான வியாபார கடன்பட்டோர், ரூபா 545,122 பெறுமதியான ஏனைய பெறவேண்டியவைகள் மற்றும் ரூபா 147,618 பெறுமதியான சேவைநாடும் கடன்பட்டோர் உள்ளடங்குகின்றனர். இந்த வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 846,967 மீதியொன்று 2 முதல் 07 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக இருந்தது.

(ஆ) 2 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 92,750 தொகையான சேவைநாடும் கடன்பட்டோர் மீதி மற்றும் ஏனைய வியாபார கடன்பட்டோரின் ரூபா 226,282 தொகையான 11 கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் என்பவற்றை அறவீடு செய்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு மீதி ரூபா 49,672,438 ஆக காணப்பட்டதுடன் குறித்த மீதியில் ரூபா 30,552,838 தொகையான 14 கடன்கொடுத்தோர் மீதிகளின் மொத்தம் ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து 99 வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட காணியில் அணுசக்தி சபையின் முன்னோடி நிறுவனமான அணுசக்தி அதிகாரசபை நிறுவப்பட்டிருந்தது. புதிய களனி பாலத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக குறித்த காணி சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு பதிலாக மாலபே பகுதியில் அமைந்துள்ள மாற்று காணியொன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து சபையினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 2017

மார்ச் 07 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 7,663,837 தொகையான குத்தகை வாடகை முற்கொடுப்பனவை கழித்து நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் குறித்த காணியின் சந்தை பெறுமதியான ரூபா 116,000,000 தொகையான அரசாங்க மதிப்பீடு மற்றும் ரூபா 75,500,000 தொகையான 30 ஆண்டுகளுக்கான குத்தகை வாடகைப் பெறுமதி என்பவற்றை கருத்தில் கொள்ளாமல் ரூபா 181,000,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கை திகதி வரையிலும் காணியின் உரிமைத்துவத்தை அணுசக்தி சபை அல்லது வரிசை அமைச்சு பெற்றிருக்கவில்லை.

(உ) மாலபே காணியை தெரிவு செய்வதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக 2015 யூன் மாதம் முதல் நிர்மாணங்கள் முற்றாக நிறுத்தப்பட்டன. எனவே, அணுசக்தி சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றுக்கு இடையே சபையை ஸ்தாபிப்பதற்காக 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையால் பெறப்பட்ட காணியை பயன்படுத்துவதற்கு முத்தரப்பு புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அவர்கள் காணிகளின் உரிமைத்துவத்தை உறுதிப்படுத்தாமல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் குறித்த காணி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமானது அல்லாத போதிலும் அரசாங்கத்திற்கு சொந்தமானது என கொலன்னாவ பிரதேச செயலகம் அண்மையில் சபைக்கு அறிவித்திருந்தது. அரசாங்க காணியை இலவச சலுகை மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் பாரிய பணத் தொகையைச் செலுத்தும் காணியைப் பெற்றுக்கொள்வது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான முன்னேற்றத்தை பரீட்சித்த போது, சபையின் செயலாற்றல் சுமார் 48 சதவீதமான குறைந்த மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளில், ஐசோரோப் நீர்வளவியல் பிரிவு மற்றும் சர்வதேச கூட்டுத்தாபனப் பிரிவின் செயலாற்றல், பெறுகை திட்டத்தை அமுல்ப்படுத்துதல், இரண்டாம்தர பாடசாலைகளிற்காக அணு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் என்பன மிகவும் குறைவாகவே காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(எ) 2020 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைப்பு ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கான மொத்த நிதி ரூபா 23,760,068 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 616,882 தொகை மாத்திரமே 2020 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த செயற்திட்டங்களின் நிதி முன்னேற்றம் ஏறத்தாழ 2.66 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் குறித்த 11 செயற்திட்டங்களில் 03 செயற்திட்டங்களால் எவ்வித முன்னேற்றமும் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2020 ஆம் ஆண்டிற்கான பாதீடு சரியாக கணிக்கப்படாததன் காரணமாக 02 செலவினக் குறியீடுகளில் செலவின வரம்பை மீறி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பாதிடப்பட்ட

நிதியேற்பாடுகளிற்கும் உண்மையான செலவினங்களுக்கும் இடையே 15 செலவினக் குறியீடுகளில் 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஐ) யதார்த்தமான சேவை நிலையொன்றை பேண இயலாமை மற்றும் பதவியணியை உரிய காலத்தில் மீளாய்வு செய்ய இயலாமை ஆகியவற்றின் விளைவாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சிரேஷ்ட பதவிநிலை தரத்தில் 05 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையில் 03 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 05 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப நிலையில் 04 வெற்றிடங்களும் உள்ளடங்கலாக 17 வெற்றிடங்கள் காணப்பட்டன.

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

9.

2020 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை அணு சக்தி சபையின் நிதி கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 இன் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பித்த அறிக்கைக்கு சபையின் முகாமைத்துவம் வழங்கும் பதில்களும் மற்றும் தெளிவுபடுத்தல்களும்

1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) காணிகளையும், கட்டிடங்களையும் மற்றும் இரசாயன பொருள் இருப்புகளையும் 2021 ஆம் ஆண்டில் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், கருத் திட்டத்திற்கு பொறுப்பு உடைய RDA இன் ஒத்துழைப்புடன் செலவு சரியான ஒரு முறையில் செய்யப்படுகின்றது. காணிகள் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு ஒரு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு அதனை வரைந்தாலும் நிரல் அமைச்சினால் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம், தொடர்புடைய அனைத்து அக்கறை உடைய தரப்புகளுக்கும் சொந்தமான அமைச்சுகளின் செயலாளர்களுடன் ஒரு கூட்டத்தை நடத்தி மேலும் தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. இந்த நோக்கத்திற்காக கோரிக்கைகள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) இந்தப் பொருட்களை மீள்விலைமதித்து (இகநி 3 இன் பிரகாரம் திருத்தங்கள் அடங்கிய) மீண்டும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(இ) 2021 ஆம் ஆண்டு முதல், சபைக்கு கிடைக்கும் IAEA நன்கொடைகள் இலங்கையின் இகநி 11 இன்படி ஒரு கடனாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) மாலம்பே எனும் இடத்தில் அமைந்துள்ள காணியின் நிமித்தம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்திய 181 மில்லியன் ரூபாவும் மற்றும் இலங்கை அணு சக்தி சபையின் பழைய கட்டிடத்தில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து காணியின் எஞ்சிய குத்தகை காலத்திற்கு அறவிடுவதற்கு உள்ள 7,663,837 ரூபாவும் அடங்கலாக 188.6 மில்லியன் ரூபா மொத்த தொகையில் 181 மில்லியன் ரூபா செலுத்தியதை உறுதிப்படுத்தும் உறுதிச்சீட்டுக்களும் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பற்றுச்சீட்டுகளும் கணக்காய்வின் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த கிடைக்க வேண்டிய தொகைகளின் நிலுவையை உறுதிசெய்ய 2022 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படும் போது நடவடிக்கை எடுக்கப்படும்.

- புதிய கட்டிடம் மற்றும் நிலம் ஆகியன தொடர்பான தற்போதைய நிலைமை பற்றி 1.2 (a) இல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.
- கையிருப்பு தொகை ரூ.16,666,225 - 2022 ஆம் ஆண்டிலிருந்து உரிய பிரிவுகளுக்கு ஆண்டு இறுதியில் விநியோகித்த இரசாயனப் பொருட்கள் நிலுவை தொடர்பான ஒரு உறுதிப்படுத்தல் அறிக்கையை பெற நடவடிக்கை எடுக்கப்படும்.
- உரிய ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கைக்கு இணங்க கருத் திட்டத்திற்கு கிடைத்த ரூ.19,510,902 நிதி உதவி அந்தக் திட்டங்களின் கீழ் தனித்தனியாக கணக்கீடு செய்யப்படுகின்றன. உரிய செலவுகளை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களும் தனித்தனியாக உறுதிச்சீட்டுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இந்தக் கிடைப்பனவுகளை ஒரு தனியான நடைமுறைக் கணக்கில் வரவுவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆண்டின் இறுதி இருப்பு 03 மில்லியன் ரூபாவாகும். 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் கிடைப்பனவுகளும் மற்றும் செலவுகளும் முறையாகக் கணக்கிடப்படாததால் ஏற்பட்டுள்ள இந்தத் தவறுகளை திருத்துவதற்கு தேவையான செலவுகளை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
- ஐக்கிய அமெரிக்காவின் மின்வலு சக்தித் திணைக்களத்திற்கும் மற்றும் இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபைக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் பயன்படுத்தப்படாத மத்திய கதிரியக்க மூலக் களஞ்சியங்கள் (Central disused radioactive source stores) பௌதீக பாதுகாப்பு முறைமை நன்கொடையாக கிடைத்துள்ளது.

திணைக்களம் தேர்ந்தெடுத்துள்ள ஒப்பந்தத் தரப்பான சர்டிஸ் லங்கா ப்ரைவட் நிறுவனத்தினால் இந்தப் பௌதீகப் பாதுகாப்பு முறைமை நிறுவப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில்

இருந்து மூன்று வருடங்களுக்கு முழு ஒப்பந்த கால அடிப்படையில் இந்தப் பௌதீக பாதுகாப்பு முறைமையின் நிறுவுகை மற்றும் பராமரித்தல் பணி சர்டிஸ் லங்கா நிறுவனத்திற்கு ஒப்பந்தமாக வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தக் கால முடிவில் பௌதீகப் பாதுகாப்பு முறைமை அணு சக்தி சபைக்கு சொந்தமானதாக இருக்கும் என்பதால், 2023 ஆம் ஜனவரி மாதம் முதல் அந்தத் தகவலைப் பட்டியல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மூல களஞ்சிய வசதிகளுடன் கூடிய கட்டிடத்தின் செலவுகளை இனங்கண்டு எதிர்வரும் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இந்தக் கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரிமையை வீதி அபிவிருத்தி அதிகார சபை தன்னிடம் வைத்துக் கொண்டு அந்தக் காணியை அனுபவிப்பதற்கான உரிமையை மட்டும் அணு சக்தி சபைக்கு வழங்கியுள்ளது.

(உ) இந்த சபையின் ஆரம்பத்திலிருந்தே உரிய வித்தியாசங்கள் நிதிக் கூற்றுக்களில் இருந்து வருகின்றன. இந்த வித்தியாசங்களை சீராக்குவதற்கு இது வரை பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் இந்த வித்தியாசங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு நிலையான சொத்து பதிவேட்டில் உள்ள பொருட்களை தனித்தனியாக இனங்காண முடியாது போயுள்ளது.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.2.2

(அ) 2021 ஆம் ஆண்டிலும் சபையின் ஊழியர்களிடமிருந்து இந்தப் பிரிவு தொடர்பான உறுதிமொழியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த அதிகாரிகளுக்கு இது தொடர்பான நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டு உரிய உறுதிமொழியைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிப் பிரமாணக் குறிப்பு இலக்கம் 260

இதில், போக்குவரத்துக் கொடுப்பனவுகளுக்காக 18 உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன். அந்த உறுதிச்சீட்டுக்களின் இணைக்கப்பட்டுள்ள கட்டண அட்டையில் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

655,657,668,673,675,684,700,715,716 ஆகிய இலக்கங்களை உடைய உறுதிச்சீட்டுக்கள் பண முற்பணத்தின் நிமித்தம் உள்ளக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பணம் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கான முன்பணப் படிவத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரியான நபர்களுக்கு மட்டுமே பணம் வழங்கப்படுவதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) 2019 ஆம் ஆண்டு முதல், வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் / வேறு பரீட்சைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது. அந்த பணிகளைக் கண்காணித்து மதிப்பீடு செய்ய பொருத்தமான முறைமையை தயாரிக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ)

(i) 3/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி சிறு நிதி இடைக்கால வசக்கட்டுநிதி வழங்கப்படுகின்றது. 19 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூ.862,385 தொகை என காட்டப்பட்டிருப்பது சிறு நிதி வசக்கட்டுநிதி நிதி வழங்கல் அல்ல, ஆனால் அது வழங்கப்படும் நிதி முற்பணமாகும். வேலை முடிந்ததும் உரிய நிதி முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன.

(ii) நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக நாடு அவ்வப்போது மூடப்பட்டமை மற்றும் நிறுவனத்திற்கு ஊழியர்களை அழைப்பதில் இருந்த கட்டுப்பாடுகள் முதலிய காரணங்களினால் 2020 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்பை உரிய திகதிகளில் நிறைவு செய்ய முடியவில்லை. உரிய பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கை 2021.12.29 ஆம் திகதி இதன் பணிப்பாளர்கள் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பொருட்கள் கணக்கெடுப்பு பற்றிய சிபாரிசுகளை செயற்படுத்த தேவையான குழுக்கள் நியமிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஊ) இதன் நிமித்தம் தயாரித்த முறையிலுக்கு பணிப்பாளர் சபை அதன் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துடன் மேலும் ஒரு முறை கலந்துரையாடும் முகமாக சபையின், திறைசேரியை பிரதிநிதிப்படுத்துகின்ற (வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர்) பிரதிநிதியின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ)

(i) 2018-2020 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்டுள்ள சுருக்கமான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய கோவிட் தொற்றுநோய் நிலவியதால், 2020-2022 ஆம் ஆண்டிற்கான சுருக்க திட்டத்தை இற்றைப்படுத்த முடியவில்லை. ஆனால் 2021-2023 ஆண்டுகளுக்கான விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு தேவையான அனுமதிகள் பெறப்பட்டுள்ளன. இந்த சபையின் விரிவான திட்டத்தைத் தயாரிக்கும் போது, அதன் வணிகசார் செயல்பாடுகளைக் கண்காணித்து அதனை தன்னிறைவு நோக்கி நகர்த்த தேவையான நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு பணிப்பாளர்கள் சபை அறிவுறுத்தியுள்ளது.

(ii) 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல், நிதிப் பிரிவில் போதியளவு பணியாளர்கள் இல்லாமை (மகப்பேற்று லீவு, ராஜினாமா முதலியவை) கணக்குகளை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். இந்த இக்கட்டான சூழ்நிலையை உரிய அதிகாரிகளுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்திய போதிலும், தேவைப்படும் நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்காததால் நிதிநிலை கூற்றை தயாரிப்பதில் தேவையில்லாமல் தாமதம் ஏற்பட்டது (கணக்கெழுதுநர் பதவியில் உள்ள வெற்றிடம் இன்னும் நிரப்பப்படவில்லை.)

இது தவிர, கோவிட் -19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, 2022 ஆம் ஆண்டு பெப்ருவரி மாத இறுதி முதல் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணிக்கு அழைக்கப்பட்டமை, மேலும் நாடு அவ்வப்போது மூடப்பட்டமை மற்றும் நடமாடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை ஆகியன நிதிக் கூற்றுக்களை தயாரிப்பில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்களாக அமைந்தன. பணிப்பாளர்கள் சபையின் அனுமதி கிடைத்த உடனே 2021.06.29 ஆம் அன்று நிதிநிலை கூற்றுக்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

(iii) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இலங்கை அணு சக்தி சபையின் ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு வரை எஞ்சியுள்ள மருத்துவ லீவுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. ஆனால் 2021 ஆம் ஆண்டில், பணிப்பாளர்கள் சபையினது அறிவுறுத்தல்களின்படி, அர தொழில்முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து பணம் செலுத்த அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், 2022.03.11 ஆம் திகதி கடிதத்தின் மூலம், குறித்த கொடுப்பனவை செலுத்துவதற்கு இணங்க முடியாது என அது தெரிவித்துள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான குறித்த நிலுவைத் தொகைகள் செலுத்தப்படவில்லை.

(ஏ) குறித்த சுற்றறிக்கையின்படி இது தொடர்பான தகவல்கள் வருடாந்தம் தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு வழங்கப்படுகின்றன. இந்த உரிய தகவல்கள் மின்னஞ்சலின் ஊடாகக் கோரப்பட்டன. மேலும் தகவல்கள் உடனடியாக வழங்கப்பட்டன. கோரிய தகவல்கள் போதுமானது என எமது சபையில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிக்கு வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டது.

2.2.4

(அ) நிரந்தர சோதனைக்கான தேசிய நிலையத்தில் மேலதிக நேரப் பணிக்கான கொடுப்பனவு பற்றி ஆராய்வதற்கு நிரல் அமைச்சின் அனுமதியுடன் ஒரு தொழில் நுட்பக் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு கட்டிடங்களின் நிர்மாணத்திற்கான அனைத்து செலவுகளையும் மேற்பார்வையிட்டு, விரிவான அறிக்கையை அமைச்சின் கொள்வனவு குழுவிடம் 2022.02.28 ஆம் திகதி சமர்ப்பித்தது. அமைச்சின் கொள்வனவு குழு வழங்கிய சிபாரிசுகளின் பிரகாரம், திருத்திய அறிக்கை அமைச்சின் கொள்வனவு குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சின் கொள்வனவு குழு உறுப்பினர்கள் மாறியதால் கொள்வனவு குழுவின் முடிவு இன்னும் கிடைக்கவில்லை.

(ஆ) இலங்கை காமா நிலையம் பிரதானமாக ஒப்பந்தம் செய்யப்பட்ட லாலன் ரப்பர் ப்ரைவட் லிமிற்றட் நிறுவனத்திற்கு தற்போது சேவைகளை வழங்குகின்றது. கதிர்வீச்சு மூலங்கள் தேய்ந்து போவதால், தேவையில்லாத பட்சத்தில் அதிக கதிர்வீச்சு மூலக செயலாக்கிகளை கொள்வனவு செய்வது பணம் விரயமாகும் செலவாகும். ஆகையால் காமா நிலையத்தின் கதிர்வீச்சு அறை 3000 kCi கொள்திறன் கொண்டதாக எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பின்னர் கதிர்வீச்சு கொள்திறனை அதிகரிக்க காமா அறையை (கட்டிடம்) மாற்றியமைப்பது செயல்முறை சாத்தியமில்லை என்பது இதற்கான காரணமாகும்.

இது வரை அதிக அதிகளவில் பொருட்களை விநியோகிக்கும் விநியோகத் தரப்பான லாலன் ரப்பர் ப்ரைவட் லிமிற்றட் நிறுவனம் விடுத்திருந்த கோரிக்கையின் பேரில், காமா மூலத்தின் கொள்திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் விநியோகத்தை அதிகரிப்பதாக அந்த நிறுவனம் அறிவித்ததால், 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் காமா மூலகங்களை கொள்வனவு செய்ய தொடங்கினோம். ஆனால் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கம் திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்குவதை நிறுத்தியதால், நிதி ஒதுக்கப்படவில்லை. ஆகையால் 2020 ஆம்

ஆண்டு மார்ச் மாதம் வரை இந்த கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நிதி கிடைக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கேள்வி விலை மனுக்கள் அழைக்கப்பட்டன. ஆனால் கோவிட்-19 உலகளாவிய ரீதியில் பரவியதால் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இறுதியளவில் கேள்வி மனுக்கள் கிடைக்கவில்லை. இந்திய உற்பத்தி நிறுவனம் (கதிர்வீச்சு மற்றும் ஐசோடோப்பு தொழில் நுட்பங்கள் சபை) (Board of Radiation and Isotope Technologies)-BRIT) 2020 ஆம் ஆண்டில் தொற்றுநோய் நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்தது. இந்த சூழ்நிலையின் அடிப்படையில், அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம், அரசாங்கத்தின் தலையீட்டில் (இரு நாட்டுத் தூதரகங்கள் தலையீடு) மூலத்தை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து, முடிந்தவரை ஏற்றுமதிக்கான காமா மூலங்களை அது உற்பத்தி செய்ய வேண்டும் என்ற அதன் கொள்கையே இந்தப் பணியின் தாமதத்திற்கு முக்கிய காரணமாகும்.

எமது விநியோக நிறுவனத்திலிருந்து 2021-02-09 ஆம் திகதி கிடைத்த செலவுப்பட்டியலுக்கு இணங்க எமது பொருள் கட்டளை 2021-02-22 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், அதிகளவு கதிரியக்க மூலத்தை நாட்டிற்கு இறக்குமதி செய்யும், அதனை நாட்டிற்குள் எடுத்துச்செல்லும் மற்றும் நிறுவும் போது, பல வெளி அரச நிறுவனங்களுடன் இணைந்து பின்வரும் அனுமதிகளைப் பெற வேண்டியிருந்தது.

1. மூலத்தை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்தும் சபையிடமிருந்து வழங்கப்படும் ஆட்சேபனை இல்லை என்ற சான்றிதழ்.
2. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் இறக்குமதி அனுமதி (இந்திய உற்பத்தி நிறுவனத்திடமிருந்து proforma செலவுப்பட்டியல் கிடைப்பதில் கணிசமான தாமதம் ஏற்பட்டது.)

மேலும் மேற்குறித்த அனுமதியைப் பெறும்போது, மூலத்தை விடுவிக்க உரிய ஆவணங்கள் சுங்கத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பின் உரிய கட்டணத்தை செலுத்த வேண்டும்.

3. இலங்கை சுங்கத்திற்கு வழங்கப்படும் அறிவித்தலும் அனுமதியும்
4. இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்படும் அனுமதி
5. இலங்கை முதலீட்டு சபைக்கும் மற்றும் அதன் பாதுகாப்பு கம்பனிகளுக்கும் வழங்கப்படும் அறிவிப்பும் அனுமதியும்
6. துறைமுகத்தில் இருந்து காமா நிலையத்திற்கு கதிர்வீச்சு மூலத்தை கொண்டு செல்வது தொடர்பாக இலங்கை பொலிஸ் திணைக்கத்திற்கும் மற்றும் முற்படைகளுக்கும் அறிவித்து அவற்றின் உதவிகளை பெறுவதற்கான அனுமதி.

மேற்கூறிய அனைத்து விடயங்களும் இந்த கொள்வனவுக்கு இன்றியமையாத அங்கங்களாக உள்ள காரணத்தினால் அதற்கு கணிசமான அளவு கால அவகாசம் தேவைப்பட்டிருந்தது.

இந்தியாவில் இருந்து கதிர்வீச்சு மூலத்தை கொண்டுவரும் பணி சிலோன் ஷிப்பிங் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது (பொருள் கொள்வனவு கட்டளைத் திகதி 2021 மார்ச் மாதம் 11). உரிய காலப் பகுதியினுள் கொண்டுவந்து தரும் விநியோகத் தரப்புகளை (காமா மூலத்தை கொண்டுசெல்வதற்கு உத்தரவு பெற்ற மூன்றாம் தரப்பின் கப்பல் கூட்டுத்தாபனம்) கண்டுபிடிப்பதில் சிரமம் இருந்ததால் மேலும் கனிசமான தாமதம் ஏற்பட்டது.

(இ) 2020/2021 ஆம் ஆண்டுகளில் கோவிட் -19 தொற்று நிலவிய காலப் பகுதியில் விதிக்கப்பட்டிருந்த முடக்க நிலையில் கொள்வனவு நடவடிக்கைகளில் ஏற்பட்டிருந்த இடையூறுகளால், இது இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. எனினும் நிலைமை இப்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. சரி செய்யப்பட்டுள்ளது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) கடன் அடிப்படையில் வழங்கிய சேவைகளுக்கான கடனை செலுத்தாத வாடிக்கையாளர்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் என்பவற்றின் ஊடாக அறிவிக்கும் அடிப்படையில் கடன் அறவிடும் செயல்முறை மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) அந்த கடனாளி நிலுவைகளை அறவிடுவதற்கு மேலும் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ) 30,318,354 ரூபாவுக்கு அதிகமான 14 கடனாளி நிலுவைகளில் செலுத்த வேண்டிய தொகை நிரந்தர பரிசோதனைக்கான நிலையத்தின் கட்டிடத்தின் நிர்மாண ஒப்பந்தத் தரப்புக்கு வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கொடுப்பனவாகும்.

இந்தக் கொடுப்பனவுகளுக்காக அமைச்சின் கொள்வனவு குழுவின் அங்கீகாரத்தை பெறுவதற்காக அறிக்கை (விவரமான) அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த ஆண்டுக்கான நிலுவை 19,354,084 ரூபா தொகையை செலுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஈ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 2.3. (ஈ) கணக்காய்வு விசாரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அமைச்சரவையின் தீர்மானத் திகதி 2014-03-07 என சரியாக திருத்த வேண்டும். அமைச்சரவை வழங்கிய தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுத்த நிறுவனம் தவறியுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள 769 ஆம் இலக்க 99 ஆண்டு கால குத்தகை ஒப்பந்தின் பிரகாரம், அனுபவிக்காத 77 ஆண்டுகளுக்கான வரி மதிப்பு பெறுமானமும் செலுத்தப்பட்டுள்ளதால், அந்த குத்தகை உரிமை சார்பாக அணு சக்தி சபையினால் நஷ்டஈடுகளை பெற உரித்து உண்டு.

2014.01.03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், அணு சக்தி அதிகார சபையினால் அதனை அமைக்கும் பொருட்டு இணங்கிய மாலம்பேயில் உள்ள காணியின் விலைமதிப்பீட்டை வழங்குமாறு அணு சக்தி சபை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. என்றாலும் காணிகள் சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் உரிமை மாற்றிக் கொடுக்கப்படும் என்பதால் அந்த சந்தர்ப்பத்தில் விலைமதிப்பீட்டை வழங்க முடியும் எனவும் இந்த சந்தர்ப்பத்தில் விலைமதிப்பீடு அவசியமில்லை எனவும் அந்தத் திணைக்களம் 2014.04.21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்து இருந்திருந்தது.

எனினும் 2014.08.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், நகர அபிவிருத்தி அதிகார சபை காணிகள் சுவீகரித்தல் செலவின் அடிப்படையில் விலைமதித்த மேற்படி மாலபே காணியின் பெறுமானம் 181 மில்லியன் ரூபாவாகும் எனவும், அதில் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்த 50 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக, 06 மாத காலத்திற்குள் எஞ்சிய கொடுப்பனவை (131 மில்லியன் ரூபாவை) செலுத்தி, பிரதேச செயலாளரினால் காணியின் உரிமையை மாற்றிப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுக்கு அறிவித்துள்ளது. அதன்படி 2014 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 5 செலவுப்பட்டியல்களுக்கான 181 மில்லியன் ரூபாவை செலுத்தி, 2015.06.17 ஆம் திகதி இலங்கை அணு சக்தி சபையின் சார்பாக அப்போதைய சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளரால் (நிதி) கையொப்பமிட்டு, குறித்த மாலபே காணியின் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ள மாலபே தகவல் தொழில் நுட்ப பேட்டையினுள் அமைந்துள்ள காணிக்கு கொடுப்பனவுகளை செலுத்தும் போது அணு சக்தி சபை அன்று தாபிக்கப்பட்டிருந்த ஒறுகொடவத்தையில் 99 ஆண்டு குத்தகை கால அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து (UDA) பெற்ற காணியின் எஞ்சிய குத்தகை காலத்திற்கு உரிய குத்தகையை (அணு சக்தி சபைக்கு மீளச்செலுத்த வேண்டிய) மாத்திரம் கழிப்பது பொருத்தம் என அன்றைய காலப் பகுதியில் அணு சக்தி சபையின் நிரல் அமைச்சாக இருந்த தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு 2014.02.24 ஆம் திகதி சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கும் மற்றும் அதற்கான அமைச்சரவை தீர்மானத்திற்கும் (2014.03.10) அமைவாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு (ஆ) இன் கீழ் முன்மொழியப்பட்டுள்ளது.

இது தவிர 2015/03/16 ஆம் திகதி அணு சக்தி சபையின் தலைவரினால் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு ஒரு கடிதத்தை அனுப்பி ஒறுகொடவத்தையில் அமைந்துள்ள காணிக்கான எஞ்சிய குத்தகை காலத்திற்குரிய குத்தகைக் கட்டணம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மீளச்செலுத்த வேண்டும் என கருதி அந்த தொகையை நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ள மாலபேவில் உள்ள காணிக்கு கொடுப்பனவுகளை செலுத்தும் போது கழித்துக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் கூறப்பட்டுள்ள கோரிக்கையை நிறைவேற்ற முடியாது எனக் கூறி கடந்த 2015.04.02 ஆம் திகதி நஅஅச அணு சக்தி சபைக்கு அறிவித்துள்ளது. அதன் பின்னர் தொடர்புடைய நிறுவனங்களுக்கு எழுத்தில் கோரிக்கை விடுத்தும் இது வரை நல்ல பதில் கிடைக்கவில்லை.

இந்த காணிகள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை, மேற்கூறிய அமைச்சரவையின் தீர்மானத்தினதும் மற்றும் அதற்குரிய நிதி அமைச்சின் அவதானிப்புகளினதும் பிரகாரம், எஞ்சிய 77 ஆண்டுகளுக்கு செலுத்த வேண்டிய 7,663,837 ரூபாவும் செலுத்த வேண்டிய தொகை என அணு சக்தி சபையின் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்டுள்ளது.

புதிய களனிப் பாலத்தை நிர்மாணிக்கும் கருத் திட்டத்தின் நிமித்தம் சுவீகரித்த இ.கி.கொ.9605 ஆம் இலக்க நிலத் திட்டத்தின் 2, 3 ஆம் இலக்க காணித் துண்டுகளின் உரிமைகோரல்கள் தொடர்பாக எழுந்த பிரச்சினைக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடி அனுப்பி வைத்த கடிதங்களுக்கு பதிலளிக்கும் முகமகாக சட்டமா அதிபரின் திணைக்களத்தில் 2021.12.22 ஆம் திகதி ஒரு கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், அணு சக்தி சபையின் பணிப்பாளர் நாயகம் அடங்கலாக 05 அதிகாரிகளும் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் (நஅஅச) மூன்று அதிகாரிகளும் கலந்துகொண்டனர். சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின்படி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக கீழே காணப்படும் பிரிவு (e) இல் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், நிறுவனங்களுடனும் மற்றும் சம்பந்தப்படும் அமைச்சின் செயலாளர்களுடனும் கலந்துரையாடி அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(உ) சபையை வேறு இடத்தில் மாற்றி அமைக்கும் பொருட்டு 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் ஒரு காணியை பயன்படுத்த கைச்சாத்திடப்பட்டுள்ள முற்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017-02-02 ஆம் திகதி முதல் 18 மாத காலத்திற்கு நடைமுறையில் இருந்தது. அதன் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்துள்ளது.
குறித்த காணிப் பிரச்சினையைத் தீர்க்க, சபை பின்வருமாறு செயற்படுகின்றது.

- இலங்கை அணு சக்தி சபை குறித்த காணிகளுக்கு உரிய இ.கி. 9605 ஆம் இலக்க CO/KLN/2018/797 நில அளவைத்திட்டம் அரசாங்க நில அளவைத் திணைக்களத்திலிருந்து வரைந்து பெற்றது. அதன்படி தற்போது இலங்கை அணு சக்தி சபையின் கட்டிடம் அமைந்துள்ள காணி அரசாங்க காணி என்பது உறுதிசெய்யப்பட்டது (அந்த நில அளவைத்திட்டத்தின் ஒரு பிரதி உள்ளது).

- அதன் பின்னர் குறித்த காணி அரச காணிதானா என கொலன்னாவ பிரதேச செயலாளரிடம் உறுதிப்படுத்தி அறிந்து கொள்ளப்பட்டது.

- பின்னர், இலங்கை அணு சக்தி சபையினால் நிரல் அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை முதலிய சம்பந்தப்படும் நிறுவனங்களுடன் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகளை மேற்கொண்டது. அதன் பலனாக வீதி அபிவிருத்தி அதிகார சபை, எமது சபை விடுத்த வேண்டுகோளின் பேரில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2020.08.10 ஆம் திகதி ஒரு கடிதத்தை அனுப்பி 9605 ஆம் இலக்க அடிப்படை நிலஅளவைத் திட்டத்தின் 2, 3 ஆம் இலக்க காணித் துண்டுகளின் உரிமைகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்ற பின்னர் 2021-03-23 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபை சட்டமா அதிபருக்கு ஒரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்பியுள்ளது. எந்த பதிலும் கிடைக்காததால், இந்த காணியை மறைமுகமாக வாங்கும் அணு சக்தி சபை, மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் 2021.05.11 ஆம் திகதி கௌரவ சட்டமா அதிபருக்கு கடிதத்தை அனுப்பி, அவரின் ஆலோசனையை கோரியுள்ளது.

- புதிய களனிப் பாலத்தை நிர்மாணிக்கும் கருத் திட்டத்தின் நிமித்தம் சுவீகரித்த இ.கி.கொ.9605 ஆம் இலக்க நிலத் திட்டத்தின் 2, 3 ஆம் இலக்க காணித் துண்டுகளின் உரிமைகோரல்கள் தொடர்பாக எழுந்த பிரச்சினைகள் தொடர்பாக கௌரவ சட்டமா அதிபருக்கு சட்ட ஆலோசனையை பெறும் பொருட்டு அனுப்பிய கடிதங்களுக்கு பதிலளிக்கும் முகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் 2021.12.22 ஆம் திகதி ஒரு கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது.

எமது சபையின் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் / நிதி, உள்ளக கணக்காய்வாளர், சட்ட அலுவலர் மற்றும் பிரதிப் பணிப்பாளர்/நிர்வாகம் ஆகியோரும் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூன்று அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

- குறித்த கலந்துரையாடலையடுத்து சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் 2018.05.22 ஆம் திகதிய 18/நானாவித (019) ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்திற்கு இணங்க மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2022.06.01 ஆம் திகதி நிரல் அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் காணி தொடர்பான சட்டப் பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக உரிய அமைச்சின் செயலாளர்கள் பங்குபற்றலில் ஒரு கலந்துரையாடலை நடத்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2022.02.08 ஆம் திகதி அது தொடர்பான ஒரு கலந்துரையாடல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் அன்றைய தினம் அந்தக் கூட்டம் நடைபெறவில்லை.

- பின்னர் 2022.09.05 ஆம் திகதி நிரல் அமைச்சு ஒரு கடிதத்தின் மூலம் அறிவித்தவாறு சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்ட அலுவலர் ஆகியோருடன் 2022.09.08 ஆம் திகதி ஒரு கூட்டம் நடத்தப்பட்டதன் பின்னர், அந்தக் கூட்டத்தில் அமைச்சின் அறிவுறுத்தல்களின்படி, குறித்த காணிப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக ஒரு அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு 2022.09.20 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது.

- நிரல் அமைச்சின் செயலாளரினது அறிவுரைகளின் பேரில் அமைச்சுக்களின் செயலாளர்களின் பங்குபற்றலில் மீண்டும் அமைச்சு மட்டத்தில் ஒரு கூட்டத்தை நடத்துமாறு 2023.01.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

(ஊ) ஜசோடோப் நீரியல் பிரிவின் பணியும் அதன் முன்னேற்றமும் நீடித்திருப்பது சம்பந்தப்படும் கருத் திட்டங்களின் களப் பணியினதும் இணையாக மேற்கொள்ளப்படும் மாதிரி பகுப்பாய்வுகளினதும் (ஆய்வுகூடப் பணிகள்) முன்னேற்றத்தின் அடிப்படையிலாகும். 2020 ஆம் ஆண்டில் நிலவிய கோவிட் தொற்று நோய், நிறுவனங்கள் மூடப்பட்டமை, நாடு மூடப்பட்டமை, போக்குவரத்து மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை முதலியவற்றினால் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. குறிப்பாக தொற்றுநோய் நிலவியதனால் மாகாணங்களுக்கிடையிலான பயணங்கள் நிறுத்தப் பட்டிருந்தமை, நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு சென்று களப் பணிகளையும் மற்றும் தங்குமிட வசதிகளையும் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டமை இந்த நிலைமையை பெரிதும் பாதித்திருந்தன.

தொற்றுநோய் காரணமாக நாட்டில் உள்ள பாடசாலைகள் நீண்டகாலமாக மூடப்பட்டிருந்ததால், அணு சக்தி தொழில் நுட்பம் பற்றிய பாடசாலை வேலையரங்குகளையும் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. இந்த கால கட்டத்தில், ஒன்லைன் வசதியின் ஊடாக வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டன. பல பாடநெறிகள் பிற்போடப்பட்டன.

(எ) CRP கருத் திட்டத்திற்கு சர்வதேச அணு சக்தி முகவர் நிலையம் நிதி வழங்குவது அந்தக் கருத் திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களுக்காகவாகும்.

இந்தக் கருத் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக் குழுக்கள் அவற்றின் பங்களிப்பின் அடிப்படையில் ஊதியம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தும், CRP கருத் திட்டத்தின் கீழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்கும் முகமாக உரிய அதிகாரிகளிடம் இருந்து அனுமதி கிடைக்கவில்லை.

இதனால், ஆராய்ச்சி குழுக்களுக்கு உரிய கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஏற்ற நடைமுறையை சபை தயாரித்து வருகின்றது.

CRP கருத் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் கருத் திட்டத்தின் தலைவரால் சர்வதேச அணு சக்தி முகவர் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அந்த முன்னேற்றத்தின் அடிப்படையில், கருத் திட்டத்திற்கான எஞ்சிய நிதி வழங்கப்படுகின்றது.

CRP கருத் திட்டங்களின் முன்னேற்றத்தை தீர்மானிக்க, கருத் திட்டத்தால் மேற்கொள்ளப்படும் பணிகள், நன்கொடையாக கிடைத்த உபகரணங்களின் மதிப்பு, தொழில்நுட்ப அறிவு மற்றும் கருத் திட்டத்தால் அடைந்த வெளியீடுகள் என்பவற்றை ஆராய்வது பொருத்தமானது.

CRP திட்டங்களுக்கு உரிய பணிகளை மேற்கொள்வதற்காக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளி உதவியாளர்களுக்கான கொடுப்பனவாக ஒரு பணம் செலுத்தும் முறையியல் தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் பேரில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அதன் அனுமதியின் நிமித்தம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உயிரியல் பிரிவுக்குரிய CRP 18066 நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தல் 2018 ஆம் ஆண்டில் முடிவடைந்தது. எஞ்சிய நிதி, தற்போது இயங்குகின்ற IRMS ஆய்வுகூடத்தில் மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு தேவையான இரசாயனங்களையும் மற்றும் சில நுகர்வுப்பொருட்களையும் வாங்கும் நிமித்தம் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், உயிரியல் பிரிவுக்கு தேவையான விஞ்ஞான உபகரணங்களை வாங்குவதற்கும் 2022 ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

SRL 21090 கருத் திட்டத்திற்கான நிதியுதவி கிடைத்தல் 2022 ஆம் ஆண்டில் முடிவடைகின்றது. தற்போது கருத் திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைத்தொழில்துறை உள்ளீடுகள் பிரிவு 2020 ஆம் ஆண்டில் ஒரு கருத் திட்டத்தில் பங்கேற்றுள்ளது. இது 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 2020 இறுதியில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

(ஏ) 01/03B, 03/27 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கு வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், எதிர்பாராத அவசியமான செலவுகள் காரணமாக இந்த வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன.

கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக 8 செலவினத் தலைப்புகளுக்கு எதிர்பார்த்த பணிகளை நிறைவேற்ற இயலாது போனமை, ஊழியர்களை வழக்கம் போல் பணிகளுக்கு அழைக்காமை போன்றவற்றால் இந்த வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன.

இது தவிர, பின்வரும் செலவினத் தலைப்புகளில் எதிர்பார்க்கப்படும் செலவுகள் 2020 நிதி ஆண்டுடன் தொடர்புடையவை. இருந்தாலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களினால் இந்த வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன.

03/03- 354,149/- ரூபா பணம் காகிதாதிகளுக்கும் மற்றும் அலுவலக காகிதாதிகள் தேவைகளுக்கும் அலுவலக உபயோகப் பொருட்களுக்கும் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் கொள்வனவு செயல்முறை 2020.12.31 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்படாததால் இது தீர்ப்பனவு செய்யப்படாத கொள்வனவு முன்பணமாக கணக்கிடப்பட்டுள்ளது.

இது தவிர, குறித்த ஆண்டினுள் இறக்குமதி செய்யப்பட்டிருந்த TLD பொருட்களின் 2020.12.31 ஆம் திகதிக்கான எஞ்சிய இருப்பு நிலுவை 7,770,997/- ரூபா நடைமுறை சொத்தின் கீழ் இறுதி இருப்பாக கணக்கிடப்பட்டுள்ளது.

09/07- 2020 ஆண்டிற்கு வருமான வரிக்கான பொறுப்பு ஏதும் எழவில்லை.

எதிர்காலத்தில் முடியுமான வரை நிதி ஒதுக்கீடுகளுக்கும் மற்றும் உண்மையான செலவுகளுக்கும் இடையே உள்ள வித்தியாசங்களை குறைக்குமாறு உரிய பிரிவுகளின் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஜ) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சபைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டம் (SOR) தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் வரை, உரிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதை தற்காலிகமாக நிறுத்துமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. 2021.12.31 ஆம் திகதி SOR திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டாலும் கூட, 2021/2022 ஆம் ஆண்டுகளில் நிலவிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு 3/2022, PED 3/2022 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தற்போதுள்ள பதவியணியின் மூலம் கடமைப் பணிகளை சமாளிக்குமாறும் நிலவுகின்ற குறித்த வெற்றிடங்களை இந்த ஆண்டில் நிரப்ப வேண்டாம் எனவும் DMS/1725/VOII.V ஆம் இலக்க 2022.06.21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் MSD திணைக்களம் அறிவித்துள்ளது.



.....
தலைவர்
இலங்கை அணு சக்தி சபை